2012, July 20 - Aug.02

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்







தமிழகத்தில் நடக்கும் அரசியல் வியாபாரம்

# மேனன் வந்தாரே வென்றாரா?

டெசோ மகாநாடு எதிர்கால அரசியல் அணி திரட்டலுக்கு அச்சாரம்



■ முஸ்லிம் விரோதத்தின் அரசியற் பின்னணி



■ அதிகரிக்கும் பாலியல் அட்டூழியங்கள்



■ பர்மாவின் இரு ஜனாதிபதிகள்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.........CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிமையான நேரங்களில் இணைந்திடும்...

GANESH

Since 1976

# GANESH TEXTILES (PVT) LTD

# 81, 83, Main Street, Colombo 11, Colombo 11, Sri Lanka.
Tel: 94 11 2325128, 2343078 Fax: 2458937
E-mail: info@ganeshtextiles.com www.ganeshtextiles.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருவாரங்களுக்கு ஒருமுறை

மலர் 01 இதழ் 02
**2012, ஜூலை 20 - ஆகஸ்ட் 02**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

**புகைப்படங்களும்**
**பக்க வடிவமைப்பும்**
எம்.ஸ்ரீதரகுமார்

**தகவல் தொழில்நுட்பம்**
எஸ்.டி.தயாளன்

**விளம்பரம்**
எஸ்.ரமேஸ்வரன் 0117322736
அ.பிரவீன் 0117767702
ஜெ.அர்ஜுன் 0117322777

**விநியோகம்**
கே.திலிப் குமார்

**உற்பத்தி பிரிவு**
எல்.ஏ.டி.ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
ஜே.சி.வெலியமுன 09

மேனன் வந்தாரே வென்றாரா?
என்.சத்தியமூர்த்தி 10

தமிழ் அரசியல் கைதிகளின்
அவலங்கள் 15
எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

டெசோ மகாநாடு 2012
எம்.காசிநாதன் 18

உயர்கல்வியின் நெருக்கடிகள்
சி.சிவசேகரம் 22

முஸ்லிம் விரோதத்தின்
அரசியல் பின்னணி 28
ராஜன் பிலிப்ஸ்

கேணல் ஆர்.ஹரிகரன்
பிரத்தியேக பேட்டி 32

தன்னடையாளமும்
தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பும் 40
சாந்தி சச்சிதானந்தம்

விபுலானந்த அடிகளார்
மீள் நோக்கும் மீள் வாசிப்பும் 43

பனுவல் பார்வை 45

பர்மாவின் இரு ஜனாதிபதிகள் 46


சிரிய நெருக்கடி 50

படுமோசம் 52

வாடகைத்தாய்மாரின் கண்ணீர்க்கதை 56
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

பிடிப்படுகிறது பிரபஞ்சம் 58
ஆர்.நரேந்திரன்


சமுகமாற்றத்தை
உள்வாங்காத சினிமா 61












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியரிடமிருந்து...

# கருணாநிதியின் ஈழப் போராட்டம்

இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைப்பது தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்த வேண்டுமென்ற கோரிக்கையுடன் கடந்த ஏப்ரிலில் தனது சாத்வீக ரீதியான "ஈழப் போராட்டத்தை" ஆரம்பித்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி இறுதியில் தற்போது ஆகஸ்ட் 12 ஆம் திகதி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தமிழ் ஈழ ஆதரவாளர்கள் (ரெசோ) மகாநாட்டில் "தமிழ் ஈழம் அமைவதை வலியுறுத்தி தீர்மானம் எதையும் நிறைவேற்றும் உத்தேசம் இல்லை" என்று பிரகடனம் செய்வதில் வந்து நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தற்போது எஞ்சியுள்ள தமிழர்களைப் பாதுகாப்பதும் அவர்களின் வாழ்வை வளப்படுத்துவதும் தான் இப்போது முக்கிய குறிக்கோள் என்றும் ரெசோ மகாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களிடம் இந்தக் குறிக்கோளை எய்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து கருத்துகளைக் கேட்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தனது வாழ்நாளில் நிறைவேறாமல் இது வரையில் இருக்கக்கூடிய ஒரு ஆசையென்றால் அது இலங்கையில் தனித் தமிழ் ஈழமே என்றும் அந்த இலட்சியத்தை அடைவதற்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயாராயிருப்பதாகவும் இந்த ஏப்ரிலுக்கும் ஜுலைக்கும் இடைப்பட்ட காலத்தில் கலைஞர் என்னென்னவெல்லாமோ வசனங்கள் எழுதினார், பேசினார். எல்லாவற்றையும் நாமெல்லோரும் மறந்து விட்டுத் தான் இப்போது கூறுவதை மாத்திரம் நாம் கேட்கவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார்.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்கள் எத்தகைய சூழ்நிலையில் எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளினால் எத்தகைய கோரிக்கைளை முன்வைக்கக்கூடியதாக இருக்கிறது என்பதையும் சரிவரப்புரிந்துகொள்ளாமலேயே கருணாநிதி தனித் தமிழ் ஈழம் சுலோகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அரசியல் நாடகமாடுகிறார் என்பதே நிதானமாக இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்கக்கூடியவர்களின் உறுதியான அபிப்பிராயமாக இருந்துவந்தது. இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் அணுகு முறைகளும் செயற்பாடுகளும் என்றென்றைக்குமே நேர்மையானவையாகவோ அல்லது நடைமுறைச் சாத்தியமான வையாகவோ இருந்ததில்லை.

தமிழகத்தின் பிரதான திராவிட இயக்கக் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்கிடையிலான வக்கிரத்தன மான கட்சி அரசியல் போட்டிகளுக்கும் தனிப்பட்ட குரோதங்களுக்கும் வடிகா லாக அமையக்கூடியதான வசதியான முறையிலேயே இதுகாலவரையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை அணுகி வந்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவியும் மாநிலத்தின் தற்போதைய முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா கலைஞர் கருணாநிதிக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்றால் அதனால் வரக்கூடிய விளைவுகளைப் பொருட்படுத்தாமல் எந்தப் பிரச்சி னையையும் பயன்படுத்தத் தவறுவதில்லை. அதேபோன்றே ஜெயலலிதாவுக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்றால் கருணாநிதியும் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் எந்தப் பிரச்சி னையையும் தவறவிடாமல் பயன்படுத்துவார். திராவிட இயக்க அரசியலின் துரதிர்ஷ்டவசமான இந்த எழுதப்படாத விதிக்கு இலங்கைத் தமிழர்களின் அவலங் களும் கூட விதிவிலக்கானதாக இருப்பதில்லை.

எதிரணியில் இருக்கும் போது இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் ஆவேசப் பேச்சு. பிறகு அதிகாரத்துக்கு வந்ததும் நய நாகரிகமான இராஜதந்திரப் பேச்சு. இதுவே கருணாநிதியும் ஜெயலலிதாவும் கடைப்பிடித்து வருகின்ற அரசியல் சந்தர்ப்பவாத தந்திரோபாயங்களாகும். இதையெல்லாம் பார்த்துப் பரவசப்பட வேண்டிய அளவுக்கு இலங்கைத் தமிழர்கள் அரசியல் ரீதியில் உள்நாட்டில் பலவீனப்பட்டு நிற்பதும் கடந்த கால அனுபவங்களில் இருந்து முறையான பாடங்களைப் பெற்றுக்கொண்டு சமகால நிலைவரங்கள் வேண்டி நிற்கின்றதற்கு ஏற்ப நடைமுறைச் சாத்தியமானதும் தூரநோக்குடையதுமான அணுகு முறைகளைக் கையாள மறுப்பதும் தான் பெரும் வேதனையாக இருக்கிறது.தமிழகத்தின் அரசியல் சக்திகள் எமது இன நெருக்கடியுடன் தொடர்புடைய விவகாரங்களில் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறை கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு நெருக்கடிகளை அதிகரிப்பனவாக அமையக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும். தமிழர்களின் அவலங்கள் நீ ங்க வேண்டுமென்பதற்காக இதய சுத்தியுடன் எந்தவிதமான சந்தர்ப்பவாத நோக்கமும் இன்றி குரல்கொடுத்து போராட்ட இயக்கங்களை முன்னெடுக்கி ன்ற சக்திகள் தமிழகத்தில் நிறையவே இருக்கின்றன. தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்கள் பால் கொண்டிருக்கின்ற கரிச னையையும் நாம் அறிவோம். ஆனால், சில தமிழக அரசியல் தலைவர்கள் தங்களுடைய அரசியல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி உணர்ச்சிகளைக் கிளறக் கூடியதாகவும் யதார்த்த நிலைமைகளுக்கு பொருத்த மில்லாதவகையிலும் முன் வைக்கக் கூடிய கோரிக்கைகள் இன்றைய சூழ்நிலையில் இலங்கை மண்ணில் நிலவும் உண்மைகளை உணர்ந்து கொண்டவையாக இல்லை.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சி னைக்கு உருப்படியான தீர்வு கிட்டவேண்டு மென்று கலைஞர் கருணாநிதியோ அல்லது ஜெயலலிதாவோ அல்லது எந்தவொரு தமிழக அரசியல் வாதியுமோ உண்மையிலேயே மானசீகமாக விரும்புவதாக இருந்தால் இலங்கையில் தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான அரசியல் பிரதிநிதிகள் எடுத்திருக்கி ன்ற நிலைப்பாடுகளுக்கு- முன்வைத்திருக்கின்ற கோரிக்கைகளுக்கு ஒருமைப் பாட்டை வெளிப்படுத்தி ஆதரவைத் தர வேண்டுமேயன்றி, தங்கள் மனம்போன போக்கில் தீவிர மான கோரிக்கைகளுக்காகக் குரலெழுப்பி நிலைவரங் களை மேலும் மோசமானதாக்கி விடக்கூடாது.

இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீது பொருத்தமில்லாத அரசியல் தீர்வொன்றைத் திணிக்க நினைப் பது எந்தளவுக்குத் தவறானதோ அதேபோன்றே அந்தத் தமிழர் களுக்காகக் குரல்கொடுப்ப தாகக் கூறிக்கொண்டு, உண்மை நிலைவரத்தைப் புரிந்து கொள்ளாமல் -அல்லது புரிந்துகொள்ள மறுத்து தருணப் பொருத்தமற்ற கோரிக்கை களைத் தமிழகத் தலைவர்களில் எவருமே முன்வைப்பதும் அதேயளவு தவறானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்.....

"பாலியல் வல்லுறவு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சகலரும் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்படுவர். அவர்கள் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார்கள். இத்தகைய குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு குற்றவாளியாகக் காணப்படக்கூடிய எந்தவொரு சுதந்திரக் கட்சி உறுப்பினரும் கட்சியைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்."



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

"அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற குற்றச் செயல்களில் பெரும்பாலானவற்றுக்கு அரசாங் கத்துக்கு நெருக்கமான அடிமட்ட அரசியல்வாதிகளே பொறுப்பு. தாங்கள் செய்கின்ற பாதகங்களுக்காக எந்த விதமான தண்டனையையும் அனுபவிக்க வேண்டிவராது என்றும் எவ்வாறென்றாலும் அரசாங்கம் தங்களைப் பாதுகாக்கும் என்று இந்த அரசியல்வாதிகள் நம்புகிறார்கள்."



சரத்பொன்சேகா
முன்னாள் இராணுவத் தளபதி

"பாடசாலைகளை இனரீதியாகப் பிரிக்கக் கூடாது. அவ்வாறு பிரித்தால் இனங்களிடையேயான பிரிவு அதிகரிக்கும். ஆரோக்கியமற்றதாக விளங்கும் தற்போதைய முறைமையை மாற்றி,சிங்கள மாணவர்கள்,முஸ்லிம் பாடசாலைகளுக்கும் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் பிரவேசிக்கக் கூடியதாகவும் முஸ்லிம் மாணவர்களும், தமிழ் மாணவர்களும், சிங்கள பாடச ாலைகளுக்கு பிரவேசிக்கக் கூடியதாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கும் மேலாக இனங்களுக்கிடையே கலப்புத் திருமணங்களைச் செய்தால் இன இணக்க நிலை ஏற்படுவது மாத்திரமல்ல,புத்திக் கூர்மையும் உடலாரோக்கியமுமுடைய பிள்ளைகளும் உருவாகுவர்."



மைத்திரிபால சிறிசேன
சுகாதார அமைச்சர்

"இனப்பிரச்சினை தொடர்பிலான தற்போதைய நிலைவரங்கள் குறித்து நான் மிகுந்த நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன். தமிழ் மக்க ளுக்கு இருக்கக்கூடிய மனக்குறைகளைப் பொறுத்தவரையில்,நான் மிகவும் யதார்த்த பூர்வமானதும் விஞ்ஞான பூர்வமானதுமான அணுகுமுறையைக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், 60 வருடங்களுக் கும் கூடுதலான காலமாக இந்தப் பிரச்சினையுடன் நாம் வாழ்ந்திருக்கிறோம்."



டியூ குணசேகர
சிரேஷ்ட அமைச்சர்

"இன்று பொலிஸார் மீது எவரும் செல்வாக்குச் செலுத்துவதில்லை. அமைச்சர்களிடமிருந்து பொலிஸார் உத்தரவுகளைப் பெறுவதில்லை. சட்டத்தை உறுதியாக நடைமுறைப்படுத்தி குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் மா அதிபருக்கு பரந்தளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று இழைக்கப் படுகின்ற குற்றச் செயல்களுக்கு காரணம் பொலிஸாரின் தவறு அல்ல. ஒரு தகப்பன் மகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினால், அல்லது ஒரு நபர் தனது பெறாமகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினால், ஏன் பொலிஸாரைக் குறைகூற வேண்டும்? ஆத்திர மிகுதியில் ஆட்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்தால் பொலிஸார் அதற்கு எவ்வாறு பொறுப்பாக முடியும்."



கோதாபய ராஜபக்ஷ
பாதுகாப்புச் செயலாளர்

"வடமாகாண சபைக்கு நடத்தப்படக்கூடிய முதல் தேர்தல் செம்மையானதாகவும் ஒளிவு மறைவு அற்றதாகவும் இருக்க வேண்டும். 2013 செப்டெம்பர் அளவில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலை வடக்கில் நடத்தக்கூடியதாக உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க முடியும். அதைவிடுத்து வெறுமனே தேர்தலை நடத்திவிட்டு வீணாக எம்மால் குறைகேட்க முடியாது."



பசில் ராஜபக்ஷ
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

"புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள சிலருக்கு அந்தந்த நாடுகளில் நிரந்தர வதிவிட வசதிக்கான அனுமதி போன்ற தனிப்பட்ட நலன்களுக்காக இலங்கையில் பிரச்சினைகள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுக்கு எப்போதும் இலங்கையில் பிரச்சினைகளிலேயே விருப்பம். தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் மக்களின் பாதுகாப்புக்காகத் தான் இருக்கிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இருப்பதைப்போன்று. இராணுவம் நிலத்தை அபகரிக்கவில்லை."



விநாயகமூர்த்தி முரளிதரன்
பிரதியமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனதில் உள்ளதைக் கூறுகிறேன், இலங்கையில் பதவியில் இருந்திருக்கக் கூடிய அரசாங் கங்களில் மிகவும் கூடுதலான அளவுக்கு சர்வாதிகாரத்தனம் வாய்ந்ததாக இருந்தது ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கமேயாகும். ஒரு பிக்கெட்டிங்கைக்கூட நாம் அனுமதிக்கப்படவில்லை. அவருடைய குண்டர்கள் எம்மை அடித்தார்கள், கத்தியால் குத்தினார்கள். ஆனால்,இப்போது மக்களினால் பிக்கெட்டிங்கைச் செய்ய, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட முடிகிறதல்லவா! உயர் பாதுகாப்பு வலயங்களுக்கும் பிரவேசிக்க முயற்சிக்காமல் இந்த ஆர்ப்பாட்டங்களைச் செய்ய முடியும்."



வாசுதேவ நாணயக்கார
அமைச்சர்

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பின்னால் நாட்டு மக்கள் அணிதிரண்டு நிற்கிறார்கள். ஜெனரல் சரத் பொன்சேகா பகற்கனவு காண்கிறார். இன்று பொன்சே கா ஒபாமாவினதும் சர் வதேச சமூகத்தின் சில பிரிவினரதும் பேச்சாளராக மாறிவிட்டார். ஒபாமா எதை விரும்புகிறாரோ அதை பொன்சேகா ஊடகங்களுக்கு கூறுகிறார். அதனால்தான் அரபு வசந்தம் போன்ற கிளர்ச்சி இலங்கையிலும் மூளவேண்டும் என்கிறார் அவர்."



பியசிறி விஜேநாயக்க
தேசிய சுதந்திர முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்திச்சரம்**



# 'பொதுத்தேர்தலுக்கு நேரம் வந்துவிட்டது'

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டு எதிரணி மாகாண சபைகளுக்கான தேர்தல்களை கட்டம் கட்டமாக நடத்துவதைவிடுத்து,பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் கூட்டு எதிரணி ஈடுபடுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறியிருக்கிறார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் உலக சந்தை விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்ற போதிலும், அரசாங்கம் உள்நாட்டில் அவற்றின் விலைகளைக் குறைக்கத் தவறிவிட்டது. தொழிலாளர் வர்க்கத்தவருக்கு உரித்தான ஊழியர் சேமலாப நிதியம்,ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றையும் அரசாங்கம் ஆபத்துக்குள்ளாக்கியிருக்கிறது. இது குறித்து பாராளுமன்றத்தில் கிளப்பப்படுகின்ற கேள்விகளுக்கும் அரசாங்கம் பதிலளிப்பதாக இல்லை.

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. பொதுத்தேர்தலின் மூலமாக ஆட்சியைக் கைப்பற்றுவதே எதிரணியின் நோக்கமென்று விக்ரமசிங்க கம்பஹாவில் கூட்டு எதிரணி நடத்திய வீதிப் போராட்டத்தில் உரையாற்றிய போது கூறியிருக்கிறார்.

# பாக். இடைக்கால பிரதமராக அஸ்மா?

பாகிஸ்தானில் அரசாங்கத்துக்கும் நீதித்துறைக் கும் இடையிலான மோதல் இன்னொரு பிரதமரும் பதவியிழக்க வேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது போல் தெரிகிறது.

ஜனாதிபதி அசீவ் அலி சர்தாரிக்கு எதிரான ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்குமாறு சுவிஸ் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகக் கேட்குமாறு பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைமையிலான அரசாங்கத்தின் (முன்னாள்) பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு உச்ச நீதிமன்றம் முதலில் உத்தரவிட்டது. ஆனால் சர்தாரி ஜனாதிபதியாக இருப்பதால் அவருக்கு எதிரான வழக்கை மீள ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தினால் வெளிநாடொன்றைக் கேட்க முடியாது என்று காரணம் கூறி உச்சநீதிமன்றத்தின் உத்தரவை கிலானி அலட்சியம் செய்ததையடுத்து அவர் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதையடுத்து அவர் பிரதமர் பதவியை இழக்க வேண்டியேற்பட்டது.

அதையடுத்து சில வாரங்களுக்கு முன்னர் தெரிவான புதிய பிரதமர் ராஜா பெர்வெஸ் அஷ்ராபிடமும் சர்தாரிக்கு எதிரான ஊழல் வழக்குகளை மீளவிசாரிக்குமாறு சுவிஸ் அரசாங்கத்தைக் கேட்குமாறு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் அவருக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருக்கிறது.

இக்காலக்கெடுவுக்குள் புதிய பிரதமர் உச்ச நீதிம ன்றத்தின் உத்தரவுப்படி நடந்து கொள்வாரா, இல்லையா என்பதே பாகிஸ்தான் அரசியல் வட்டாரங்களை ஆக்கிரமித்திருக்கும் முக்கியமான கேள்வி. அநேகமாக முன்னாள் பிரதமர் கிலானி



செய்ததைப் போன்றே அஷ்ரப்பும் நடந்து கொள்வதற்கான சாத்தியங்களே உள்ளன என்றே பேசப்படுகிறது. இதனால்,பிரதமர் உச்சநீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில்,அவரும் பதவியிழக்க வேண்டி வரும்.

அதனால், அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்னரான இடைப்பட்ட காலத்துக்கு இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கும் (நவாஸ்ஷெரீப்) இணக்கப்பாடொன்றை எட்டக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனைக்கு பாகிஸ்தான் மக்கள் கட்சிக்குள் பெருமளவு ஆதரவு இல்லையென்றே தெரிகிறது. எவ்வாறெனினும், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் அதன் பிரதமராக தெரிவு செய்யப்படக்கூடியவர்களாகப் பேசப்படுபவர்களில் பாகிஸ்தானின் முன்னணி சட்ட வல்லுநரும் மனித உரிமைகள் இயக்க ஆர்வலருமான அஸ்மா ஜஹாங்கீர் முக்கியமானவராக விளங்குகிறார்.

## புதிய கட்டிடத்துக்கு இந்தியப் பாராளுமன்றம்




இந்தியப் பாராளுமன்றம் தலைநகர் புதுடில்லியில் புதியதொரு இடத்துக்கு மாற்றப்படக்கூடும். பாராளுமன்றத்தை புதிய கட்டிடத்துக்கு மாற்றுவதற்கான யோசனைகள் பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

85 வருடங்கள் பழைமை வாய்ந்த தற்போதைய பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் பாதுகாப்புறுதி நிலை குறித்து ஆராய்ந்து வந்த சபாநாயகர் மீராகுமார் லோக்சபாவையும் ராஜ்ய சபாவையும் மாற்று கட்டிடத் தொகுதிக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்டக் குழுவொன்றை நியமிக்கவிருப்பதாக தெரிய வருவதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியாவின் சடை நாய்க்குட்டி



சர்வதேச பிரபல்யமிக்க அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் ஏளனமான விமர்சனங்களுக்கு இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் அண்மைக்காலமாக இலக்காகி வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அமெரிக்க 'ரைம்ஸ்' சஞ்சிகையின் ஆசியப் பதிப்பு அதன் அண்மைய இதழில் மன்மோகன் சிங்கை 'பெரிதாக எதையுமே சாதிக்காதவர்' (Underachiever) என்று வர்ணித்து அட்டைப்பட முக்கியத்துவம் கொடுத்து கட்டுரையொன்றை வெளியிட்டது. இந்தியப் பத்திரிகைகளும் பிரதான சஞ்சிகைகளும் இந்த 'ரைம்' கட்டுரை தொடர்பில் பெருவாரியான விமர்சனங்களைச் செய்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அடுத்து இங்கிலாந்தின் 'இன்டிபெண்டன்ற்' பத்திரிகை இணையத் தளப்பதிப்பில் வெளிநாட்டிலிருக்கும் மன்மோகன் சிங் பற்றிய கட்டுரைக்கு 'மன்மோகன் சிங்; இந்தியாவின் மீட்பரா அல்லது சோனியாவின் செல்லச் சடை நாய்க்குட்டியா?' என்று தலைப்பிட்டிருக்கிறது.

உண்மையான அரசியல் அதிகாரத்தைக் கொண்டிராததே மன்மோகன் சிங்கின் பெரிய பிரச்சினையாகும்.

காங்கிரஸ் தலைவியான சோனியா காந்தியின் சொற்படி நடக்கும் ஒரு பிரதமராகவே மன்மோகன் சிங்கை அரசியல் அவதானிகள் வர்ணிக்கின்றார்கள். தனது அமைச்சர்கள் செய்கின்ற ஊழல்களையும் முறைகேடுகளையும் கூட தட்டிக்கேட்க முடியாத ஒரு பலவீனமான பிரதமராகவே மன் மோகன் சிங்கை இந்திய ஊடகங்கள் வெளிப்படையாகவே கண்டித்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

# புதிய சர்வதேச விசாரணை



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் டாக் ஹம்மர்ஸ்க் ஜோல்ட் மரணமடைந்த மர்மத்துக்குரிய 1961 விமானவிபத்து தொடர்பில் கடந்த வருடம் புதிய சான்றுகள் வெளிக்கிளம்பியதைத் தொடர்ந்து தற்போது புதிய தொரு சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சுவீடிஷ் இராஜதந்திரியான ஹம்மர்ஸ்க் ஜோல்ட் மரணம் தொடர்பாக 2011 ஆகஸ்டில் லண்டன் கார்டியன் பத்திரிகை விசாரணையொன்றை மேற்கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து சுசான் வில்லியம்ஸின் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. கார்டியன் விசாரணையிலும் அந்த நூலிலும் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய விபரங்களின்படி செயலாளர் நாயகம் பயணம் செய்து கொண்டிருந்த விமானம் (தற்போதைய சாம்பியாவன) பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த வட ரொடீஷியாவின் மேலாகப் பறந்து கொண்டிருந்தபோது மேற்கத்தைய கூலிப்படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் இக்கொலையை காலனித்துவ ஆட்சியாளர்கள் மூடிமறைத்து விட்டதாகவும் நிரூபிக்கக்கூடிய சாட்சியங்கள் உள்ளதாகத் தெரியவருகிறது.

இதையடுத்து விசாரணை ஆணைக் குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது. இந்த ஆணைக்குழுவில் பிரிட்டிஷ் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சேர் ஸ்ரீபன் செட்லி, ஹேக்கில் உள்ள போர்க்குற்ற விசாரணை மன்றின் முன்னாள் பிரதம வழக்குத் தொடுநராக இருந்த தென்னாபிரிக்க நீதிபதி றிச்ச ர்ட் கிளட்ஸ் ரோன்,ஓய்வு பெற்ற சுவீடிஷ் தூதுவரான ஹான்ஸ் கோரெல்,டச்சு நீதிபதி வில்ஹெல்மினா தோமாசென் ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகள் சட்ட ரீதியான அந்தஸ்தைக் கொண்டவையாக இருக்கப் போவதில்லை. ஆனால், ஐ.நா.வுக்கு அறிக்கையாகக் கையளிக்கப் படும்.

முன்னர் பிரிட்டன் இந்த விமான விபத்து தொடர்பாக நடத்திய விசாரணையொன்று விமானியின் தவறே விபத்துக்குக் காரணம் என்று முடிவுக்கு வந்திருந்தது. ஆனால், பிறகு நடத்தப்பட்ட ஐ.நா. விசாரணையொன்று பகிரங்கத் தீர்ப்பையே வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

# கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் சிரிய நெருக்கடி

சிரியாவில் தீவிரமடைந்திருக்கும் வன்முறைகள் தொடர்பில் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும், நிலைவரம் கட்டுப்பாட்டை மீறிச் சென்று கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கின்றன.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் பிலிப் ஹமொண்டு டன் கூட்டமாக நடத்திய பத்திரிகையாளர் மகாநாடொன்றில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா 'சிரியாவில் நிகழுகின்ற மோதல்கள் கட்டுப்பாட்டை மீறிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதையே பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. இந்த நிலைவரங்கள் குறித்து நாம் பெரும் கவலையடைகின்றோம். அமைதியான அதிகார மாற்றத்துக்கு வழி செய்யுமுகமாக சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அசாத் பதவியில் இருந்து உடனடியாக இறங்க வேண்டும். குடிமக்களுக்கு எதிரான அட்டூழியங்கள் இரத்தத்தை உறைய வைக்கின்றன' என்று குறிப்பிட்டிருந்தார்.

கடந்த 18 ஆம் திகதி டமாஸ்களில் உயர்மட்டப் பாதுகாப்புக் கூட்டமொன்றின் போது இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பொன்றில் அசாத்தின் மைத்துனர் உட்பட அரசின் மூன்று உயர்மட்ட அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள்.

16 மாதகால சிரிய வன்முறைகளில் ஆளும் குடும்பத்துக்கு மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு தாக்குதலாக இக் குண்டுவெடிப்பு அமைந்திருக்கிறது.

அசாத் அரசாங்கத்தின் கொத்தளங்களுக்குள் கொத்தளமாக விளங்கிய தேசிய பாதுகாப்புத் தலைமையலுவலகத்திற்குள் இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்தினர் பக்கம்

# வெள்ளை வான் கடத்தல்கள் மௌனம் மறுமொழியாகுமா?



ஜே.சி.வெலியமுன

ஆட்கள் காணாமல் போவதும் கடத்தப்படுவதும் ஒன்றும் புதியவையல்ல; ஆனால், இன நெருக் கடித் தீவிரத்துடன் அது வேறுபட்ட பரிமாணமொன்றை எடுத்து விட்டது. அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் துணை இராணுவக் குழுக்கள் சகலருமே வடக்கிலும், கிழக்கிலும் இடம் பெற்ற ஆட்கடத்தல்களுக்குப் பொறுப்பாயிருந்திருக்கின்றன. 'வெள்ளை வான் கடத்தல்கள்' என்று பொதுவில் நாம் அழைக்கின்ற-குடிமக்கள் இராணுவத்தினரால் கடத்தப்படுகின்ற சம்பவம் பற்றியே நான் பிரதானமாக கவனத்தைச் செலுத்துகிறேன். என்னைப் பொறுத்தவரை வெள்ளை வான் கடத்தல்கள் தவறான ஆட்சிமுறைச்சுற்றுச் சூழலொன்றிலேயே நீடித்து நிலைக்க முடியும். அந்தப் பின்னணியில் நோக்கும் போது வெள்ளை வான் நடவடிக்கைகள் இலங்கையில் முடிவின்றி தொடருவதற்குச் சாத்தியமான நான்கு காரணங்களை விளக்க விரும்புகிறேன்.

**முதலாவது; சட்டத்தை அமுலாக்கும் பிரிவினரிடம் பொறுப்புடைமை இல்லாமை** -பாதுகாப்பு அமைச்சு உட்பட சகல அரசாங்க நிறுவனங்களுமே பொதுமக்களின் நிதியிலேயே இயக்கப்படுகின்றன. அதனால் அவை பொது மக்களுக்கு பதில் கூற வேண்டிய கடப்பாட்டைக்கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அந்த நிறுவனங்கள் சட்டத்தினால் மாத்திரம் வழிநடத்தப்படுபவையாக இருக்க வேண்டும். அந்தரங்கமானதும் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டதுமான சக்திகளினதும் பக்கச் சார்பான கட்சி அரசியல் கொள்கைகளினதும் வழிநடத்துதலின் கீழ் அந்த நிறுவனங்கள் செயற்படக்கூடாது. எந்தவொரு விசாரணையுமே சூழ்ச்சித்தனமான முறையில் கையாளப்பட்டு உண்மைகள் மறைக்கப்படுகின்றன என்று நாம் எல்லோரும் அறிவோம். பொலிஸும் இராணுவமும் தனியொரு அமைச்சரின் (ஜனாதிபதி) கீழும் தனியொரு செயலாளரின் (பாதுகாப்பு) கீழும் இயங்குவது நிலைவரங்களை மேலும் மோசமாக்குகிறது. இதனால் பொலிஸ் செயற்பாட்டுக் கோட்பாடு கூட இராணுவமயமாக்கப்பட்டுவிட்டது.

**இரண்டாவது; கண்காணிப்பின்மை**-பாராளுமன்றம் உட்பட எந்தவொரு சட்ட பூர்வ அதிகார நிறுவனமும் நிறைவேற்று அதிகாரபீடத்தைக் கண்காணிப்பதற்கான அல்லது மேற்பார்வை செய்வதற்கான ஆற்றலைக் கொண்டவையாக இல்லை. அநேகமாக, சகல ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களும் அரசியல் நியமனங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இந்த நியமனங்களைப் பெறுபவர்கள் அரசாங்கம் பிரச்சினையின்றி செயற்படுவதையே தங்களது அக்கறையாகக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இதன் விளைவாகவே சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களின் அல்லது அதிகாரிகளின் எந்தவொரு சட்டவிரோதச் செயற்பாடுகள் மூடி மறைக்கப்படக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன.

**மூன்றாவது; அரசாங்க நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையின்மை.**-தகவலைப் பெறுவதற்கான சுதந்திரத்தை இலங்கை அங்கீகரிக்கவில்லை. உண்மையில் அநேகமாக சகல விவகாரங்களுமே அந்தரங்கமாக வைக்கப்படுவதே வழமையாக இருக்கிறது. இராணுவம் அல்லது பொலிஸ் உட்பட சகல அரசாங்க அமைப்புகளும் செய்கின்ற அல்லது செய்யாமல் விடுகின்ற விடயங்கள் குறித்து கேள்வியெழுப்புவதற்கோ விசாரிப்பதற்கோ பயனுறுதியுடைய வழிமுறை கிடை யாது.

**நான்காவது; பலவீனமான எதிரணியும் சிவில் சமூகத்தின் அக்கறையின்மையும்;**-

ஆட்கள் காணாமல் போகின்ற சம்பவங்களுக்கு எதிராக இன்று உருப்படியான எந்தவொரு எதிர்ப்பும் காட்டப்படுவதாக இல்லை. இந்த இயலாமைக்கான காரணங்களில் ஒன்று பல வருடங்களாக தமிழர்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் தென் பகுதி சமூகம் காத்த மௌனமாகும். வடக்கிலும் கிழக்கிலும் உண்மையில் நடைபெற்றுக் கொண்டிருந்தவை குறித்து சிங்களச் சமூகம் இருளிலேயே வைக்கப்பட்டிருந்தது. உண்மை நிலைவரங்கள் தெரியப்படுத்தப்படவில்லை என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. வெறுமனே அரசாங்கத்தினதும் அதற்குச் சார்பான சக்திகளினதும் பிரசாரங்களை மாத்திரமே சிங்கள மக்களினால் கேட்கவும் காணவும் முடிந்தது. வடக்கு, கிழக்கிலிருந்து தெற்கிற்கு உண்மையான தகவல் அலை இன்னமும் கூட தடுக்கப்பட்டதாகவே இருக்கிறது. சிவில் சமூகம் துரோகிகள் என்றும் தேச விரோதி கள் என்றும் நாமகருணம் சூட்டப்பட்டிருக்கிறது. சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் துணையுடனான தேசியவாத நிகழ்ச்சி நிரலினால் குந்தகத்துக்குள்ளாக்கப்பட்டன. சனத்தொகை இன ரீதியிலும் மத ரீதியிலும் துருவ மயமாக்கப்பட்டிருக்கிறது. அதனால் வெள்ளை வான்களுக்கு எதிராக வலுவாகக் குரல் எழுப்புவதற்கான வாய்ப்பிருக்கவில்லை.

**மௌனம் மறுமொழியாகுமா?**

ஆளுகையென்பது நடைமுறையில் இல்லாத ஒன்றாகப் போய்விட்டது. அடிப்படைச் சுதந்திரங்களைப் பற்றி பொது மக்களு க்கு அக்கறையில்லாத நிலைமை காணப்படுகிறது. வெள்ளை வான்கள் 'ஒடுக்கப்பட்ட' சூழ்நிலையொன்றைத் தோற்றுவித்திருக்கிறது. அதில் பொது மக்கள் வெளிப்படையாகப் பேசுவதற்கு முன்வருவதில்லை. காரணம் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமேயாகும். மௌனம் ஒடுக்குமுறையாளரின் ஒரு தெளிவான இலக்காக இருக்கிறது. இது எனக்கு தென்னாபிரிக்காவின் இன ஒடுக்கல் போராளித் தலைவர்களில் ஒருவரான ஸ்பீவ் பிகோவின் வார்த்தைகளையே நினைவுக்குக் கொண்டுவருகிறது. -**ஒடுக்குமுறையாளனின் கைகளில் இருக்கும் மிகவும் வலுவான ஆயுதம் ஒடுக்கப்படுபவனின் மனமேயாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவ் சங்கர் மேனன் தமிழ் அரசியல் தலைவர்களில் சம்பந்தனை மட்டுமே சந்தித்தது தமிழ் சமுதாயத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் ஏன் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் ஒரு சமிக்ஞை

இனப் போர் முடிந்து மூன்று ஆண்டுகள் முழுவதுமாக ஓடிவிட்ட கால கட்டத்தில், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஒரு கட்டமாக, இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கடந்த மாதம் ஒரு நாள் விஜயமாக கொழும்பிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,அரசில் முக்கிய பொறுப்புகளில் உள்ள அவரது சகோதரர்களான பொருளாதார வளர்ச்சி அமைச்சர் பசில் மற்றும் பாதுகாப்புத் துறைச் செயலர் கோதாபய ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். தமிழ் அரசியல் தலைவர்களில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அதன் தலைவரான சம்பந்தனுடன் மட்டுமே அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். முடிவில் இந்தியப் பத்திரிகையாளர்களை மட்டுமே சந்தித்த மேனன் தனது சந்திப்புகள் குறித்து ஒரு பத்திரிகைச் செய்தியையும் தனது பெயரிலேயே வெளியிட்டார். தற்போதைய காலகட்டத்தில் மேனனின் இந்த விஜயம் இனப்பிரச்சினைத் தீர்வு, தமிழர்களின்

# மேனன் வந்தாரே வென்றாரா?



என்.சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் விவகாரம், சர்வதேச அரங்கில் இனப்பிரச்சினை எடுத்து வரும் வடிவம் மற்றும் இரு நாட்டு உறவுகளில் இந்தப் பிரச்சினைகளின் தாக்கம் என்று பல்வேறு முகங்களை எடுத்திருந்தது. இவற்றில் ஒரு பகுதியாகவே, பசில் ராஜபக்ஷவுடனான மேனனின் சந்திப்பும் பேச்சுவார்த்தையும் அமைந்திருந்தது. அப்போது அவர்கள்,போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக இந்திய அரசு கட்டிக்கொடுக்கும் 50,000 வீட்டுத் திட்டம் செயலாக்கப்படுவதில் உள்ள பிரச்சினைகள் அல்லது தடங்கல்கள் உட்பட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அது போன்றே, கோதாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பில் இரு நாட்டு பாதுகாப்பு உறவுகள் குறித்து மேனன் பேசினார்.அதிலும்,குறிப்பாக இரு நாடுகளுக்கும் பொதுவான கடல் பகுதிகளுக்குள் ஊடுருவி வரும் சோமாலிய கடல் கொள்ளையரை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்ததாக மேனன் தனது பத்திரிகைச் செய்தியில் கூறியிருந்தார்.

மேனனின் கொழும்புப் பயணம், இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் மக்கள் உரிமை கவுன்சில் கூட்டத்தில் இந்தியா வாக்களித்ததற்குப் பின்னர் இரு நாடுகளிடையேயான முதல் உயர்கட்ட விஜயம். அதேசமயம், அது ஜெனீவா வாக்களிப்பிற்குப் பின்னர் இரு நாட்டிற்கும் இடையேயான முதல் உச்ச கட்ட பேச்சுவார்த்தை அல்ல. மேனனின் விஜயத்திற்கு ஒரு வாரம் முன்பு, பிரேஸில் நாட்டில், ரியோ ஜெனிரோ நகரில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் அதிகாரிகள் புடைசூழப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதிலும் குறிப்பாக,அதிகாரிகளை உள்ளடக்கிய சந்திப்பு நடைபெறுவதற்கு முன்னர் இரு தலைவர்களும் தனியாகச் சந்தித்து உரையாடினார்கள். அந்தச் சந்திப்பு வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் நடைபெற்றதாக செய்திகள் தெரிவித்தன. அப்போதும் இரு தலைவர்களும் இனப்பிரச்சினை உட்பட்ட அனைத்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்தும் பேசியதாகவே கருத இடமிருக்கிறது.

இந்தப் பின்னணியில்,மேனனின் கொழும்பு விஜயம் இரு நாட்டுத் தலைவர்களும் தனியாகவும் அதிகாரிகள் பங்களிப்போடும் ரியோவில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகவே கருதப்படுகிறது. அதிலும் குறிப்பாக, ஜெனீவா வாக்களிப்பிற்குப் பின்னர், இந்தியா குறித்த இலங்கை அரசின் முக்கிய தலைவர்கள் அனைவரது கருத்தையும் அறியும் முகமாகவும் அந்தப் பயணம் அமைந்தது. அந்த அரசு தலைவர்கள் மூவரும் சகோதரர்கள் என்றாலும், அவர்களது கருத்துக்களில் சில,பல வேறுபாடுகள் உள்ளதாகவே கருதப்படுகிறது. அது போன்றே, ஜெனீவா வாக்களிப்புத் தோல்விக்குப் பின்னரும் இலங்கை அரசின் தலைமையில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதையும், அதனால் இந்திய பாதுகாப்புத் துறை ஆலோசகர் அரசு தரப்பில் ராஜபக்ஷ சகோதரர்களை மட்டுமே காண வேண்டியிருந்தது என்பதும் கண்கூடு. அதே சமயம்,சிவ்சங்கர் மேனன் தமிழ் அரசியல் தலைவர்களில் சம்பந்தனை மட்டுமே சந்தித்தது, தமிழ்ச் சமுதாயத்திற்கும்,கூட்டமைப்பின் தலைமைக்கும், ஏன் புலம்பெயர் தமிழர்களுக்கும் ஒரு சமிக்ஞை. அதாவது, தமிழர்களது உரிமை குறித்த ஆதரவில் இந்தியாவின் நிலைப்பாடு எந்தக் கொள்கை முறையை ஆதரிக்கும் என்பது குறித்த செய்தியும் மேனனின் விஜயத்தில் உள்ளடங்கியிருந்தது. ரியோவில் நடைபெற்ற இரு நாட்டுத் தலைவர்களிடையேயான சந்திப்பு ஆகட்டும், அதனைத் தொடர்ந்த மேனனின் இலங்கை விஜயம் ஆகட்டும். அடுத்து வரும் ஜெனீவா மக்கள் உரிமைக் கவுன்சிலின் செயல்பாடு குறித்த இந்தியாவின் கவலைகளை உள்ளடக்கியதாக இருந்தது.

> இனப்பிரச்சினையோடு ஒட்டிய ஜெனீவா முயற்சிகள் மீண்டும் மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்பாக வரவேண்டிய சூழ்நிலை. அதில் அடுத்த அடுத்த கட்டங்களில் இந்தியா எடுக்க வேண்டிய, எடுக்கவுள்ள நிலைப்பாடு அவ்வாறாக இருநாட்டு உறவுகளுக்கும் ஒரு பரீட்சை. இதனை இரு நாடுகளும் உணர்ந்துள்ளதன் வெளிப்பாடே மீண்டும் தொடங்கியுள்ள உயர்மட்ட கருத்துப் பரிமாற்றங்கள்

அடுத்து வரும் வாரங்களில், இலங்கையில் மனித உரிமை நிலை குறித்த சுழற்சி முறையிலான விவாதம் நடைபெற உள்ளது. இது கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற வாக்கெடுப்பிற்கும் அப்பால் செல்லும். அதாவது, வாக்கெடுப்பு இனப்பிரச்சினையோடு தொடர்புடைய விடயம். ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சுழற்சிமுறை விவாதம், இன அடிப்படையில் மட்டும் அல்லாது மனித உரிமை (மீறல்கள்) குறித்த அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் சர்ச்சை செய்யும். இதில், பத்திரிகைச் சுதந்திரம், தொழிலாளர், பெண்கள், குழந்தைகள் உரிமைகள் மற்றும் உரிமை மீறல்கள், மற்றும் சிறைக் கைதிகள் கலவரம் போன்ற விவரங்கள் வழக்கமாக விவாதிக்கப்படும். இந்தமுறை இலங்கை குறித்து மட்டுமல்லாது,இந்தியா குறித்த சுழற்சிமுறை விவாதமும் மக்கள் உரிமைக் கவுன்சிலில் இடம்பெறும். இதில் விவாத விடயங்களை முன்னெடுத்து வைக்க மூன்று நாடுகளை கவுன்சிலே முடிவு செய்யும். இந்த முறை இலங்கை குறித்த விவாதத்தை முன்வைக்க, ஸ்பெயின், பெனின் ஆகிய இரு நாடுகளுடனும் சேர்ந்து இந்தியாவின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்தியா குறித்த விவாதத்தை முன்னெடுத்து வைக்கும் மூன்று நாடுகளில் இலங்கை ஒன்றல்ல. அத்தகைய முறையில் விவாதத்தை முன்வைக்கும் நாடுகளின் பெயர்கள் முடிவு செய்யப்படுவதும் இல்லை. அந்த விதத்தில்,இது இந்தியாவிற்கு ஒரு சோதனை என்று கூடக் கூறுவோர் உள்ளனர். அதே காரணத்திற்காக, இது இலங்கை அரசுக்கும் ஒரு சோதனை. அதனோடு சேர்ந்து இனப் பிரச்சினையோடு ஒட்டிய ஜெனீவா முயற்சிகள் மீண்டும் மீண்டும் ஐ.நா.வின் மனித உரிமைக் கவுன்சில் முன்பாக வரவேண்டியுள்ள சூழ்நிலை, அதில் அடுத்தடுத்த கட்டங்களில் இந்தியா எடுக்க வேண்டிய மற்றும் எடுக்கவுள்ள நிலைப்பாடு. அவ்வாறாக, இரு நாட்டு உறவுகளுக்கும் வைக்கப்படும் ஒரு பரீட்சை. இதனை இரு நாடுகளும் உணர்ந்துள்ளதன் வெளிப்பாடே உயர் மட்டத்தில் மீண்டும் தொடங்கியுள்ள தற்போதைய கருத்துப் பரிமாற்றங்கள் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

### எச்சரிக்கை குறையா நம்பிக்கை

இருநாட்டு உறவுகள் என்ற கோர்வையில் இனப்பிரச்சினை ஒரு கண்ணி மட்டும் தான். ஆனால்,கடந்த சில தசாப்தங்களாக முக்கியமான ஒரு கண்ணியும் கூட. அதே சமயம்,இந்தியா போன்று, நிலப்பரப்பிலும், பொருளாதாரம் மற்றும் இராணுவப் பலம் ஆகியவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரிய நாட்டின் கொள்கைகள் ஒரேயொரு பிரச்சினையோடு மட்டுமே சம்பந்தப்பட்டதாக இருக்க முடியாது. குறிப்பாக தனது அண்டை நாடுகளுடனான உறவுகளில் இந்தியா போன்ற ஒரு நாடு ஒருமுகப்போக்கைக் கடைப்பிடிக்க முடியாது. ஏன், "எதிரி" என்று கருதப்படும் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இந்தியா பன்முக உறவுகளையே வளர்த்து வருகிறது. இது ''பனிப்போர்'' முடிந்த காலகட்டத்தில் இருநாட்டு உறவுக ளிடையே சமாதானம் முழுமையாக அடையவில்லை என்றாலும், சீனாவையும், பாகிஸ்தானையும், இந்தியா சந்தேகக் கண்களுடன் மட்டுமே நோக்கும் என்ற நிலை இப்போது இல்லை. மாறாக,அந்த இரு நாடுகளுடனான உறவில் கூட இந்தியா ''எச்சரிக்கை குறையாத நம்பிக்கையுடன்'' (cautious optimism) பயணித்து வருகி றது.

இந்தியாவின் இலங்கை சார்ந்த உறவு க்கும் இது பொருந்தும். அதில் ஒரேயொரு வித்தியாசம். சீனா,பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் போல் அல்லாது,இலங்கை உட்பட்ட பிற அண்டை நாடுகளுடனான உறவில் இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், பொதுவாகவே நம்பிக்கை அதிகமாகவும், எச்சரிக்கை உணர்வுப் பிரச்சினை சம்பந்தப் பட்டு மட்டுமே இருந்து வந்துள்ளது. அது இந்தியாவின் தன்னம்பிக்கை குறித்த விடயம் மட்டுமல்ல இலங்கை,இந்திய உறவில் இழையோடும் சரித்திரம், கலாசா ரம்,பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த உள்ளுணர்வுகள் குறித்த விவகா ரமும் கூட. இதில் இந்தியாவின் தன்னம்பிக் கைக்கு இலங்கையில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு தரப்பினர் பல்வேறு அர்த்தங்கள் கற்பித்துள்ளனர்.

தற்போதைய காலகட்டத்தில், அதன் பொருள் இலங்கையில் உள்ள ஆட்சி யாளர்களுக்கும், அரசியலுக்கும் அப்பாற் பட்டுச் செயல்படும் அரசாங்கம் என்ற நிலையான அமைப்பிற்கும் புரியத் தொட ங்கியுள்ளது. அதுபோன்றே, கடந்த தச ாப்தங்களைப் போன்று அல்லாது, இந்திய அரசு அமைப்பிற்கும், இனப்பிரச்சினை உட்பட்ட பல்வேறு இரு நாட்டுப் பிரச்சி னைகளிலும் உள்ள பல்வேறு அலகுகளும் நிலைப்பாடுகளும் தெளிவாகத் தொடங்கி யுள்ளன. இனப்போரின் நான்காவது மற்றும் கடைசிக் காலமான 2006 09 பகுதியில் இந்திய அரசின் நிலைப்பாட்டிற்கு, ''ராஜீவ் காந்தி கொலை'' என்ற ''துன்பியல் சம்பவம்'' காரணம் அல்ல. இனப்பிரச்சி னை மற்றும் போர் குறித்த இந்தியாவின் புரிதலே அதற்கு முக்கிய காரணமாகும்.

இலங்கைப் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் சீனாவின் அதிரடிப் பங்களிப்பு இந்திய அரசுக்கு கவலை அளிக்கும் விடயம் தான், என் றாலும் அதற்காக இந்தியா உறக்கம் களையப்போவதில்லை. ''பனிப் போரு' க்குப் பின்னாலான காலகட்டத்தில் ரஷ்யா, அமெரிக்கா, ஏன் சீனா என்ற பல்வேறு வலிமைமிக்க நாடுகளுடன் இந்தியா சுமுகமான உறவை ஒரே சமயத்தில் வளர்த்து வருகிறது. இந்தியாவில் உள்ள அறிவுஜீவிகள் எப்படிக் கருதினாலும், கருத்துச் சொன்னாலும் அதுபோன்ற ஒரு உரிமையும் கடமையும் கூட தனது நாட்டின் நலன் விரும்பும் இலங்கை அரசு தலைமைக்கு உண்டு என்பதனை இந்திய அரசு வட்டாரங்கள் கருதுகின்றன என்றே நினைக்கத் தோன்றுகிறது. அதேசமயம் சீனாவுடனான உறவை ''பூச்சாண்டி காட்டி'' இந்தியாவை பயமுறுத்தி தான் நினைத்த காரியங்களை சாதித்துக் கொள்ளலாம் என்ற கருத்தையே இந்தியா ஏற்றுக் கொள் ளவில்லை. அது இலங்கை அரசிற்கு நன் றாகப் புரிந்துள்ளது. இலங்கை அரசின் நிலைப்பாட்டையும் இந்தியா உணர்ந்தே யுள்ளது. இடைப்பட்ட காலத்தில்,இது குறித்த ''நினைவுறுத்தல்கள்'' அவ்வப்போது இரு சாராருக்கும் தேவைப்படுகிறது. தனிநாடுக் கோரிக்கையும், தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடும் கொழும்புச்சந்திப்புகளுக்குப் பின்னர் மேனன் வெளியிட்ட கருத்துக்கள் முக்கியம் வாய்ந்தவை.

ஜெனீவா வாக்களிப்பிற்குப் பின்னர் தமிழ் நாட்டிலும் புலம்பெயர்ந்த தமிழர் களிடையேயும் தனி நாடு குறித்த சில கருத்துகள் தவறாகப் பரவலாகி வருகின் றன. முக்கியமாக இலங்கையிலேயே தொடர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் எண்ணக் கருத்துக்களை முன்னிறுத்தி அரசியலில் ஈடுபட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தனி நாட்டிற்கு எதிரான அரசியல் திட்டங்களைத் தொடர்ந்து முன்னிறுத்தி வரும் போது, இது போன்ற கருத்துகள் தமிழ்ச் சமூகத்தையும் அவர்க ளது கூற்றில் நம்பிக்கை வைக்க முயலும் சர்வதேச சமூகத்திற்கும் குழப்பம் அளித்து வருகிறது. அந்த விதத்தில்,ஐக்கிய இலங் கைக்குள் அனைத்துச் சமூகத்தின ரும் தாங்களும் அதில் ஒரு பகுதியே என்று நம்பிக்கை பெறும் விதமாக இனப்பிரச்சி னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று மேனன் கூறியுள்ளார். இது தனி நாடுக் கோரிக்கை விவகாரத்தில் இந்தியா குறித்து



**களநிலையையும் அடிப்படைக் கோரிக்கைகளையும் வைத்து நோக்கும் போது, இந்தியா தொடர்ந்து தமிழர் ஆதரவு நிலைப்பாடே எடுத்து வருகிறது. என்றாலும் அவர்களது கோரிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் இலங்கை அரசு மற்றும் சிங்கள மக்கள் மற்றும் அரசியல் தலைமைகளின் கருத்துகளையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பதாகவே தோன்றுகின்றது**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மறுபடியும் முளைவிடத் தொடங்கிவிடும் சந்தேகங்களை தீர்த்து வைக்கும் முகமாக கருத்துத் தெரிவித்துள்ளார். அதேசமயம், அவரது கூற்றின் படி, தமிழ்ச் சமுதாயம் மற்றும் அரசியல் கட்சிகளிடையே கூட்டமைப்புத் தலைமையின் தற்போதைய நிலைப்பாட்டை இந்தியா வரவேற்பதாக பொருள்கொள்ள வேண்டும்.

இதற்கும் அப்பால் சென்று,மேனனின் பத்திரிகைச் செய்தி, இனப் பிரச்சினை தொடர்பாக மிகச்சிறிய அளவில் மாறி வரும் இந்தியாவின் நிலைப்பட்டை கோடிட்டுக் காட்டியுள்ளது. இனப்பிரச்சினை தொடங்கிய காலந்தொட்டு, சிறுபான்மையினரின் நியாயமான உரிமைகளும் அது குறித்த கோரிக்கைகளுக்கும் இந்தியா ஆதரவு



தெரிவித்து வந்தது. ஆனால், இந்திய அமைதிப்படை விலகல் மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை ஆகிய நிகழ்வுகளுக்குப் பின்னர் இந்தியா இலங்கை விவகாரத்தில் அதிக ஆர்வம் காட்டாதிருந்தது. அப்போதைய காலகட்டத்தில் தான், ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் எடுத்தன. "பனிப்போர்" முடிவடைந்திருந்த காலகட்டத்தில் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை அண்மைப் பிரதேசங்களையும் அடுத்துள்ள இந்து மகா கடல் பகுதிக்கும் அப்பால் சென்று, அட்லாண்டிக் மற்றும் பசுபிக் பெருங்கடல் பகுதிகளில் மையம் கொள்ளத் தொடங்கியது.

இந்தியாவின் இந்தக் கொள்கை மாற்றம் அதிக நாள் நீடிக்கவில்லை. வெளியுறவுக் கொள்கையில் அகலக்கால் வைக்கிறோமோ என்று புது டெல்லி எண்ணத் தொடங்கிய காலகட்டமும் இலங்கையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்து,இனப்போர் மீண்டும் தொடங்கும் நிலைமையும் ஒருசேர அமைந்தன. அதற்கிடையில் இலங்கை குறித்த இந்தியாவின் கொள்கை குறித்த சிந்தனையாளர்கள், பிரபாகரன் என்ற தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளினால் அரங்கேறும் நிகழ்வுகளின் காரணமாக இனப்பிரச்சினையில் இந்தியா நாட்டம் இல்லாமல் இருப்பதாகக் கருதவும் தொடங்கினர். இந்தப் பின்னணியில் மறு அவதாரம் எடுத்த இனப்பிரச்சினை குறித்த இந்தியாவின் கொள்கை இலங்கையில் உள்ள சிறுபான்மையினரை மட்டும் மனதில் கொள்ளாமல், நாட்டின் அனைத்துப் தரப்பினரின் அபிலாஷைகளுக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற வகையில் உருவம் பெற்றது. தற்போது, ஜெனீவா வாக்களிப்பிற்கு பின் சிவ்சங்கர் மேனனால் தெளிவுபடுத்தப்பட்டுள்ள இந்தியக் கொள்கை இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் தாங்கள் நாட்டின் ஒரு பகுதி என்ற எண்ணம் தோன்றும் வண்ணம் அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்ற வகையில் உருவெடுத்து வருகிறது. இதுவே முன்னதாக ரியோ நகரில் ஜனாதிபதி மஹிந்தவிடம், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்த கருத்தின் விரிவாக்கம். இலங்கையில் தமிழ் மக்கள் (சிங்களவர்களுக்கு) சமமான குடியுரிமை பெற்றவர்களாக வாழவேண்டும் என்பது இந்தியாவின் எதிர்பார்ப்பு என்று அதிபர் மஹிந்தவிடம் பிரதமர் சிங் கூறியதாக இந்திய வெளியுறவுத்துறை செயலர் ரஞ்சன் மத்தாய் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். ஒரு வாரத்திற்குப் பின்னர் கொழும்பில் கருத்து தெரிவித்த சிவ்சங்கர் மேனன்,தமிழர்கள் என்றோ, சிறு பான்மையினர் என்றோ என்று இனம் பிரித்துப் பார்க்காமல் அனைத்து மக்களும் தாங்கள் சம உரிமை பெற்றவர்களாக கருதும் நிலை உருவாக வேண்டும் என்று கூறினார்.

களநிலையையும் அடிப்படைக் கோரிக்கைகளையும் வைத்து நோக்கும் போது, இந்தியா தொடர்ந்து தமிழர் ஆதரவு நிலைப்பாடே எடுத்து வருகிறது. என்றாலும் அவர்களது கோரிக்கை களும் எதிர்பார்ப்பு களும் இலங்கை அரசு மற்றும் சிங்கள மக்கள் மற்றும் அரசியல் தலைமைகளின் கருத்துகளையும்,உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பதாகவே தோன்றுகின்றது.

அவ்வாறு வரும்போது தனி நாடுக் கோட்பாடு அடிபட்டுப்போய்விடும். அது போன்றே, ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் அபிலாஷைகளும் மேன்மையும் மதிக்கப்படும் விதமான ஓர் அரசியல் தீர்வு உருவாக வேண்டும் என்பதும் இந்தியாவின் நிலைப்பாடு என்று கொள்ளலாம். அந்த வகையில் மேனனின் இந்த விஜயம், தனி நாடு கேட்கும் அனைத்துத் தரப்பினருக்கும் இந்தியாவின் மத்திய அரசு அளிக்கும் செய்தி. இதில், இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் அடங்கும். தனி நாடு குறித்து "டெசோ" மாநாடு நடத்தப் போவதாக அறிவித்த தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி,மத்திய அரசில் அங்கம் வகித்தாலும் மேனனின் இந்த அறிவிப்பை எதிர்க்கவில்லை. மற்றப்படி, தி.மு.க. அ.தி.மு.க ஆகிய இரண்டு பெரிய கட்சிகளில் யார் தமிழ் நாட்டில் பதவியில் இருக்கிறார்களோ,அப்போது அந்தக் கட்சித் தலைமை, இந்திய அரசியல் சட்டதிட்டத்திற்கும் இறையாண்மைக்கும் சந்தேகம் வரும் வகையில் அரசியல் செய்து தங்கள் ஆட்சிக்கு ஆபத்து விளைவித்துக் கொள்ள விழையமாட்டார்கள் என்பதே கடந்த கால அனுபவம். யாவருக்குமாம் விளைவுகள்.

இனப்போர் முடிந்த பிறகு,இதற்கு முன்பு இந்தியா எடுக்காத நிலைப்பாடு ஒன்று இந்தமுறை மேனன் விஜயத்தின் போது வெளிப்பட்டது. அதாவது, இனப் பிரச்சினையின் விளைவுகள் "நம் அனைவரையுமே பாதிக்கிறது" ("ramification for all of us") என்று கொழும்பில் உள்ள இந்திய பத்திரிகையாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார். இது இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களை மட்டுமல்லாது, இந்தியாவில் உள்ள மக்கள்,அவர்களது கருத்து மற்றும் அரசியல், மற்றும் இந்தியாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு என்று பலவாறான பிரச்சினைகளை உள்ளடக்கியது. இதில், தான் குறிப்பிட வந்தது எது என்று மேனன் தெளிவாக்காமலேயே விட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இனப்பிரச்சினை எடுக்கும் பாதையை ஒட்டியே இந்தியாவின் கவலைகள் அமையும் என்பதனையே அவரது கருத்து கோடிட்டுக் காட்டியுள்ளது. அதாவது, இனப்பிரச்சினை அரசியல் பிரச்சினையாக இருக்கும்போது மட்டுமே இந்தியாவால் தற்போதைய நிலைப்பாட்டைத் தொடர முடியும். அதுவே மீண்டும் போர்க் குணங்களைப் பெற முயலும் போது இந்தியாவின் கவலைகளும் வேறாகி விடும் வாய்ப்பும் கட்டாயமும் உள்ளது. இதுவே கடந்தகாலம் இலங்கைத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கும் அதிலும் குறிப்பாக புலம் பெயர் தமிழர்களுக்கும் உள்ள செய்தி. இந்தியாவின் இந்த கட்டாயத்தை உணர்ந்து இந்தத் தரப்பினர் செயல்பட வேண்டும். இனப்பிரச்சினையை சர்வதேச பிரச்சினை ஆக்கியபிறகு, தமிழ்த் தலைமைகள் அதன் பல்வேறு விளைவுகளையும் அலசி ஆராய்ந்த பிறகே அரசியல் போராட்டங்கள் குறித்த திட்டங்களை தீட்ட வேண்டும். அந்த விதத்தில் தமிழ் நாட்டில் கருணாநிதி மட்டுமல்ல, கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் கூட "டெசோ மாநாடு" மற்றும் மக்கள் போராட்டங்கள் குறித்து மறுபரிசீலனை செய்ததாகவே தெரிகிறது. குறிப்பாக, கூட்டமைப்பு போன்ற மிதவாத அரசியல் தலைமை எப்போது பேச்சுவார்த்தை மற்றும் பாராளுமன்ற முறைமைகள் ஆகியவற்றிற்கு அப்பால் சென்று நேரடியாக மக்களை அறப் போராட்டங்களுக்கு தயாராக்குகிறார்களோ, அப்போதெல்லாம் தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதுவே தமிழ் இளைஞர்களிடையே போர்க் குணத்தைத் திணித்துள்ளது. தற்போது முழுவதுமாகவே போர்க் குணம் குன்றாத தமிழ் இளைஞர் சமுதாயம்,அறப்போராட்ட முயற்சிகளை அப்படியே விட்டுவிடுவார்கள் என்று கருத இடமில்லை. அதனால் பாதிக்கப்படப்போவதில் போரினால் பேரிழப்புகளைச் சந்தித்த அப்பாவித் தமிழ் மக்கள் ஒரு புறம். மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் போன்றே மீண்டும் ஒரு தமிழர் படை உருவாகிவிடுமோ என்று தொடர்ந்தும் கவலையில் இருக்கும் இலங்கை அரசு இயந்திரம் மறுபுறம். இந்த இரு பிரச்சினைகளையும் கையாள வேண்டிய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் பிறிதொருபுறம். இலங்கையில் நடைபெறும் இதுபோன்ற குழப்பங்களால் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கும் தமிழ் நாடு மற்றும் இந்தியாவின் பிற மாநில,மத்திய அரசுகள் பிறிதொரு புறம்.

கடந்த முப்பது ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ் நாடு மட்டுமல்லாது தென் இந்தியாவில் உள்ள பிறிதொரு மாநிலமான கேரளம் மூலமாக இலங்கைத் தமிழர்கள் "கள்ளத் தோணி" மூலமாக அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குத் திருட்டுத்தனமாகப் பயணப்பட முயற்சிக்கும் செய்திகள் அதிகரித்துள்ளன. ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்தின் கடைசிக் காட்சிகள் கர்நாடகா மாநிலத் தலைநகரான பெங்களூரில் அரங்கேறியது. இனப்போரின் கடைசி அத்தியாயம் 2006ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கப்பட்ட நேரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் "கிரெனேட்" தயாரிப்பில் பயன்படுத்தும் சில பொருட்களை மஹாராஷ்டிர மாநிலத் தலைநகர் மும்பாயில் கொள்முதல் செய்ததாக தமிழ் நாடு காவல்துறை கூறியது. இவ்வாறு பல்வேறு விதங்களில் இந்திய மாநிலங்களைப் பாதிக்கும் பிரச்சினையை இந்திய அரசு ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இது குறித்து அந்தந்த மாநில அரசுகளிடம் இருந்து மத்திய அரசிற்கு அழுத்தங்களும் வரும் என்றும் எதிர்பார்க்கலாம். இவை தவிர, தமிழ் நாட்டில் இலங்கையில் மனித உரிமை மற்றும் தமிழினத்திற்கு இழைக்கப்படும் தவறுகள் குறித்த நியாயமான கவலைகள்,அவற்றால் உருவாகும் அரசியல் பிரச்சினைகள், மத்திய அரசு எதிர்கொள்ள வேண்டிய அரசியல் அழுத்தங்கள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்புக் குறித்த கவலைகள் ஆகியவற்றையும் சேர்த்துப் பார்த்தால் மேனனின் கூற்றின் பன்முகத்தன்மை விளங்கும். இதற்கும் அப்பால் சென்று இந்தியா எதிர்கொள்ள வேண்டிய விடயம் சீனாவின் உருவில் இலங்கைப் பரப்பில் எப்போதுமே தோன்றி மறைந்த வண்ணமே இருக்கும் என்பதும் உண்மை.

யாவருக்குமாம் இனப்பிரச்சினை யின் விளைவுகள் என்ற வகையில் இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் வழங்கியுள்ள செய்தி, இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளை மட்டுமே மனதில் நிறுத்திச் சொல்லப்பட்டதாக மட்டுமே கருதிவிடக்கூடாது. ஜெனீவா வாக்களிப்பிற்குப் பின்னர் இந்தியாவின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக இனப்பிரச்சினைக்கு நல்லதொரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இலங்கையில் உள்ள இனம் மற்றும் அரசியல் தலைமைகளுக்கும் அப்பால் சென்று இந்தியா ஆதங்கம் கொண்டுள்ளது. அதாவது இலங்கையில் உள்ள பல்வேறு தரப்பினரிடையே யாரை (மட்டும்) இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தெரிந்தெடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்குத் தள்ளிவிடப்படக்கூடாது என்று இந்தியா விரும்புகிறது.

இலங்கையில் தமிழ் மக்களுக்குச் சம உரிமையும் சம அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டும் என்று ரியோவில் பிரதமரும் கொழும்பில் பாதுகாப்புத்துறைத் செயலரும் அளித்த செய்தி மத்திய அரசின் கருத்து மட்டுமல்ல. ஏன், அது தமிழ் நாட்டின் உணர்வுகள் மற்றும் அரசியல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. இதனையே ஜெனீவா வாக்களிப்பிற்கு முன்பு இந்திய பாராளுமன்றத்தின் நிகழ்வுகள் பதிவு செய்து உள்ளன. இந்தக் கருத்துகளையே பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த பாராளுமன்றக் குழுவினரின் தலைவரும் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்களில் ஒருவருமான சுஷ்மா சுவராஜும் வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது சிவ்சங்கர் மேனனின் கூற்று அதற்கும் அப்பால் சென்று, இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் கவலைகளையும் கரிசனத்தையும் வெளிப் படுத்துவதாக அமைந்துள்ளது. எதிர்வரும் ஜெனீவா விவாதங்களை வைத்துப்பார்க்கும் போது, இராஜகீயம் அல்லது இராஜதந்திரம் என்ற வகையில் இது இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்தின் சார்பில் இந்தியா விடுக்கும் செய்தி என்றும் கொள்ளலாம். ஆனால் செயல்பாடு என்று வந்துவிட்டால், ஒன்றிலிருந்து அடுத்தது என்று யாரும் திட்டமிட்டபடி எதுவுமே நடைபெற்றதில்லை. அதிலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் விடுதலைப் புலிகள் மட்டுமே தர்க்கம் மற்றும் தார்மீக ரீதியான முடிவுகளை எடுக்கத் தவறிவிட்டனர் என்று கூறிவிடமுடியாது. ஆனால் ஒரு காலகட்டத்தில் அரசை விட விடுதலைப்புலிகள் இயக்கமே அதிக அளவில் ஏற்புடையாத செயல்களில் ஈடுபட்டன, அல்லது நிலைப்பாடு எடுத்து வந்தனர் என்ற கருத்துப் பரவியது. அதில் உண்மையும் இருந்தது.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பிறகு, அவ்விதமாக முடிவெடுக்கத் தொடங்கிய பின்னர், சர்வதேச சமூகம் அவரது அரசு சார்ந்தே இருந்தது என்பதும் உண்மை. தற்போது பாராளுமன்றத் தனிக் குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அரசின் நிலைப்பாடும் இந்த வகையில் அடங்கும். இனப்பிரச்சினை குறித்து அரசியல் தீர்வு காண மஹிந்த ராஜபக்ஷ தலைமை உள்ளார்ந்த முயற்சி எடுக்கவில்லை என்று இந்தியாவும் சர்வதேச சமூகமும் கருதுகிறது. அதற்கும் அப்பால் சென்று பாராளுமன்றக் குழுத் திட்டம் குறித்து அரசு தீவிரமாகவும் உண்மையாகவும் செயல்படும் என்ற எண்ணம் தோன்றிவிட்டால், அதன் பின்னர், சர்வதேச சமூகம் மேலெழுந்தவாரியாக அல்லாமல் இனப் பிரச்சினை குறித்து குறிப்பிட்ட செயல் திட்டங்களில் அரசு மற்றும் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் குறித்து அலசி ஆராயத் தொடங்கிவிடும். இதுவே தசாப்தங்கள் கூடிய கடந்த காலம் குறித்த புதிய சர்ச்சைகளையும் அதனால் தோன்றும் மாறான நிலைப்பாடுகளையும் சர்வதேச சமூகத்திடம் தோற்றுவிக்கும். அதனால் பாதிக்கப்படுவது இலங்கை அரசு மட்டுமல்ல, கடந்த காலம் குறித்த தமிழர்களின் அரசியல் நிலைப்பாடுகளும் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# தமிழ் அரசியல் கைதிகளின் அவலங்கள்



எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

ராகம போதனா வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான டில்ருக்ஷானை கடந்த சனிக்கிழமை சென்று பார்வையிட்டேன். கடந்த 29ஆம் திகதி சுயநினைவிழந்த நிலையில் அவரைச் சென்று பார்வையிட அனுமதி மறுக்கப்பட்ட போதும், பின்னர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சென்று பார்வையிட அனுமதி வழங்கினர். அவரைச் சென்று பார்த்த போது கோமா நிலையிலே இருந்தார்.

இவருடன் சேர்ந்து சுயநினைவற்ற நிலையிலே, மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிமலரூபன் என்னும் அரசியல் கைதி வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு, 4,5 நாட்க ளில் மரணமானார். அவரின் உடல் இன் னும் வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டுள்ளதுடன், அவரின் பெற்றோர் உடலை கெஞ்சிக்கேட்டும் இதுவரை ஒப்படைக்கவில்லை. அதே வேளை வேறு பல கைதிகளும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் கைதிகள் ஏன் சிறைச்சாலையில் உள்ளனர்? என்ற கேள்வியைக் கேட்டால், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவு 6இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்பது எல்லாச் சட்ட விழுமியங்களையும் மீறுகின்றதொரு கொடுமையான சட்டமாகும்.

1978ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இச்சட்டம் 6 மாதங்களுக்கு மட்டும் வலுவானதான தற்காலிக சட்டமாகத்தான் கொண்டு வரப்பட்டது. பின்னர் தற்காலிகச் சட்டம் என்ற பகுதி நீக்கப்பட்டு,எமது நாட்டுச் சட்டத்தில் நிலையாக நீடித்துள்ள சட்டமாக மாறியுள்ளது. எமது தண்டனை விழுமியங்களின் அடிப்படையாகச் சொல்லக்கூடிய குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி. ஆனால் இதனை பயங் கரவாதச்சட்டம் மீறுகின்றது. ஏனென்றால் இதன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு பிணை கிடையாது. வழக்குத் தொடர முன்னரும், பின்னரும் நீண்ட காலங்களுக்கு சிறையில் அடைத்து வைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக பலர் குற்றத்தை விரைவிலேயே ஒப்புக்கொண்டு வழக்கை துரிதமாக முடித்துக்கொள்ள எத்தனிக்கின்றார்கள். இரண்டாவதாக, ஒப்புதல் வாக்கு மூலமொன்று இச்சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றில் சமர்ப்பிக்கக்கூடிய சாத்தியமாக மாறுகின்றது. வேறு எந்தச் சட்டத்தின் கீழும் பொலிஸாருக்குக் கொடுக்கப்படும் குற்றவாக்கு மூலம், அதனைக் கொடுப்பவர்களுக்கெதிராக நீதிமன்றில் சமர்ப்பிக்க முடியாது.

ஆனால்,பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழே அது சாத்தியமாக முன்வைக்க முடியுமென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழே யாராவது ஒருவர் குற்றம் புரிந்தவரென தெரிய நியாயமிருந்தால்,அவர் குறித்த தகவல்களை பொலிஸாருக்கு தாங்களாகவே கொடுத்தாக வேண்டும். வேறு எந்தவொரு சட்டத்தின் கீழும் அப்படியானதொரு பொறுப்பும் எவர் மீதும் சுமத்தப்படவில்லை. இவ்வாறு இந்தச் சட்டத்தைப் பற்றி இன்னும் இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம்.

இவற்றையெல்லாம் நாங்கள் பல ஆண்டுகளாக பல்வேறு சான்றுகளுடன் சர்வதேச சமூகத்திடம் முன்வைத்துள்ளோம். ஆனாலும்,பலமான சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் கூட இலங்கையரசு தொடர்ச்சியாக இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நாட்டிலே போர்ச்சூழல் நிலவிய வேளையிலே இப்படியானதொரு விஷேட சட்டம் அரசிற்கு தேவை என்பது பொலிஸாரின் விவாதம். ஆனால் போர்முடிவடைந்து 3 வருடங்களுக்குப் பின்னரும் இப்படியான காரணங்களை அரசினால் கூறமுடியாது. இந்தச் சட்டத்தின் பல பகுதிகள் உடனடியாக நீக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கழகங்கள் ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளன. அப்படியிருந்த போதிலும், இலங்கை அரசாங்கம் இச்சட்டத்தை தொடர்ந்து பேணுவது மட்டுமல்லாது, அதன் கீழ் கைது செய்தவர்களை பல வருடங்களாக சிறைக்காவலில் வைத்துமுள்ளது.

1971 ஆம் ஆண்டும்,அதனைத் தொடர்ந்து 1988,1989 ஆம் ஆண்டுகளில் அரசுக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால் இந்த தமிழ் இளைஞர்களுக்கு மட்டும் தொடர்ச்சியாக கொடூரமான சட்டத்தின் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது குறைந்தது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பும்,கோரிக்கையாகவும் உள்ளது. யுத்தத்திலே இறுதிவரை ஆயுதம் ஏந்திப் போராடியவர்களில் 11,600 பேருக்கு அரசு வழக்குத் தாக்கல்கள் எதுவும் செய்யாது,புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்துள்ளமை வரவேற்கத்தக்கதொன்றாகும்.

ஆனால்,தற்போது தடுப்புக் காவலிலிருக்கும் ஏனையவர்களுக்கு எந்த வொரு சந்தர்ப்பமும் அரசு வழங்காது காலம் தாழ்த்துவதற்கு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது. இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆகாரம் வழங்கியமை,சிறு சிறு உதவிகள் அவர்களுக்குச் செய்தமை,பொலிஸாருக்கு அவர்கள் தொடர்பான தகவல்கள் வழங்காமை போன்ற குற்றச்சாட்டுகளின் பெயரிலேயே சிறையில் அடைக்கப் பட்டுள்ள னர். ஆயுதம் தாங்கிப் போராடிய முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு வழங்கி அரசு விடுதலை செய்துள்ளது. ஆனால் இவர்களை மட்டும் ஏன் அரசு சிறையில் வைத்திருக்கின்றது?

அதுதவிர விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உயர் பதவிகளிலிருந்த கருணா அம்மான், பிள்ளையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களுக்கு பிரதியமைச்சர், முதலமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கே.பி என்னும் குமரன் பத்மநாதன் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் அவ்வியக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவராவார். அவருக்கு சிறைவாசம் கிடையாது. சொகுசான மாளிகை வாசம். அவர்களுக்கு எந்தப் புனர்வாழ்வுப் பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் அரசியல் கைதிகளாக தொடர்ந்தும் சிறையில் வாடி வருகின்றனர்.

தற்போது, இந்த நூற்றுக்கணக்கான கைதிகள் தங்களை விடுவிக்கும்படி உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தினார்கள். மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளுக்காகத் தான் அவர்கள் உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருந்தனர். எனவே, உண்ணா விரதத் தினை தொடர்ந்து மே மாதம் 23ஆம் திகதி அரசு பாராளுமன்றத் தில் வாக்குறுதியைக் கொடுத்தது. அந்த வாக்குறுதிப்படி, ஒருமாத காலத்திற்குள்ளே, அதாவது ஜுன் மாதம் 23 ஆம் திகதிக்குள்ளே இந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். அல்லது அக்கைதிகளின் சுயவிருப்பின் பெயரில் புனர்வாழ்விற்கு அனுப்பப்படுவார்கள். அதற்கும் மேற்பட்டவர்களை அவர்களுக்கெதிராக விஷேட நீதிமன்றங்களின் முன் துரிதப்படுத்தப்படும். ஆனால், ஜுன் 23 ஆம் திகதி வரை கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று கூட செயற்படுத்தப்படவில்லை.

புனர்வாழ்வு பெற நாம் தயாராகவுள்ளோம் என இவர்களில் பெரும்பாலானோர் எழுத்து மூலம் சுயவிருப்பத்தை தெரிவித்திருந்தனர். அப்படியிருந்தும் செயற்படுத்தவில்லை. அரசு தனக்குத் தானே விதித்த காலக்கெடு முடிந்த பிறகு தான் ஜுன் 29 ஆம் திகதி வவுனியா,அநுராதபுரச் சிறைச்சாலைகளில் இந்தக் கைதிகள் கொடூரமான முறையிலே தாக்கப்பட்டனர். அதன் விளைவாகத் தான் நிமலரூபன் கொல்லப்பட்டார். டில்ருக்ஷான் சுய நினைவில்லாமல் மரக்கட்டை போல படுத்துக்கொண்டிருக்கிறார். ஜுன் 29 ஆம் திகதியன்று இந்தக்கைதிகள்சிறையிலிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. சிறையில் இருப்பதற்கு எந்தவித நியாயமும் கிடையாது. தேவையற்ற முறையிலே சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இவர்கள் அரச பாதுகாப்பிலே இருக்கின்ற போதே இப்படியான கொடூரமான தாக்குதலுக்கு நிமலரூபன் இரையாகியுள்ளார். இன்று இப்பிரச்சினை மிகப்பெரிய விடயமாக விஸ்வரூபமெடுத்துள்ளது.

தமிழ் மக்களுக்கும்,குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கெதிராக இலங்கை அரசு நடத்தும் கொடூர ஆட்சிப் பிரதிபலிப்பே இது. இன்றுவரை நிமலரூபனின் உடல் அவருடைய பெற்றோரிடம் கையளிக்காது, சட்டத்திற்கும்,நீதிக்கும் விரோதமான முறையிலே வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

டில்ருக்ஷான் நிலைமை கூட எப்படி மாறுமெனச் சொல்ல முடியாது. ஆனால் இப்படியான நிலையிலும் கூட அவருடைய தகப்பன் அவரைப் பார்வையிட ஒவ்வொரு தடவையும் மகர சிறைச்சாலைக்குச் சென்று சிறைச்சாலை மேல் அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி பெற்ற பின்னர் தான் மீண்டும் வைத்தியசாலைக்கு வந்து 2 நிமிடங்கள் மட்டும் பார்வையிட அனுமதிக்கின்றனர்.

**இலங்கை அரசின் மனித உரிமை சம்பந்தமான நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மீளாய்வு செய்கின்ற போது தமிழ் அரசியல் எதிர்நோக்கும் நெருக்கடிகள் முக்கியமானதொரு விடயமாகப் பிரதிபலிக்கும்**

அவசர சிகிச்சைப் பிரிவின் வாசலிலே அமர்ந்திருக்கும் சிறைக்காவலர்களின் கையிலே எழுத்து மூலமான உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. ஜுன் 30ஆம் திகதியிட்டு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்திலே, டில்ருக்ஷானை பார்வையிட எந்தப் பாராளுமன்ற உறுப்பினரையோ, பொதுமக்கள் பிரதிநிதியையோ, சட்டத்தரணியையோ, வெளி நாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்தவர் களை யோ அனுமதிக்கக் கூடாது என குறிப்பிடப் பட்டுள்ளது.

முதலில் என்னையும் பார்க்க விடாது தடுத்தனர். அதன்பின் நான் சிறைச்சாலை உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு இச்செயல் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மறுக்கும் செயலாகும் என வன்மையாகச் சுட்டிக்காட்டிய பின்னரே அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல் இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் அடிப்படை உரிமையான சட்டத்தரணிகளைச் சந்திப்பதும் மறுக்கப்பட்டுள்ளது.

எல்லா மனித உரிமைகளையும் மீறுகின்ற பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிறைவாசம் இருக்கும் இந்த அரசியல் கைதிகள் கொடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பின்னரும் அவர்களுக்குரிய அடிப்படை மனித உரிமைகளைக் கூட இலங்கை அரசு மறுத்து வருகின்றது.

இச்சம்பவம், இலங்கை அரசின் மனித உரிமை சம்பந்தமான நிலைப்பாட்டை சர்வதேசம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மீளாய்வு செய்கின்ற போது முக்கியமானதொரு விடயமாகப் பிரதிபலிக்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை

THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் ஈழத் தமிழர்களின் கோரிக் கையை வலியுறுத்தி டெசோ மாநாட்டைக் கூட்டுகிறார் தி.மு.க.தலைவர் கருணாநிதி. இதையொட்டி தமிழக அரசியல் களம் மீண்டும் இலங்கைத் தமிழர் பிரச்சி னையை மையமாக வைத்து ஒன்று திர ண்டு கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை ஈழத்தமிழர் பிரச்சி னையில் மூன்று விதமான அணிகள் இருக்கின்றன. ஆளும் அ.தி.மு.க.வே ஈழத்தமிழர்களின் விவகாரத்தை அதிரடி யாகக் கையிலெடுத்து இப்பிரச்சி னைகளில் அவ்வப்போது முதல்வர் ஜெயலலிதா அறிக்கை விட்டு வருகிறார். இது முதல் அணி. ஆட்சியை இழந்த பிறகு ஈழத்தமிழர் பிரச்சினையை புதுவேகத்தில் கையிலெடுத்து புறப்பட்டிருக்கிறது தி.மு.க. இது இரண்டாவது வகை அணி. இப் போது நடத்தப்போகும் டெசோ மாநாடு தி.மு.க.வின் புதுவகைப் போராட்டத்தைச் சார்ந்தது. இங்கு இரு முக்கிய கட்சி களும் இல்லாமல், மூன்றாவதாக ஓரணி தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து போராடி வருகிறது. அந்த அணியில்தான் தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் அமைப்புகள்- குறிப்பாக




# டெசோ மாநாடு 2012

## தமிழகத்தில் எதிர்கால அரசியல் அணிதிரட்டலுக்கு அச்சாரம்

எம்.கே.என்.

ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ, தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், நாம் தமிழர் கட்சித்தலை வர் சீமான் போன்றவர்கள் எல்லாம் முன்வரிசையில் நிற்கிறார்கள். இவர்கள் அணியில் தா.பாண்டியன் தலைமையி லான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சேர் ந்திருப்பது ஒரு பரிணாம வளர்ச்சி.

தமிழகத்தில் நடைபெறும் தேர்தல்கள் எப்போதுமே உள்ளூர் பிரச்சினைகளை மையமாக வைத்தே நடத்தப்படுவதும், அனைத்துக் கட்சிகளும் அப்படிப்பட்ட பிரச்சி னைகளையே முன்வைத்து மக்களிடம் வாக்குக் கேட்பதும் சகஜமான நிலை. ஆனால் கடந்த 2009 பாராளுமன்றத் தேர்தல், 2011 சட்டமன்றத் தேர்தல்களில் ஈழத் தமிழர் பிரச்சினை முன்னிலை வகித்தது. 2-ஜி அலைக்கற்றை போன்ற ஊழல் பிரச்சினைகள் பிரசாரப் பவனியில் வந்தாலும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கையில் நடைபெற்ற போர், அதைத் தடுக்காமல் மத்தியில் ஆட்சி புரிந்த காங்கிரஸ் கட்சி, அந்தக் காங்கிரஸுக்கு உதவியாக இருந்த தி.மு.க போன்ற கட்சிகள் மீதெல்லாம் கடும் குற்றச்சாட்டுகள் தேர்தல் களத்தில் சரமாரியாக சுமத்தப்பட்டன. ஈழத்தமிழர் பிரசாரம் தமிழர்களின் சென் டிமென்டைத் தொடும் பிரசாரமாக அமை ந்தது. இதில் 2009 பாராளுமன்றத் தேர் தலில் காங்கிரஸ் மட்டுமே வசமாக சிக் கிக் கொண்டது. காங்கிரஸ் போடியிட்ட 16 பாராளுமன்றத் தொகுதிகளில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் சீமான் போன்றவர்கள் தீவிரமாக எதிர்ப்புப் பிரசாரம் செய்தார்கள். இதனால் 12 பாராளுமன்றத் தொகுதி களில் அக்கட்சி தோற்றது.

ஆனால் 2011 சட்டமன்றத் தேர்தலில் அந்தச் சிக்கலில் முழுக்க முழுக்க தி.மு.க.வே நேரடியாக மாட்டிக்கொண்டது. அது மட்டுமன்றி போர் நடைபெற்றபோது இலங்கைத் தமிழர்கள் பக்கம் "உறுதியாக" தி.மு.க. நிற்கவில்லை என்ற ஆதங்கம் தமி ழக வாக்காளர்கள் மத்தியில் மட்டுமன்றி, தி.மு.க. தொண்டர்கள் மனதிலேயே கூட ஏற் பட்டது. தி.மு.க. நினைத்திருந்தால் அங்கு நடைபெற்ற போரைத் தடுத்திருக்கலாம் என்று ஈழத் தமிழர்பால் அக்கறையுள்ள தி.மு.க.வினரே கருதினார்கள். இதனால் தான் சட்டமன்றத் தேர்தல் முடிந்த கையோடு, ஈழத்தமிழர் பிரச்சினையை "மீண்டும்" ஆக்டிவாக கையிலெடுத்தார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. இதற்கு முக்கிய காரணம் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகும், 'சுஇலங்கைக்கு எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாதாரத் தடை விதிக்க முன் வர வேண்டும்'' என்பது போன்ற தீர்மானங்களை தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றியதே!

1991களில் காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருந்த இன்றைய முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. விற்கு ஈழத்தமிழர் பிரச்சினையில் பேசுவதற்கு சிரமம் இருந்தது. அந்நிலையில், ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. விடுதலைப் புலிகளுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை ஆரம்ப காலத்தில் எடுத்தது. ராஜீவ் கொலைக்குப் பிறகு அந்த இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. அந்த இயக்கத்தை ஆதரித்த டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போன்றவற்றைத் தடை செய்ய வேண்டும் என்றே கூட மத்திய அரசை வற்புறுத்தியது. 2001 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார் என்பதற்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவையே பொடா சட்டத்தில் கைது செய்து 19 மாதம் சிறையில் அடைத்தது. அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்பதற்காக ம.தி.மு.க. சார்பில் மத்திய அமைச்சராக இருந்த மு.கண்ணப்பனை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று பிரதமராக இருந்த வாஜ்பாய்க்கு கோரிக்கை விடுத்தார் அன்று ஆட்சியில் இருந்த முதல்வர் ஜெயலலிதா. அக்கட்சி காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறிய பிறகு,அந்த தர்மசங்கடம் இல்லை. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அ.தி.மு.க. மீண்டும் ஏற்படுத்திக் கொண்டது. குறிப்பாக வைகோவுடன் சேர் ந்து சந்தித்த 2009 பாராளுமன்றத் தேர்தலின் போதும்,பிறகு நடைபெற்ற 2011 சட்டமன்றத் தேர்தலின் போதும் ஈழத்தமிழர்கள் விடயத்தில் அ.தி.மு.க.வில் மிகப்பெரிய மாற்றத்தைக் காண முடிந்தது. தி.மு.க. வை விட ஸ்டிராங்காக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கருத்துகளைச் சொன்னது. இப்போது ஆட்சிக்கு வந்த பிறகும், இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஆணித்தரமான ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து வருகிறது. இப்போது தி.மு.க.டெசோ மாநாடு நடத்தும் ரூட்டிற்கு வந்திருப்பதற்கு இதுவும் முக்கிய காரணம்.

தமிழகத்தில் காங்கிரஸுடன் வைத்துள்ள கூட்டணியே ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க.விற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடைபெற்ற நேரத்தில் 35 எம்.எல்.ஏ.க்களை வைத்திருந்த காங்கிரஸ் கட்சியின் தயவு தி.மு.க. ஆட்சி நீடிப்பதற்குத் தேவை என்ற நேரம். காங்கிரஸுக்கு "சென்டிமென்ட்" ஆக உள்ள இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசில் முக்கிய கூட்டணிக் கட்சியாக இருந்தும் "ஆணித்தரமான எதிர்ப்பை" காட்ட முடியாத நிலைக்கு தி.மு.க. தள்ளப்பட்டது. ராஜீவ் கொலைக்குப் பிறகு அதற்கும் தி.மு.க.வும் காரணம் என்ற ரீதியில் செய்யப்பட்ட பிரசாரமும்,1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை ஆதரித்தது என்று குற்றம்சாட்டப்பட்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதும் கூட இந்தச் சூழ்நிலைக்குப் பிற முக்கிய காரணங்கள். 2009 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் அதிக பலத்துடன் மத்தியில் ஆட்சி அமைத்த காங்கிரஸ் கட்சி,தி.மு.க.வைச் சீண்டிப் பார்த்தது. பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸுக்கு கிடைத்த தோல்விக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், 2-ஜி அலைக்கற்றை ஊழல் விடயம் விஸ்வரூபம் எடுத்தது. இதனால் இரு மத்திய அமைச்சர்களை (அ.ராஜா, தயாநிதி மாறன்) ராஜிநாமா செய்ய வைக்க வேண்டிய நிலை தி.மு.க.விற்கு ஏற்பட்டது. தி.மு.க. தலைவரின் மகளும், ராஜ்ய சபை எம்.பி.யுமான கனிமொழி கைது செய்யப்பட்டு திகார் ஜெயிலில் அடைக்கப்பட்டார். 2011 சட்டமன்றத் தேர்தல் தோல்வி, தி.மு.க.விற்கு எதிராக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை

**இலங்கைத் தமிழ் எம்.பி.க்களை இந்த மாநாட்டில் பங்கேற்க வைப்பதற்கே மாநாட்டுக் குழுவில் உள்ள வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், முகமது அலி ஜின்னா போன்றோர் தவியாய்த் தவிக்கிறார்கள் என்று தகவல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அக்கட்சியை காங்கிரஸிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக காலப்போக்கில் விலக வைத்தது. இப்போது விலகிச் சென்று கொண்டேயிருக்கிறது! அதனால்தான் இன்னமும் கூட தி.மு.க.விற்கு உரிய மத்திய அமைச்சர் பதவிகளை (அ.ராஜா, தயாநிதி மாறன் போன்றோர் ராஜிநாமாவால் ஏற்பட்ட வேக்கன்ஸி) திரும்பவும் கேட்டுப் பெறத் தயங்குகிறார் தி.மு.க.தலைவர் கருணாநிதி. காங்கிரஸ்-தி.மு.க. உறவில் உரசல் வந்த நிலையில் தான் ஈழத் தமிழர் பிரச்சினையை முன்வைத்து டெசோ மாநாட்டை சென்னையில் நடத்துகிறது தி.மு.க.

வருகின்ற ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி சென்னையிலிருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விழுப்புரத்தில் டெசோ மாநாடு நடத்த முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் தலைநகரத்திலிருந்து தொலைவில் உள்ளது என்று காரணம் காட்டி இப்போது மாநாடு சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது. இங்குள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாடுத் திகதியும் மாற்றப்பட்டு, ஆகஸ்ட் 12 ஆம் திகதி மாநாடு நடைபெறும் என்று புதிய திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதே மாதிரி டெசோ மாநாட்டை முன்பு மதுரையில் 1986 மே மாதம் 4 ஆம் திகதி தி.மு.க. நடத்தியது. இப்போது தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன், திராவிடக் கழகத் தலைவர் வீரமணி,சுப. வீரபாண்டியன், திருமாவளவன் போன்றோர் உடனிருக்கிறார்கள். ஆனால் 26 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற மாநாட்டில், அப்போது பழ நெடுமாறன் பங்கேற்றார். இப்போது அவர் வரமாட்டார். அதேபோன்று அப்போது இலங்கையில் உள்ள ஏழு (டி.யு.எல்.எப், எல்.டி.டி.ஈ, புரோடெக், ஈரோஸ், டி.இ.எல்.எப், ப்ளொட்) தமிழ் அமைப்புகள் சார்பில் அமிர்தலிங்கம், திலகர், சந்திரகாசன், ரத்தினசபாபதி, ஈழவேந்தன், வரதராஜப் பெருமாள், வாசுதேவன் உள்ளிட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இப்போது இப்படியொரு பரந்த பிரதிநிதித்துவம் இந்த மாநாட்டிற்கு இலங்கைத் தமிழர் அமைப்புகளிடமிருந்து கிடைக்குமா என்ற கேள்விக்குறி பிறந்திருக்கிறது. ஏனென்றால் இலங்கைத் தமிழ் எம்.பி.க்களை இந்த மாநாட்டில் பங்கேற்க வைப்பதற்கே மாநாட்டுக் குழுவில் உள்ள வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், முகமது அலி ஜின்னா போன்றோர் தவியாய்த் தவிக்கிறார்கள் என்று தகவல். அதேபோல் அப்போது நடைபெற்ற டெசோ மாநாட்டில் அகில இந்தியத் தலைவர்களான வாஜ்பாய், ஜஸ்வந்த் சிங், எச்.என்.பகுனா போன்றோர் பங்கேற்றார்கள். குறிப்பாக ஆந்திர முதல்வராக இருந்த என்.டி.ராமராவும், இன்றைக்கு விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்ப்பாளராக மாறியுள்ள சுப்பிரமணியம் சுவாமியுமே கூட அன்று வந்திருந்தார்கள். இன்று அப்படியொரு பிரதிநிதித்துவம் அகில இந்திய தலைவர்கள் மத்தியில் கிடைக்குமா, இந்த மாநாட்டிற்கு கிடைக்குமா என்பது மில்லியன் டொலர் கேள்வியாகியிருக்கிறது. இது மட்டுமன்றி தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்து வரும் வைகோ,டாக்டர் ராமதாஸ் போன்றோரும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா.பாண்டியன் போன்றோரும் சரி இம்மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பு இல்லை. தமிழகத்தில் அடுத்து வருகின்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு தி.மு.க.தலைமையில் எந்தெந்தக் கட்சிகள் இருக்கும், அ.தி.மு.க. தலைமையில் எந்தெந்தக் கட்சிகள் இடம்பெறும் என்பது இன்னும் உறுதியாகாத நிலையில், தமிழகத்தில் உள்ள மற்றத் தலைவர்கள் டெசோ மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பு இல்லை. இப்படிப் பல வகையிலும் டெசோ மாநாட்டிற்கான "சுற்றுப்புறச் சூழ்நிலை" சரியாக இல்லாத நிலையில்தான் விழுப்புறம் மாநாடு, சென்னைக்கு மாறியிருக்கிறது.

டெசோ மாநாடு திகதி அறிவிக்கப்பட்ட நேரத்தில் மத்திய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான தடையை நீட்டித்து செய்திக் குறிப்பையும் வெளியிட்டுள்ளது. இது வழக்கமாக மே மாதமே வந்திருக்க வேண்டிய செய்தி. அது ஜுலையில் வந்திருக்கிறது. அதுவும் திகதி அறிவித்த நேரத்தில் வந்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சகத்தில் இருந்து வெளிவந்துள்ள அந்தச் செய்திக் குறிப்பில், "புலம்பெயர்ந்த தமிழர்கள் இன்னும் இந்தியாவிற்கு எதிரான கட்டுரைகள், செய்திகளை இன்டர்நெட்டில் வெளியிட்டு வருகிறார்கள். இது இந்தியாவில் பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது" என்று கூறி "தனி ஈழம் வேண்டும் என்ற எல்.டி.டி.ஈ.யின் கோரிக்கை இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது" என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரமே சென்னை வந்து முன்னாள் முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார். "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பது போல், மத்திய உள்துறை அமைச்சகம் எல்.டி.டி.ஈ.க்கு தடை நீட்டிக்கப்பட்ட செய்திக்குறிப்பு வெளிவந்தவுடன் இந்தச் சந்திப்பு நடைபெற்றது பரபரப்பாகியிருக்கிறது. "ஜனநாயக பீதியில் ஈழத் தமிழர்களுக்கு தனி ஈழம் அமைய வேண்டும் என்பதே டெசோ மாநாட்டின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில்தான் இப்படியொரு அறிவிப்பை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டு இருப்பது டெசோ மாநாடு நடத்தப்படுவதில் மத்திய அரசுக்கு விருப்பமில்லையோ என்ற எண் ணத்தை மேலோங்கச் செய்துள்ளது. ஆகவே, தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் டெசோ மாநாடு வெற்றிகரமாக அமைந்தால், தமிழக அரசியலின்

இலங்கையில் தமிழீழம் அமைவதை வலியுறுத்தி டெசோ மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லை. போரினால் பாதிக்கப்பட்டு தற்போது எஞ்சியுள்ள தமிழர்களை பாதுகாப்பதும் அவர்கள் வாழ்வை வழப்படுத்துவதும் தான் முக்கிய குறிக்கோள். அதற்கு உதவியாக மகாநாட்டில் தலைவர்களின் கருத்துக்களை கேட்டு முடிவெடுக்கவிருப்பதாக கருணாநிதி இறுதியாக அறிவிக்க வேண்டி ஏற்பட்டு விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்பவெப்ப நிலையை மாற்றமுடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது. தனி ஈழம் என்ற டெசோவின் நோக்கத்தை எக்காரணம் கொண்டும் காங்கிரஸ் கட்சியால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே அதுவே, காங்கிரஸ் கூட்டணியை விட்டு தி.மு.க. வெளியேறுவதற்கான முகாந்திரங்களைக் கூட உருவாக்கலாம் ஆனால் ''காலம் - நேரம்'' கனிந்து வரட்டும் என்பதற்காகவே தி.மு.க. தலைவர் கருணாநிதி காத்திருக்கிறார் என்பதே அரசியல் பார்வையாளர்களின் கருத்து.

காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியே வராமல் நடத்தப்படும் டெசோ மாநாட்டிற்கு தமிழகத்தில் உள்ள மற்றக் கட்சிகள் ஆதரவு அளிக்காது. அது மட்டுமல்ல,ஆளும் கட்சியாக இருக்கும் அ.தி.மு.க. முன்பைவிட வேகமாக ஈழத்தமிழர் விவகாரத்தில் ஆதரவாகப் பேசுகிறது. குறிப்பாக இலங்கை வான்வெளி வீரர்கள் சென்னை தாம்பரத்தில் உள்ள இராணுவப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றார்கள். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று தான் தி.மு.க தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்தார். ஆனால் முதல்வர் ஜெயலலிதாவோ இந்திய மண்ணில் எங்குமே இலங்கை வான்வெளி வீரர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடாது என்று பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கோரிக்கை வைத்திருக்கிறார். இது தொடர்பாக வெளியிட்ட இன்னொரு அறிக்கையில், தமிழினத் தலைவர் என்று தனக்குத்தானே தம்பட்டம் அடித்துக்கொண்டு, தமிழினத்தை இலங்கை அரசு அழிக்கக் காரணமாக இருந்தவர் தி.மு.க.தலைவர் கருணாநிதி என்று காரசாரமாகத் தாக்கியிருக்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. இதெல்லாமே டெசோ மாநாட்டு வெற்றிக்கு செக் வைக்கும் விடயங்களாக அமைந்திருக்கின்றன. டெசோ மாநாட்டில் வைகோவை பங்கேற்க வைக்க முடியுமா என்ற சிந்தனை தி.மு.க. தலைமைக்கு இருக்கிறது என்றே தெரிகிறது. வைகோ அதற்குச் சாதகமாக இல்லை!

ஆனால்,தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த ஆறு வாரங்களாக ''நெஞ்சுக்கு நீதி தொடர்'' எழுதி வருகிறார். அதில் ஐந்து தொடரில் வைகோவுடனான நட்புப் பற்றி ஏதாவது ஒரு பழைய நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டிச் சிலாகித்து வருகிறார். இன்றைய நிலையில் டெசோ மாநாடு வெற்றி பெற்றால் மட்டுமே தமிழக அரசியலில் புதிய கூட்டணிகள் உருவாகும். அதற்கு டெசோ மாநாடு மட்டும் நடத்தி பிரயோஜனமில்லை. காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும் - இதுதான் கம்யூனிஸ்ட் கட்சிகள், வைகோ போன்றோரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆளுங்கட்சியாக தி.மு.க. இல்லை என்ற சூழல், தமிழகத்தில் உள்ள மற்றக்கட்சிகள் மாநாட்டில் பங்கேற்க முடியாத நிலைமை, அகில இந்தியத் தலைவர்களை அழைக்க முடியாத சிரமம், இலங்கையில் உள்ள தமிழர் அமைப்புகள் முழு அளவில் டெசோ மாநாட்டில் பங்கேற்குமா என்ற கேள்வி எல்லாம் டெசோ மாநாட்டை மிரட்டிக் கொண்டிருக்கிறது. இதை எப்படிச் சமாளிக்கப் போகிறது தி.மு.க. என்பதே தமிழகத்தில் எதிர்கால அரசியல் அணி திரட்டலுக்கு அச்சாரமாக அமையும்.

சமகாலம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற அழையுங்கள்




7767702
7767703
7322736

7767704
2327827

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவள விவகாரம்

# உயர் கல்வியின் நெருக்கடிகள் 1

**உயர் கல்வி என்பது மனித உழைப்பாற்றலின் சந்தைப் பெறுமதியை உயர்த்தும் ஒரு கருவியாகியுள்ளது. எனவே, அதன் மூலம் எதிர்பார்க்கக்கூடிய மேலதிக வருமானத்திற்காக அக்கல்வியைப் பெறுவதற்குரிய விலையைக் கொடுக்க கணிசமான எண்ணிக்கையில் மனிதர் உள்ளனர். அதன் பயனாக அதைச் சந்தைப்படுத்தி விற்கவும் ஒரு வணிகர் குழாம் உருவாகி நிலைபெற்றுள்ளது**



பேராசிரியர்
சி.சிவசேகரம்

அண்மையில் முடிக்கப்பட்ட கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டமும் அதையொட்டினாற் போல அதனுடன் தொடர்பின்றி மீளத் தொடங்கியுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலை நிறுத்தமும் ஒரு புறம் நாட்டின் உழைப்பாளிகளின் அதிருப்தியைச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வளவு காலமும் பயங்கர வாதத்திற்கு எதிரான போரின் பெயரிலும் அந்நியச் சதிகளுக்கு எதிராக நாட்டின் நற்பெயரைக் காப்பதன் பெயரிலும் சொல்லாமல் அடக்கப்பட்டிருந்த மனக் குறைகள் இப்போது ஒவ்வொன்றாக வெடித்தெழுகின்றன. இன்னொரு புறம் நாட்டின் கல்வி முறையின் சீரழிவும் உயர் கல்வி எதிர்நோக்கும் அபாயங்களும் பற்றிய கவலைகளையும் அவை வெளிக் கொண்டு வந்துள்ளன.

ஸற்-ஸ்கோர் எனும் தரப்படுத்தல் முறை தவறாகக் கையாளப்பட்டமை பல்கலைக் கழக அனுமதியில் உள்ள ஒழுங்கீனங்கள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது. அதை விடவும் விடைத்தாள்களின் திருத்தலின் செம்மை பற்றிய ஐயங்களும் வலுத்துள்ளன. இவ்வாறான பிரச்சினைகளில் நிர்வாக ஒழுங்கீனங்களைப் பற்றிய விவாதங்கள் நடைபெறுமளவுக்கு நமது உயர் கல்வியின் அடிப்படையான பிரச்சினைகள் பேசப்படுவதில்லை. எனவே நாட்டின் உயர்கல்வி எதிர்நோக்குகிற நெருக்கடிகளை விளங்கி அவற்றுக்கான நல்ல தீர்வுகளை வலியுறுத்தவும் நாம் சில அடிப்படையான கேள்விகளிலிருந்து தொடங்குவது பயனுள்ளது.

**உயர் கல்வியின் நோக்கம் என்ன?**

அறிவு அறிவுக்காகவே என்பது அற்பச் சிறுபான்மையினரான சிலரது கருத்தாக இருக்கலாம். ஆனால் கல்வியூட்டல் என்பது ஒரு சமூகச் செயற்பாடாகவே விருத்தியடைந்து வந்துள்ளது. அறிவுக்கான தேடலில் தனி மனித முயற்சிகளுக்கு ஒரு பெரும் பங்குண்டு என்பது மறுக்க இயலாதது என்ற போதிலும் அத்தேடலுக்குத் தேவையான வளங்களைச் சமுதாயமே தீர்மானிக்கிறது. ஒரு சமூகத்தில் யாருக்கு எத்தகைய எம்மட்டிலான கல்வி என்பதைத் தீர்மானிப்பவை சமூக அமைப்பும் சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களும் சமூகத்தின் பொருளாதாரமுமே. ஒரு சமூகத்தின் பொருளாதாரத் தேவைகள் அதன் கல்வித் தேவைகளைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிப்பதன் காரணமாகவே பல நாடுகளிலும் கல்விக்கான திட்டமிடல் முக்கியத்துவம் பெற்றுவந்துள்ளது.

தமது நாடு நிலப்பிரபுச் சமூகமாக இருந்த காலத்தில் எல்லாருக்குமான ஒரு பொதுக் கல்வி பற்றிப் பேசப்பட்டதில்லை. குலத்தொழில் சார்ந்து தான் கல்வி பெறப்பட்டது. எழுத, வாசிக்கவும் கணக்கிடவுமான ஆற்றல்கள் கூட எல்லோருக்கும் தேவையான ஆற்றல்களாகக் கருதப்படவில்லை. மறு அந்தத்திற் பல்துறை சார்ந்த புலமையுடைய சான்றோர் இருந்து வந்தனர். ஏறத்தாழ எல்லா அடிமைச் சமூகங்களிலும் நிலவுடைமைச் சமூகங்களிலும் இருந்து வந்த நிலை இது தான். நிலவுடைமைச் சமூகத்தின் உற்பத்தி முறைகள் மந்த வேகத்திலேயே முன்னேறி வந்ததால் தொழில்நுட்பமோ மருத்துவமோ விஞ்ஞானமோ எல்லோருக்கும் தேவையுமில்லாதவையாயும் ஒரு சிறு பான்மையினருக்கு மட்டுமே கைவந்ததாயும் இருப்பது போதுமானதாய் இருந்தது.

அதை விடவும் கல்விமான்களைக் கொண்ட சமூகப் பிரிவுகள் தமது புலமை மூலம் சமூகத்தின் உயர் மட்டத்தில் தம்மை நில நாட்டக்கூடிய நிலையில் அத்தகைய புலமை முழுச் சமூகத்தையும் சென்றடைவதை விரும்ப நியாயம் இருந்திராது. எனவே முதலாளியத்தின் வருகையும் நவீன இயந்திரத் துணையுடனான உற்பத்தியும் எழுச்சி பெற்ற நிலையிலேயே உழைப்பவர்களுடைய கல்வி அறிவு உற்பத்திப் பெருக்கத்திற்கான ஒரு தேவையாயிற்று. இப் பின் புலத்தில் உயர் கல்வி பற்றிய பார்வை மாறத் தொடங்கியது.

கைவினைஞர்களுக்கு உரியனவாயிருந்த நடைமுறைத் தொழில் அறிவுத் துறை விஞ்ஞானத்தின் குறுக்கீட்டால் தொழில் நுட்பமாக வளர்ந்தது. காலப்போக்கில் விஞ்ஞானம் தொழில்நுட்பத்திற்கு இன்றியமையாததாகியது. மருத்துவம், விவசாயம் போன்ற பலதுறைகளும் விஞ்ஞானங்களாகவும் வளர்ச்சி கண்டன. எனவே உயர் கல்வி எனப்பட்டது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைய எல்லைகளை உடைத்துச் சமூக உற்பத்தியுடன் தொடர்புடைய துறை களையும் உள்ளடக்க வேண்டியதாயிற்று. எனினும் தூய கணிதம், பிரயோகக் கணிதத்தினும் உயர்ந்தது என்றும் ஆன்மீக மெய்யியல் சமூகக் கல்வித் துறைகளினும் உயர்ந்தது என்றும் எண்ணுகிற போக்கு நிலவுடைமைக் காலத்திலிருந்து இன்னமும் தொடர்ந்து மிகச் சிறுபான்மையான அறிஞர்களிடையே நிலவுவதையும் நாம் காணலாம்.

உயர்கல்வியும் உயர்கல்வி நிறுவன ங்களும் தமது தன்மையிலும் செயற் பாட்டுத் தளத்தின் அமர்விலும் துரித மாக மாறி வருவதை நாம் இன்று காண முடிகிறது. எனினும் இந்த மாற்ற ங்கள் நமது சமூகம் தனக்காகத் தானே விரும்பி ஏற்றவையாகவோ ஏற்படுத்திய வையாகவோ உள்ளனவா என்பது ஒவ் வொருவரும் நம்மையே கேட்க வேண்டிய கேள்வியாகும்.

மேற்குலகில் முக்கியமாக ஐரோப்பாவில் பாடசாலைக் கல்வி ஏன் இலவசக் கல்வியானது என்றும் பின்னர் ஏன் பல் கலைக்கழகக் கல்வியும் இலவசமாக வழங்கப்பட்டது என்றும் விசாரித்தால் அதற்கான காரணம் ஆட்சியாளர்களுடைய பரோபகாரச் சிந்தனையல்ல என விளங்கும். மேற்குலகில் இப்போது உயர் கல்விக்கான விலை ஏறிக் கொண்டு போவது ஏன் என்று விசாரித்தால் கல்வி இப்போது ஒரு வணிகப் பண்டமாக்கப்பட்டு வருவதை நாம் உணரலாம்.

உயர் கல்வி என்பது மனித உழைப்பாற்ற லின் சந்தைப் பெறுமதியை உயர்த்தும் ஒரு கருவியாகியுள்ளது. எனவே, அதன் மூலம் எதிர்பார்க்கக் கூடிய மேலதிக வருமானத் திற்காக அக்கல்வியைப் பெறுவதற்குரிய விலையைக் கொடுக்க கணிசமான எண்ணிக்கையில் மனிதர் உள்ளனர். அதன் பயனாக அதைச் சந்தைப்படுத்தி விற்கவும் ஒரு வணிகர் குழாம் உருவாகி நிலைபெற்றுள்ளது. இந்த வணிகம் முன்னேறிய முதலாளிய நாடுகளில் ஒவ்வொரு விதமாகவும் மூன்றாமுலகில் வேறு விதங்களிலும் நடைபெறுவதை நாம் காணலாம். எனினும் உயர் கல்வியைப் பற்றிய பார்வையில் ஒரு அடிப்படையிலான மாற்றம் நிகழ்ந்துள்ளதை நாம் உணரலாம்.

நிலவுடைமைச் சமூகத்தில் ஒரு சான் றோர் குழுவினருக்குரியதாக இருந்து வந்த உயர் கல்வி, முதலாளியத்தின் விருத்தியின் போக்கில் பலரையும் எட்டுவது அவசியமாகியது. இப்போது முதலாளியம் முற்றி உலகமயமாதலுக்குள் நுழைந்து விட்ட நிலையில் மனிதரின் உடலுழைப்பும் மூளை உழைப்பும் மட்டுமன்றி மனிதர் களே விற்பனைப் பண்டங்களாகிற ஒரு நிலையை எட்டிவிடப் போகிறோம். உயர் கல்வி என்பது அப் பண்டத்தின் சந்தைப் பெறுமதியை உயர்த்தும் அல்லது அதற் குக் காலப் போக்கில் பெறுமதி சேர்க்கும் ஒரு செயற்பாடாகியுள்ள நிலையில் கல்வி என்பது முழுச் சமூகத்தினதும் நலனுக் கானது என்ற அடையாளத்தை வேகமாக இழந்து வருகிறது.

மேற்கூறிய பின்னணியில் இலங்கை யில் உயர் கல்வியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அதன் இன்றைய நெருக்கடியையும் பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம்.

### இலங்கையில் உயர் கல்வியின் தோற்றம்

1830இல் மருத்துவக்கல்லூரி தோற் றுவிக்கப்பட்டது. அதையடுத்து ஒரு தொழில்நுட்ப பாடசாலை 1893இல் தோற்றுவிக்கப்பட்டுப் பின்பு 1895இல் தொழில் நுட்பக் கல்லூரியாக மாற்றப் பட்டது. இவற்றின் உருவாக்கம் பிரித்தானிய ஆட்சியாளர்களது கொலனிய நிர்வாகத்தின் கீழ் தோட்டப் பயிர்ச் செய்கையின் அடிப்படையில் விருத்திபெற்ற நகர் சார்ந்த பொருளாதார வளர்ச்சியின் விளைவானது. அரச நிர்வாகம், சட்டம் போன்ற துறை களில் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தோருக்கான வாய்ப்புகளும் உருவாகின. வசதி படைத்த சில குடும்பங்க ளிலிருந்து சொந்தச் செலவில் அயல் நாடுகளுக்குச் சென்று படித்து வரும் போக்கு அதையொட்டி உருவானது. இப் பின்னணியிலேயே 1921 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்ற நிறுவனம் உருவானது. அது லண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிறுவப்பட்டு 21 ஆண்டுகளுக்குப் பின்னர் அது இலங்கைப் பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டது. (உண்மையில் 1927 இலேயே பேராதனையில் அப்பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான முன்னெடுப் புக்கள் தொடங்கிவிட்டன).


அதற்கும் அப்பால் யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு அக்குவனாஸ் கல்லூரி போன்றவையும் லண்டன் வெளிவாரிப் பட்டப் படிப்பிற்காக மாணவர்களைப் பயிற்றுவிக்கத் தொடங்கின.

இலங்கையில் உயர் கல்வியின் விருத்தி இந்தியாவின் பெரு நகரங்களான பம்பாய், கொல்கத்தா, சென்னை ஆகியன சார்ந்து உருவான உயர் கல்வி நிறுவனங்களது தோற்றத்துக்குச் சமாந்தரமானது எனலாம்.

பட்டப்படிப்பு என்பது கலைத்துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் மட்டுமே இல ங்கையில் வழங்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுச் சில காலம் பின்பு மருத்துவத் துறையிலும் பொறியியலிலும் பட்டங்கள் வழங்கப் பட்டன. தொழில்சார் துறைகளில் பட்டப் படிப்பிற்கான புலமைப் பரிசில்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் வழங்கி இலங்கையர்களை இங்கிலாந்திற்கு அனுப்பிப் பயிற்றுவித்தது 1930 களின் முற்பகுதியிலேயே என நினைக்கிறேன். அவர்களை விடச் சொந்தச் செலவிற் போய்க் கற்று வந்தவர்களும் இருந்தனர்.

எவ்வாறாயினும் இலங்கையின்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமுறை (குறிப்பாக உயர் கல்வி முறை) தோட்ட உற்பத்தியின் அடிப்படையிலான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உருவாக்கிய பல்வேறு தேவைகளுக்கு ஈடு கொடுப்பதற்குத் தேவையான அளவில் நிர்வாகிகளையும் தொழில் வல்லுநர்களையும் தொடர்ந்தும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்ய இயலாத ஒரு சூழலையொட்டியே விருத்தி பெற்றது என்பதை நாம் காணலாம்.

அந்தச் சூழலில் உயர் கல்வியை நாடினோரின் எதிர்பார்ப்புகள் எவையாக இருந்தனவோ அவையே நேரடிப் பிரித்தானிய ஆட்சி நீங்கிய பின்னும் உயர்கல்வியை நாடினோரின் எதிர்பார்ப்புகளாக நீண்ட காலமாக இருந்து வந்தன.

பிரித்தானியாவில் உயர் கல்வி என்பது அரசாங்க உத்தியோகத்தை மட்டும் இலக்காகக் கொண்டு அமையாத போதும் அதன் கொலனியான இலங்கையில் உயர் கல்வி மட்டுமன்றி உயர் பாடசாலைக் கல்வியுங் கூட அரசாங்க உத்தியோகத்தையே இலக்காகக் கொண்டு அமைந்தது.

இலங்கையின் பொருளாதாரம் தோட்டச் செய்கையை மையப்படுத்திய இயந்திர சாதன உற்பத்தித்துறையையும் அதனை ஆதாரமாகக் கொண்ட வணிகம் என்பதையும் விட்டால் சில அடிப்படை நுகர்பொருட்களின் உற்பத்தி தவிர்ந்து ஒரு உற்பத்திப் பொருளாதாரமாக விருத்தி பெற முனையவில்லை. இவ்விடத்து இந்தியாவின் தலைவர்களது அணுகு முறையிலிருந்து இலங்கையின் தலைவர்களது அணுகுமுறை வேறுபட்டிருந்ததை நாம் காணலாம்.

1948இல் நேரடிக் கொலனி ஆட்சியிலிருந்து விடுபட்ட பின்பு காங்கேசன்துறை சீமெந்து ஆலை, பரந்தன் இரசாயன உற்பத்திச்சாலை, வாழைச்சேனை காகித ஆலை என்ற மூன்றும் நிறுவப்பட்டமை வரவேற்கத்தக்க தெனினும் அது இலங்கையின் தொழில் விருத்திக்கான ஒரு விரிவான நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்ததாகக் கூற இயலாது.

1950களின் முற்பகுதியில் தோட்டப் பயிர் விளைபொருட்களின் ஏற்றுமதியால் கிடைத்த கணிசமான அளவு ஏற்றுமதி வருமானம் தொழில் அபிவிருத்தியில் முதலிடப்படாமை நமது ஆட்சியாளர்களது மங்கலான பொருளாதார நோக்கைப் பற்றி நிறையக் கூறுகிறது.

விவசாய விருத்தி என்ற பெயரில் திட்டமிட்ட குடியேற்றங்களைக் கிழக்கில் நிறுவுவதில் யூ.என். பி.அரசாங்கம் காட்டிய அக்கறையை மீன் வளத்தைப் பயன் பெருக்கவும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதற்குமான தொழில்களை



**பிரித்தானியாவில் உயர் கல்வி என்பது அரசாங்க உத்தியோகத்தை மட்டும் இலக்காகக் கொண்டு அமையாத போதும் அதன் கோலனியான இலங்கையில் உயர் கல்வி மட்டுமன்றி உயர் பாடசாலைக் கல்வியுங் கூட அரசாங்க உத்தியோகத்தையே இலக்காகக் கொண்டு அமைந்தது**

நிறுவுவதில் காட்டியதாகக் கூற இயலாது.

மேற்கண்டவாறான நாட்டின் பொருளாதார முனைப்பு உயர் கல்வித் துறையிலும் தாக்கஞ் செலுத்தியது எனின் மிகையாகாது.

மருத்துவச் சேவையில் நவீன மருத்துவ வசதிகள் நகர்சார்ந்து அமைந்திருந்தமையும் பொறியியல் துறையின் பணி பெருமளவும் ஏலவே உள்ளவற்றைப் பராமரிப்பதிலும் நிறைவு கண்டமையும் உண்மையேயாயினும் சிலரது பயனுள்ள முயற்சிகளால் ஆக்கமான முன்னேற்றங்கள் ஏற்பட்டதை மறுக்க இயலாது.

### தாய்மொழிக் கல்வியின் தாக்கம்

இலங்கையின் உயர் கல்விக்கான தேவை உயர் கல்வி மூலம் அரச உத்தியோகம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பினால் உந்தப்பட்டமையால் சில பாதகமான அரசியல் விளைவுகள் ஏற்பட்டதை நாமறிவோம். எனினும் உயர் கல்விக்கான வாய்ப்பை ஏற்படுத்தியதில் தாய்மொழிக் கல்விக்கும் இலவசக் கல்விக்கும் முக்கியமான பங்கிருந்தது என்பதை மறுக்க இயலாது.

எவ்வாறாயிலும் 1956 வரை ஆங்கில அறிவுடையோரே கல்வியுடையோர் என்று எண்ணும் போக்கு வலுவாக இருந்தது. அது பின்னரும் சிலரிடையேயாவது தொடர்ந்து வந்தாலும் ஆங்கில அறிவில்லாமல் அரசாங்கத்தின் மூலம் எதையுமே செய்விக்க இயலாது என்ற விரக்தி தென்னிலங்கையில் மிகுந்திருந்தது. இச் சூழலிலேயே பண்டாரநாயக்காவின் தலைமையில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அது உயர் கல்வியையும் முக்கியமான சில வழிகளிற் பாதித்தது.

ஆயுர்வேத மருத்துவம் உயர் அங்கீகாரம் பெற்றது போல பௌத்தஞ் சார்ந்த கல்விக்காக நிறுவப்பட்ட வித்யோதய வித்யாலங்கார பிரிவேனாக்களுக்குப் பல்கலைக்கழகத்தகுதி வழங்கப்பட்டது. அரச உதவியுடன் அவை பிற கல்வித் துறைகளிலும் அக்கறை காட்டத் தொடங்கின. எனினும் அங்கு உயர் கல்வியின் தரம் இலங்கைப் பல்கலைக் கழகத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைபாடானதாகவே இருந்து வந்தது. அக்குறைபாட்டை நீக்கி அவற்றை இலங்கைப் பல்கலைக்கழகத்துடனும் பின்னர் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக ங்களுடனும் ஒப்பிடத்தக்க தரத்திற்கு உயர்த்தக் கடும் முயற்சி தேவைப்பட்டது. எனினும் தொடக்கக் காலத்திலிருந்த அடிப்படைக் குறைபாடுகளுட் பல (முக்கியமாகப் பல விரிவுரையாளர்களதும் சில பேராசிரியர்களதும் கல்வி, ஆய்வுத் திறமைகளின் போதாமை) தொடர்ந்தும் இருந்து வந்தன. எனவே ஆற்றலுள்ள மாணவர்கள் அவற்றை நாடவும் தகுதிமிக்க விரிவுரையாளர்கள் அங்கு இணையவும் நீண்ட காலமெடுத்தது.

தாய்மொழிக் கல்விக் கொள்கையை உயர் கல்விக்கும் விரிவுபடுத்தும் தேவை உணரப்பட்டதன் பயனாகப் பல்கலைக் கழகங்களில் தாய்மொழி மூலம் பல்வேறு துறைகளிலும் கற்பிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமை அதற்குத் துணையாக அரச கரும மொழித் திணைக்களம் மேற்கொண்ட கலைச் சொல்லாக்கப் பணிகள் மெச்சத்தக்கன. எனவே பல்கலைக்கழகங்களில் தாய்மொழி மூலக் கலைப்பீடங்களிலும் விஞ்ஞானப் பீடங்களிலும் கற்பிப்பதும் இயலுமாயிற்று. முக்கியமாகப் பாடசாலைக் கல்வி முற்றிலும் தாய்மொழியிலானதாக மாறிய சூழலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1959ஆம் ஆண்டுக்குப் பின்பு தாய்மொழி மூலமே பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் கலைப் பீடங்களில் கற்கத் தொடங்கினர். விஞ்ஞானப் பாடங்களைத் தாய்மொழியிற் கற்பிக்கும் முயற்சி அதற்கான பாடசாலைப் பாட நூல்களின் போதாமையாற் தாமதித்தது. எனினும் பல்கலைக்கழகங்களின் அனைத்துப் பீடங்களிலும் இருந்த மாணவர்களுடைய ஆங்கில மொழியாற்றல் 1960கள் தொட்டுக் குறைந்து வந்தமைக்குப் பாடசாலைக் கல்வியில் ஆங்கிலத்தின் பங்கு குறைந்து வந்தமை ஒரு காரணமாகும்.

எவ்வாறாயினும் தாய்மொழிக் கல்வியின் பயனாக முன்னர் பல்கலைக்கழகப்படிப்பை எண்ணியே இருந்திருக்க முடியாத ஒரு பெருந்தொகையான மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக் கிட்டியமையை எவரும் மறுக்க இயலாது. நம்மிடையே இன்றுள்ள ஆற்றல் மிக்க படைப்பாளிகளிலும் சிந்தனையாளர்களிலும் பெரும்பாலானோர் தமது பாடசாலைக் கல்வியைத் தாய்மொழியிற் பெற்றோராவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

அதேவேளை, உயர்கல்வி என்பது உத்தியோகத்திற்கான கல்வி என்ற மனநிலையின் ஆதிக்கம் தொடர்ந்து வந்த சூழ்நிலையில் ஆக்க இலக்கியத் துறையை விட்டாற் பிற துறைகளில் பொது வாசிப்பிற்கும் புதிய தகவல்களைப் பரவலாக்குவதற்குமான நூல்கள் தாய் மொழியில் போதியளவில் வரவில்லை. சில துறைகளில் அத்தகைய ஒரு நூல் கூட வெளிவரவில்லை. பாடசாலைப் பாட நூல்களும் பரீட்சைப் பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட பயிற்சி நூல்களும் கணிசமான அளவில் வெளிவந்தன. அவற்றுட் பல நல்ல தரமுடையனவாயும் இருந்தன. எனினும் அறிவிற்கான வேட்கையை முழுச் சமுதாயத்திலும் முக்கியமான இளந்தலைமுறையினரிடையே தூண்டுவதற்கான மெச்சத்தக்க முயற்சிகள் சிறு அளவிலேயே மேற்கொள்ளப்பட்டன. இம் முயற்சிகள் உயர் கல்வியின் நோக்கம் நம்மால் விளங்கிக் கொள்ளப்பட்ட விதத்தாலும் அதன் பயனாக உத்தியோக நோக்கிலான கல்விப் போட்டிகள் வலுத்ததாலும் அனைத்திலும் முக்கியமாக ஒரு தெளிவான தேசியப் பொருளாதாரக் கொள்கையும் அதைச் சார்ந்த உயர் பாடசாலைக் கல்வியும் உயர் கல்வியும் அமையாமையாலும் நமது சமுதாயத்தில் அறிவு வேட்கையை வளர்க்க உதவவில்லை.

> தாய்மோழிக் கல்வியின் பயனாக முன்னர் பல்கலைக்கழகப் படிப்பை எண்ணியே இருந்திருக்க முடியாத ஒரு பெருந்தோகையான மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக் கிட்டியமையை எவரும் மறுக்க இயலாது. நம்மிடையே இன்றுள்ள ஆற்றல் மிக்க படைப்பாளிகளிலும் சிந்தனையாளர்களிலும் பெரும்பாலானோர் தமது பாடசாலைக் கல்வியைத் தாய்மோழியிற் பெற்றோராவர் என்பதும் கவனிக்கத்தக்கது

மேற்கூறியவாறான பின்னணியில் நவீன அறிவியலையும் தொழில் நுட்பங்களையும் மக்கள் மத்தியில் தாய்மொழியில் கொண்டு செல்வது இயலாததாயிற்று. இலங்கையை விடக் கல்வியிற் பிற்பட்ட நிலையில் இருந்த பல ஆசிய நாடுகளின் உயர் கல்வி இன்று இலங்கையினதை மேவிவிட்டன என்றால் பெரும்பாலான நாடுகளில் தாய்மொழி மூலமே பல்கலைக்கழகங்களிற் கல்வி புகட்டப்படுவதை அதற்கான முக்கிய காரணமாகக் கொள்ளலாம். அதை விட அந்த நாடுகளின் பொருளாதார விருத்தியும் அதற்குத் துணை செய்தது.

தாய்மொழியில் கல்வி கற்றோருக்கு ஏற்ற பொது வாசிப்புக்கான நூல்கள் தாய்மொழியில் இல்லாமை மட்டுமன்றிப் பரவலாக வாசிக்கும் பழக்கம் குறையத் தொடங்கியமையும் காலப்போக்கில் தாய்மொழி மூலம் கல்வி பெற்றோரின் புலமைக் குறைபாட்டுக் காரணமாயிற்று. இவற்றை எல்லாம் மனதிற் கொள்ளாமல் தாய்மொழிக் கல்வியின் காரணமாகவே நமது கல்வித்தரம் விழுந்துள்ளது என்பது பொருத்தமற்ற கூற்றாகும்.

### பல்கலைக்கழகங்களும் அரசியல் குறுக்கீடுகளும்

பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் புனிதர்கள் என்று யாரும் எதிர்பார்க்க நியாயமில்லை. ஒரு சமூகத்தைப் பீடித்துள்ள அனைத்துச் சமூக நோய்களையும் பல்கலைக்கழகச் சமூகங்களில் நாம் காணலாம். சில சமயம் பல்கலைக்கழகங்களுள் காணக் கூடிய கல்வியாற்றல்கள் பல தவறான காரியங்களைத் திறமையாகச் செய்யவும் உதவலாம். அதேவேளை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த சிந்தனைத் தாராண்மைப் போக்கு அதிகாரத்தின் முன் பணிய மறுக்கும் சுதந்திரமான சிந்தனையாளர்களின் தோற்றத்திற்கும் உதவியுள்ளதையும் இங்கு குறிப்பிட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.

தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் போன்று பேராசிரியர்களின் முன்னால் கைகட்டி ஊமையாக நிற்கும் விரிவுரையாளர்களை இன்றைய இலங்கையிலும் காணுவது கடினம். அவ்வாறான பணிவை எதிர்பார்த்த பேராசிரியர்கள் இருந்துள்ளனர். இன்னமும் சிலர் இருக்கின்றனர். எனினும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் கருத்துக் கூறும் சூழல் எழுபதுகளின் முடிவு வரையிலேனும் வலுவாக இருந்து வந்தது என்று என்னாற் துணிந்து கூற இயலும். அதேவேளை நியமனங்களிலும் பதவி உயர்வுகளிலும் தனிப்பட்ட உறவுகள் எப்போதுமே ஒரு பங்கு வகித்துள்ளதையும் அறிவேன். எனினும் தகுதி குறைந்தோரை நியமிப்பதோ, தகுதி மிகுந்த ஒருவரைத் தவிர்ப்பதோ எளிதில் நிறைவேற்றக் கூடியதாக இருக்கவில்லை. அப்பட்டமான அநீதிகளைத் தட்டிக்கேட்கும் துணிவும் பல்கலைக்கழகச் சமூகங்களில் இருந்து வந்தது. அது இப்போது மிகவும் நலிந்துள்ளமைக்குரிய காரணங்களுள் அரசியல் குறுக்கீடு முக்கியமானது. பல்கலைக்கழகங்களில் கல்வி பற்றிய நோக்கின் சீர்குலைவும் அதே அளவு முக்கியமானது.

தனக்குப் பதவி வழங்கப்படாததை எதிர்த்து 1950களில் உண்ணாவிரதமிருந்த ஒரு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பற்றிப் பலரும் மறந்திருப்போம். ஏனெனில் கட்சி அரசியலுக்கும் மேலாக தனிமனித அரசியல் ஒன்றும் இருந்து வந்ததையும் பற்றிப் பேசப்படுவது குறைவு.

எவ்வாறாயினும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்வித் தரம் உயர்ந்து வந்ததுடன், பல துறைகளிலும் சிறந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததையிட்டு நாம் பெருமைப்படலாம். அதேவேளை பல்கலைக்கழகங்களின் அக்கறைகள் அறிஞர்களின் தனிப்பட்ட உய்வுக்கும் உயர்வுக்கும் மன நிறைவுக்குமாக மேற்கொள்ளப்பட்ட அளவுக்குச் சமூக நோக்குடன் சமூக மேம்பாடு கருதி மேற்கொள்ளப்பட்டனவா என்பது இன்னொரு விடயம். இவ்வாறு சுயமேம்பாடு நாடுகிற பேராசிரியர்கள் வெளியாரின் அரசியல் நோக்கங்கட்கஞக்காகப் பயன்படலாம் என்பதும் கவனத்துக்குரியது.

நமது பல்கலைக்கழகச் சூழலில் அதி முக்கியமான கருத்துச் சுதந்திரம் மாணவர்களின் அரசியல் சுதந்திரமாகும். 1950 களிலிருந்து 1970 கள் வரை பல்கலைக்கழகம் இடதுசாரி அரசியலின் பாசறையாக இருந்ததை நாமறிவோம். வளாகங்களுக்குள் பொலிஸ் நுழைவதைக் கூட நிருவாகத்தினர் கூடுமான வரை தவிர்க்குமளவுக்கு மாணவர்கள் கருத்துச் சுதந்திரத்தைக் கொண்டிருந்தனர். மாணவர் ஆர்ப்பாட்டங்கள் சில வன்முறையில் முடிந்தாலும் பேராதனையிற் சில பீடங்களும் கொழும்பிற் சில பீடங்களுமாகச் செயற்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1966 இல் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்க நிர்வாகத்தினர் எடுத்த முயற்சியின் விளைவாகப் பேராதனையிலிருந்த பல்கலைக்கழகத்துணை வேந்தரின் அதிகார பூர்வ இல்லத்திற்குத் தீ வைக்கப்பட்ட பின்பு துணைவேந்தர் அங்கு அடியெடுத்து வைக்காதது போகப் பல்கலைக்கழகத்தின்

> தாய்மொழியில் கல்வி கற்றோருக்கு ஏற்ற பொது வாசிப்புக்கான நூல்கள் தாய்மொழியில் இல்லாமை மட்டுமன்றிப் பரவலாக வாசிக்கும் பழக்கம் குறையத் தொடங்கியமையும் காலப் போக்கில் தாய்மொழி மூலம் கல்வி பெற்றோரின் புலமைக் குறைபாட்டுக் காரணமாயிற்று. இவற்றை எல்லாம் மனதிற் கொள்ளாமல் தாய்மொழிக் கல்வியின் காரணமாகவே நமது கல்வித்தரம் விழுந்துள்ளது என்பது பொருத்தமற்ற கூற்றாகும்

அடுத்த துணை வேந்தராகப் பல்கலைக்கழகஞ்சாராத அரச அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இதை நாம் ஒரு முக்கியமான வெளி அரசியல் குறுக்கீடென்று கொண்டால் 1970களிலிருந்து நடந்தவை அப்பட்டமான குறுக்கீடுகளாகவும் இன்று நடப்பவை வெட்கக்கேடான குறுக்கீடுகளாகவும் இருக்கக் காணலாம்.

1961 இல் பேராதனையில் இருந்து கலைப்பீடத்திற்கு அனுமதிக்கான தகுதியை ஒரு முக்கிய ஆட்சித் தலைவரின் மகன் பெறத் தவறியதால் மாணவரின் அனுமதியை இரு மடங்காக்க முடிவெடுக்கப்பட்டது. இவ்வாறு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கட்கு விடுதி வசதிகள் வழங்கப்படவில்லை. அதனால் ஏற்பட்ட சிக்கல்களைத் தவிர்க்கும் முகமாகக் கொழும்பில் மேலுமொரு கலைப்பீடம் நிறுவப்பட்டு மேலதிகமான மாணவர்கள் அங்கு பயிற்றப்பட்டனர்.

அது போன்றே 1968 இல் யூ.என்.பி.யின். ஆட்சியில் கூட்டாளிகளாக இருந்த தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் சிலரது நெருக்கு வாரத்தால் 120 மாணவர்களுக்காகத் திட்டமிடப்பட்ட பேராதனைப் பொறியியற் பீடத்திற்கு 150 பேர் அனுமதிக்கப்பட்டனர். (இன்று அங்கு வருடமொன்றுக்கு 400க்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டாலும் அனுமதி அதிகரிப்பு அரசியல் நெருக்கு வாரங்களால் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் மூலம் நிகழ்ந்ததேயொழிய எவ்விதமான திட்டமிடலின் அடிப்படையிலுமல்ல).

1970 ஆம் ஆண்டு பொறியியற் பீட அனுமதியில் தமிழரின் தொகை 80 சதவீதத்தை எட்டிய நிலையில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டு மொழிவாரியாக அனுமதியின் விகிதாசாரம் தலைகீழாக்கப்பட்டது. அதன் அரசியல் பின் விளைவுகளை விவரிக்க இங்கு இடம்போதாது. எனினும் உயர்கல்வியில் அந்த நிகழ்வு ஒரு பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது.

விஞ்ஞானப் பாடங்களுக்கான க.பொ.த. (உயர் நிலை) செய்முறைப் பரீட்சை அடுத்த ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டது. அதன் நோக்கம், விஞ்ஞான ஆய்வு கூட வசதிகளற்ற தென்னிலங்கைப் பாடசாலைகளின் வாய்ப்புகளைக் கூட்டுவது என்பது போகப், பெருகி வந்த புதிய பாடசாலைகளில் ஆய்வு கூட வசதிகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்கவும் அது உதவியது. அதன் மூலம் கல்விச் செலவின் உயர்வு கொஞ்சம் தடுக்கப்பட்டது உண்மை எனினும் மாணவர்களின் செய்முறை ஆற்றல்கள் பெரும்பாதிப்புக்குள்ளாயின. (ஒரு வெப்பமானியைக் கண்ணாற் கண்டிராத மாணவர்களைக் கூட நான் பேராதனை பொறியியற் பீடத்தில் சில ஆண்டுகள் முன்னம் சந்தித்திருக்கிறேன் என்றால் மாணவர்கள் எந்த விதமான விஞ்ஞான ஆற்றல்களுடன் பல்கலைக்கழகத்திற்கு புகுகின்றனர் என யாரும் ஊகிக்கலாம்).

அடுத்த அதிரடியாக 1971 ஜே.வி.பி. எழுச்சி அமைந்தது. படித்த கிராம மாணவர்களதும் இளைஞர்களதும் அதிருப்திக்கு அதில் முக்கிய பங்கு இருந்தது. மட்டுமன்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்கலைக்கழகங்களிலும் ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் வலுவாக இருந்தன. எனவே பல்கலைக்கழகக் கல்வியைக் கொஞ்சம் பரவலாக்குவதுடன், பல்கலைக் கழகங்களின் சுயாட்சியைப் பறிக்கும் நோக்குடன் பல்கலைக்கழகங்களுக்கான புதிய சட்ட வரைபு புகுத்தப்பட்டது. அதன்படி 1974 முதல் வித்யோதய, வித்யாலங்கார பல்கலைக்கழகங்கள் புதிதாக அறிவிக்கப்பட்ட University of Srilanka என்ற பல்கலைக்கழகத்தின் வளாகங்களாயின. தொழில் நுட்பவியலாளர்களைப் பயிற்றுவிக்க நிறுவப்பட்ட கட்டுப்பெத்த தொழில் நுட்பவியற் கல்லூரியும் ஒரு வளாகமானது. அங்கு வழங்கப்பட்ட உயர் "டிப்ளோமா'' ஒரு பல்கலைக்கழக பொறியியல் பட்டமாக அறிவிக்கப்பட்டது. அதன் மூலம் பொறியியல் பட்டதாரிகளின் தொகை இரு மடங்காக இயலுமான போதிலும் நாட்டிற்குத் தேவையான உயர் நிலைத் தொழில் நுட்பவியலாளர்களுக்கு ஒரு தட்டுப்பாடும் ஏற்பட்டது. பல்கலைக் கழக முறையில் நடந்த மாற்றத் தின் உருப்படியான ஒரு விளைவு யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டமையாகும்.

புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணைய அரசாங்கத்தினது (முக்கியமாகக் கல்வி அமைச்சினது) கருவியாகவே இயங்கத் தொடங்கியது. அச் செயற்பாடு இப்போது மேலும் மோசமாகியுள்ளதை நாமறிவோம்.

பல்கலைக்கழக மானிய ஆணையமும் பல்கலைக்கழகத் துணை வேந்தரும் அரசியற் கருவிகளாகச் செயற்பட்டதுடன், ஆணையமே பல்கலைக்கழக அனுமதிகளை நிர்ணயித்த நிலையில் பேராதனையிலிருந்து பொறியியற் பீடத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் புக விரும்பிய தகுதிமிக்க மாணவர்கள் கட்டுப்பெத்த, கொழும்பு வளாகங்களுக்குக் கட்டாயமாக அனுப்பப்பட்டனர். பல்கலைக்கழக நூலகங்களுக்கு அத்தியாவசியமான ஆய்வுச் சஞ்சிகைகளைப் பெற இயலாமல் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு சில துறைகளில் இருந்து வந்த வலுவான ஆய்வுப் பாரம்பரியத்திற்கும் குழிபறிக்கப் பட்டது. அதேவேளை, புதிதாக நிறுவப்பட்ட வளாகங்கள் இச் சூழலைப் பயன்படுத்தியும் இன்னொரு புறம் கடுமையான முயற்சிகளாலும் தம்மை மேம்படுத்திக் கொண்டன.


எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானிய ஆணையத்தினதும் பல்கலைக்கழகத் துணைவேந்தரதும் மிகையான அதிகாரம் பல்கலைக்கழகங்களின்பல மட்டங்களிலும் அதிருப்திக்கு வழிகோலியது. பேராதனையில் நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையிலுமான முரண்பாடுகளும் வலுத்தன. 1976ஆம் ஆண்டு நடந்த ஒரு மாணவர் போராட்டத்தின் போது நடந்த பொலிஸ் துப்பாக்கிச் சூடு ஒரு மாணவனைப் பலி கொண்டமை, அரசாங்கத்திற்கு எதிரான ஒரு பிரசாரக் கருவியாகியது. அதை யூ.என்.பி. நன்கு பயன்படுத்தியது.

1977 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் 1978 இல் இலங்கை (ஸ்ரீ லங்கா) பல்கலைக் கழகத்தைத் தனித்தனிப் பல்கலைக் கழகங்களாகப் பிரிப்பதற்கும் புதிய பல் கலைக்கழக விதிகட்கும் வழிகோலியது. மாணவர் சங்கங்கள் மீதான தடை அவற்றில் முக்கியமானது. உடனடியாக நியமிக்கப்பட்ட பல்கலைக்கழகத்துணை வேந்தர்கள் அரசாங்கத்திற்கு மிக நெருக்கமானோராக இல்லாவிட்டால் அதனுடன் ஒத்துழைக்கக் கூடியோராக இருந்தமையும் தொடர்ந்தும் துணை வேந்தர்களை அரசாங்கமே நியமிக்கும் போக்கு 1983ஆம் ஆண்டின் வன்முறைக்குப் பின்பான நாட்டின் அரசியற் சூழலும் பல்கலைக்கழகங்களுக்குள் அரசியல் கருத்துச் சுதந்திரத்திற்குப் பெரும் தடையாகின. புதிதாக நிறுவப்பட்டு வந்த பல்கலைக்கழகங்கள் பொதுப்பட அரசியல் குழந்தைகளாகவே பிறந்து அரசியற் குறுக்கீட்டுச் சூழலிலேயே வளரத் தொடங்கின. பேரினவாத அரசியலும் தமிழ்த் தேசிய அரசியலும் பின்னர் பிரதேச அரசியலும் முஸ்லிம் தேசிய அரசியலும் பல்கலைக்கழகங்களில் இன்றளவும் ஆதிக்கஞ் செலுத்துகின்றன. ஆயினும் அனைத்தினும் மோசமாக இப்போது கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டுச் சுய மேம்பாட்டுக்காக ஆளுங்கட்சியினதும் அமைச்சர்களதும் பிரமுகர்களதும் ஆதரவுடன் நடத்தப்படுகிற ஒரு அரசியல் நிலை கொண்டுள்ளது. பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் நியமனம் முதலாகப் பல்கலைக்கழகக் கல்வித்துறைத் தலைவர் நியமனங்கள் வரை இவ்வாறான அதிகாரக் கலப்புடைய சுய நல அரசியல் பல்கலைக் கழகங்களைப் பிடித்தாட்டுகிறது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன உறவுகள் நிலைவரம்

# முஸ்லிம் விரோதத்தின் அரசியற் பின்னணி



ராஜன் பிலிப்ஸ்

## இன விரோதச் சக்திகள் எந்தவிதமான தடங்கலுமின்றி சிறுபான்மையினத்தவரை தாக்குவதற்கான சூழ்நிலை மீண்டும் தலையெடுத்துள்ளது

1983 ஆடிக்கலவரம் மனித நாகரிகத்திற்கு ஏற்பட்ட ஒரு நெருக்கடி என்று அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தன கலவரம் முடிந்த பின்னர் கூறியதைப் பலரும் மறந்திருக்கலாம். ஜே.ஆரின் ஆட்சியிலேதான் தமிழருக்கு எதிரான அந்த இனவொழிப்புக் கலவரம் நடந்தது என்பதை நாம் என்றும் மறக்க முடியாது. அதேசமயத்தில், ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் குறுங்கால நன்மைகளின் காரணமாக 1983 ஆடிக் கலவரம் நாட்டை முற்றாக முறித்துவிடவில்லை. போரின் மத்தியிலும் பொருளாதாரம் ஓங்கியே வளர்ந்தது. இன்றைய நிலைமையோ 1983ஆம் ஆண்டுப் பொருளாதாரச் சூழமைப்பிலிருந்து முற்றாக வேறுபட்டது. என்றுமில்லாத வகையில் இலங்கை பொருளாதார நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கி அசைகின்றது. இந்த நிலையில் புதியதொரு ஆடிக்கலவரம் ஏற்பட்டால் அது இந்த நாட்டை ஆழ்ந்த குழியொன்றினில் புதைத்து ஒழித்துவிடும். இத்தகைய ஒரு விளைவைத் தவிர்ப்பதே இன்றைய அரசாங்கத்தின் முதற்கடமையாக இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அந்தப் பெரும் பொறுப்பை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமல் தட்டிக் கழித்தே செயற்படுகின்றது.

இந்தப் பின்னணியில், லத்தீப் பாரூக் என்ற முஸ்லிம் அரசியல் அவதானி, இலங்கை மீண்டுமொரு ஆடிக் கலவரத்தை நோக்கிச் செல்கின்றதா, இப்புதிய கலவரம் தமிழ் மக்களையின்றி முஸ்லிம் மக்களையே குறிவைத்து இடம் பெறுமா என்கின்ற மனக் குழப்பமான கேள்வி களை எழுப்பி ஆங்கில அரசியற் கட்டுரை ஒன்றை மிகப் பொறுப்பான முறையில் சமீபத்தில் எழுதியுள்ளார். பாரூக்கின் கேள்விகளும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இன்று நடந்து வருகின்ற பிரசாரத்தின் பின்னணியைப் பற்றிய அவரது கருத்துகளும், தமிழ் பேசும் மக்களின் அரசியற் போக்கில் அக்கறை கொண்ட அனைவரும் நன்கு கவனிக்க வேண்டியவையாகும்.

### தமிழ் பேசும் மக்கள்

இலங்கைத் தமிழர், முஸ்லிம் மக்கள், இந்தியத் தமிழர் என்று சமூக ரீதியாகப் பிரிந்திருந்த மூன்று இனங் களை மொழியின் அடிப்படையில் அரசியல் ரீதியாக ஒருமைப்படுத்த முயன்றமை தந்தை செல்வநாயகத்தின் அரசியல் முயற்சிகளில் மிக முக்கியமான தொன்றென தமிழ் அரசியல் வரலாற்றாளர் கூறுவர். இந்த ஒற்றுமைக் குடைக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசித்த முஸ்லிம் மக்களே உட்படுத்தப்பட்டனர். ஏனைய மாகாணங்களில் இருந்த முஸ்லிம் மக்களை தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாடு உட்படுத்தவில்லை. வடக்கு, கிழக்கு கீழ் மாகாணங்களிலும், இந்த ஒற்றுமைக் குடை எல்லோரையும் உட்படுத்தும் வகையில் முழுதாக விரிக்கப்படவில்லை. பின் வந்த போர்க் காலத்திலோ முழு தாக விரிக்கப்படாத அக்குடை பல விதத்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லும் முறிக்கப்பட்டது. ஒரு புறத்தில் பிரித்தாளும் தந்திரத்தோடும் தமிழ் ஈழக் கோரிக்கையைச் சமாளிப்பதற்காகவும், ஜயவர்தன அரசாங்கம் இந்தியத் தமிழ் அரசியலாளரையும், முஸ்லிம் இன அரசியலாளரையும் அரவணைத்துச் செயற்பட்டது. மறுபுறத்தில், விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் குடியகற்றப்பட்டதும், கிழக்கு மாகாணத்தில் பிரச்சினையின்றி அயலவராக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையில் பகைமைகள் ஏற்பட்டதும் போர்க் காலகட்டத்தின் வேதனைக்குரிய விளைவுகளாகும். இந்தச் சமயத்தில்தான், எம்.எச்.எம்.அஷ்ரப் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாகியது.

முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கம் தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாட்டுக்கும் புறம்பாக முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், அடையாளத்தையும் முன் வைத்து இலங்கை அரசியலில் ஒரு புதிய அரசியற் குரலாக அமைந்தது. அது வரைக்கும், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய பெரும்பான்மைக் கட்சிகளின் உள்ளும், சிற்சில வேளைகளில் தமிழ் அரசியல் கட்சியினுள்ளும் தமது அரசியற் பிரதி நிதித்துவத்தை நடைமுறைப்படுத்தி வந்த முஸ்லிம் மக்கள், நேரடியாகத் தமது பிரதிநிதித்துவத்தை பிரகடனப்படுத்தும் வாய்ப்பை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்படுத்தியது. தீவு முழுவதிலும் பரந்து வாழ்கின்ற முஸ்லிம் மக்களுக்கு கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்ட ஒரு பிரதேசவாரியான அரசியல் அடிப்படையையும் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்படுத்தியது.

அரசியற் பிரதிநிதித்துவம் எவ்வாறாயிருப்பினும், இன ரீதியான அதிகாரப் பங்கீட்டுப் பிரச்சினை அடிப்படையான முறையிற் தீர்க்கப்படாவிட்டால் இலங்கை அரசியலில் முற்போக்கான மாற்றம் ஏதும் நிகழப்போவதில்லை. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் முழுமையான நிறைவேற்றமும் கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் நிறைவேற்றமும் புதிய அரசியற் பாதையொன்றிற்கு அடித்தளமாகப் பாவிக்கப்படலாம். இந்த அடித்தளத்தை அமைப்பதற்கு தமிழ் பேசும் மக்களது அரசியல் இயக்கங்கள் திட்டமிட்ட ரீதியில் இணைந்து செயற்படவேண்டும். இத்தகைய இணைப்புச் செயற்பாடின்றி, தனித்துச் செயற்பட்டால் இலங்கை அரசாங்கத்தின் மீது அரசியற் தீர்விற்கான




**முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளிலிருந்து தம்மை விலத்திக்கொள்ள சிரேஷ்ட அரசாங்கத் தலைவர்கள் முயற்சிக்கவில்லை. அச்செயற்பாடுகளை கண்டித்துக் குரலெழுப்புவதுமில்லை. அரசாங்கம் முழுமனதாக இச் செயற்பாடுகளை எதிர்த்தால் அவை வேகம் குறைந்து நின்றுவிடும் என்பதில் ஐயமில்லை.**

அழுத்தம் எதையுமே ஏற்படுத்த முடியாது. நீண்ட ஈழப்போரினால் தமிழ் அரசியலில் சாதனை ஏதும் ஏற்பட்டதாகக் கூற முடியாது. அதே போன்று, முஸ்லிம் காங்கிரஸ் உருவாகி 30 ஆண்டுகள் சென்றுவிட்டாலும், முஸ்லிம் மக்கள் அரசியல் ரீதியாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் அடையவில்லை. நாடற்றவர் என்ற பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் மலையகத் தமிழர் சமூகத்திலும் சிறப்பான அபிவிருத்திகள் இன்னும் இடம் பெறவில்லை. இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் என்ற அரசியற் கோட்பாடு அந்த மக்கள் அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய ஒரு கருவியாகப் பாவிக்கப்படலாம்.

அரசாங்கத்தைப் பார்த்தால், அரசியற் தீர்வுக்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதையுமே நாம் காண்பதற்கில்லை. அத்தீர்வுக்கான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதிலேயே அரசாங்கம் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பின்னணியிலேயே முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள்

பாரூக் தனது கட்டுரையில், போருக்குப் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற செயற்பாடுகளையும் அவற்றின் கால நிரையையும் தெளிவாகத் தெரிவித்துள்ளார். முஸ்லிம் விரோதப் பிரசாரம் பிரதானமாக இணையம் ஊடகம் மூலமாகவே பரப்பப்படுகின்றது. சிங்களத்தில் எட்டும் ஆங்கிலத்தில் பத்துமாக 18 இணையத்தளங்கள் முஸ்லிம் விரோதப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. பத்திரிகைக் கட்டுரைகளும் புத்தகங்களும் வெளியிடப்படுகின்றன. புலால் உண்பதற்காக விலங்குகளை கொல்வதை எதிர்ப்பது என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் இனவெறியைத் தூண்டக்கூடிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்திற்கும் மேலாக, கடந்த ஓராண்டு காலத்தில் முஸ்லிம் இனத்தாரின் பள்ளிவாசல்கள் இனவெறித் தாக்குதல்களுக்கு இலக்காகி உள்ளன. அநுராதபுரம், தம்புள்ள, பலாங்கொடை, தெஹிவளை என்ற இடங்களோடு கொழும்பு நகரின் புல்லஸ் ரோட்டில் உள்ள பள்ளி வாசல்கள் தாக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதல்கள் பண்பற்ற வெறிக்கூட்டத்தின் சாதனைகள் மட்டுமல்ல, பௌத்த பிக்குகளின் வழி நடத்தலோடும், பொலிஸ் அதிகாரிகளின் ஆதரவோடும் தான் இத்தாக்குதல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றன. முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளோடு வவுனியாச் சிறையில் தமிழ்க் கைதிகள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதையும் அவரில் ஒருவர் உயிர் இழந்தமையையும் இணைத்துப் பார்த்தால், மீண்டும் ஒரு ஆடிக் கலவரமா என்ற கேள்வியை யதார்த்தம் அற்ற ஒரு மாயை என்று நிராகரிக்க முடியாது.

முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளுக்கு காரணமாயிருப்பவர்கள் சிங்கள இனத்தில் ஒரு கையளவிலான குழுவினரே என்றும், பெரும்பான்மையான சிங்களப் பொது மக்களும், அரசியல் வாதிகளும், பத்திரிகையாளரும்,பௌத்த பிக்குகளும் இச்செயற்பாடுகளிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டுவிட்டார்கள் என்று பாரூக் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக, முஸ்லிம் விரோதக் குழுவினர் சிங்களத் தேசியத் தீவிரவாதிகளே என்றும் பாரூக் கூறியுள்ளார். இத்தீவிரவாதிகள் 2009 இல் முடிந்த போருக்குப் பின்னால் அரசாங்க அமைப்பில் முக்கியமான இடங்களில் தம்மை இருத்திக் கொண்டு விட்டார்கள். தமிழர் தமிழகத்திற்கும், முஸ்லிம்கள் சவூதி அரேபியாவுக்கும் துரத்தப்பட வேண்டுமென்பது இத்தீவிரவாதிகளின் இனவெறிக் கொள்கையாகும். தமிழரை முதல் முடிப்போம், பின்னர் முஸ்லிம்களைப் பார்ப்போம் என்று குரைத்துத் திரிந்த இத்தீவிரவாதிகள், இன்று விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னணியில் தமது இனவெறித் திட்டங்களை முஸ்லிம் இனத்தை நோக்கித் திருப்பியுள்ளனர் என பாரூக் வாதித்துள்ளார்.

இன்னும் மறுமொழி கிடைக்கப்பெறாத கேள்விகளையும் பாரூக் எழுப்பியுள்ளார். யார் இந்தத் தீவிரவாதிகள்? பள்ளி வாசல்களைத் தாக்கும் குண்டர்கள் யார்? எங்கு இருந்து இவர்கள் முளைத்தார்கள்? இவர்களது பிரசாரத்திற்கும், வீதி நடவடிக்கைகளுக்கும் பணம் கொடுப்பதும் செலவிடுவதும் யார்? என்றெல்லாம் பரூக் கேட்டுள்ளார், இவ்வினாக்களுக்கு யாரிடமிருந்து நாம் உத்திரத்தை எதிர்பார்க்கலாம்?

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இத் தீவிரவாதிக்ளைக் கண்டித்தோ அல்லது இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிக்கவோ எதுவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இது புதிதான தொன்றல்ல. பிரதம மந்திரி தி.மு.ஜயரட்ன விசாரணை ஏதுமின்றி தம்புள்ள பள்ளிவாசல் மாற்றிடத்திற்குச் செல்ல வேண்டும் என்று அறிவித்தது முஸ்லிம் மக்களுக்கு பெரும் வேதனையாகிவிட்டது. பொலிஸ் அதிகாரிகள் நாட்டிலுள்ள பள்ளி வாசல்களினதும் மதரஸாப் பாடசாலைகளினதும் எண்ணிக்கை விபரங்களைக்



கேட்டிருப்பதும் அதிர்ச்சியை அளித்துவிட்டது. இதற்கும் மேலாக, அல்-ஹைய்டா, தலிபான் போன்ற வெளிநாட்டு இயக்கங்களை ஆதரிப்பவர்கள் என்று சந்தேகிக்கப் படக்கூடிய இலங்கை முஸ்லிம்களைத் தண்டிப்பதற்கான சட்ட மூலங்களை அரசாங்கம் தயாரிக்கின்றதென்ற செய்தியும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும் அங்கலாய்ப்பை ஏற்படுத்திவிட்டது.

மேற்கு நாட்டு நிறுவனங்களில் இருந்து பண உதவி பெற்றுச் சமூகப்பணி புரியும் அரசசார்பற்ற நிறுவனங்களை (NGOS) தேசத்துரோகிகள் என்று குற்றம் சாட்டுகின்ற அரசாங்கம், முஸ்லிம் விரோ தத் தீவிரவாதிகளுக்குப் பண உதவி அளிப்பவர்கள் யார், அவர்களது அரசியற் குறிக்கோள்கள் என்ன என்பதைக் கண்டுபிடிக்க அரசா ங்கம் எத்தனிக்காதது ஏன் என்ற கேள்வி நியாயமானதொரு கேள்வி, கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வி. அதேவேளையில், முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளிலிருந்து தம்மை விலத்திக்கொள்ள சிரேஷ்ட அரசாங்கத் தலைவர்கள் முயற்சிக்கவில்லை. அச் செயற்பாடுகளை கண்டித்துக் குரலெழுப்புவது மில்லை. அரசாங்கம் முழு மனதாக இச்செயற்பாடுகளை எதிர்த்தால் அவை வேகம் குறைந்து நின்று விடும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான நிலையில் அரசாங்கத்தையும் முஸ்லிம் விரோதப் பிரசாரத்தையும் செயற்பாடுகளையும் இணைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது. இத்தகைய இணைப்பின் அரசி யற் பின்னணி என்ற கேள்வி அரசியல் ஆய் விற்குப் பொருத்தமான கேள்வியாகும்.

ஒரு புறத்தில் பார்த்தால், முஸ்லிம் விரோதச்செயற்பாடுகளை அரசாங்கள் ஆதரிப்பதை எளிதாக விளங்கிக் கொள்ளவும் முடியவில்லை. சிங்ள மக்களிடையே தனக்குள்ள ஆதரவை வலுப்படுத்திக் கொள்வதற்கு முஸ்லிம் விரோதக் கொள்கைகளும் செயல்களும் அரசாங்கத்திற்குத் தேவையில்லை.வெளியுலக பீதியில் பார்த்தால் முஸ்லிம் விரோதம் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டாத ஒன்றென்றே கூற வேண்டும். இலங்கைப் பொருளாதாரமும் மக்களும் இஸ்லாம் மத மத்திய கிழக்கு நாடுகளில் இன்று பெருமளவாகத் தங்கியுள்ளன. பல்லாயிரக்கணக்கான இலங்கை மக்கள் அங்கு வேலை புரிகின்றார்கள். மத்திய கிழக்கு இலங்கையின் முக்கியமான ஏற்றுமதிச் சந்தையில் ஒன்றாகும். அதிமுக்கியமான பெற்றோலியப் பொருட்களும் மற்றும் உல்லாசப் பிரயாணிகளும் மத்திய கிழக்கிலிருந்துதான் இலங்கைக்கு வருகின்றன. இலங்கைக்கு வெளிநாட்டுப் பண உதவி செய்வதிலும் அந்நாடுகளே முன்னிற்கின்றன. இந்த நிலையில், முஸ்லிம் விரோதத்தை இலங்கையில் பரப்பி, மத்திய கிழக்கு நாடுகளின் பகைமையைப் பெற்றுக் கொள்வது புத்திசாலித்தனமான காரியமல்ல.

இன்னொரு புறத்திற் பார்த்தால், இலங்கை மக்களிடையே மதச்சார்பற்ற பொது வாழ்க்கைப் பண்பாடு நன்கு செழித்தே இருக்கின்றதெனக் கூறலாம். இந்திய நாட்டின் அரசியல் அமைப்பு மதச்சார்பற்ற அமைப்பாக (secular constitution) இருந்தாலும்,மதவேறுபாடுகள் இந்திய மக்களிடையே நன்கு வேரூன்றிவிட்டன. இதற்கு மாறாக இலங்கையைப் பார்த்தால், அரசியலமைப்பு பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்தாலும், மக்கள் மத்தியிலே எல்லாச் சமயங்களையும் மதித்தும் வரவேற்றும் வாழ்கின்ற பண்பு நன்கு பரவியுள்ளது. மொழி சார்ந்த இனவாத அரசியலின் இருண்ட நாட்களிலும் மத ஒற்றுமை மங்காத விளக்காக ஒளி வழங்கியது. போர் முடிந்த பின்னர், இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வளர்ப்பதாகக் கூறும் ராஜபக்ஷ அரசாங்கம் மத விரோதச் செயல்களைக் கண்டிக்காமலும் அவற்றை மறைமுகமாக ஆதரித்து ஆட்சி புரிவதன் அர்த்தம் என்ன? இந்த அரசியல் முரண்பாடுகளுக்கான காரணங்கள் என்ன?

முதலாவதாக, சட்டத்தையும் ஒழுங்கையும் கட்டுப்பாடின்றி அவமதிப்பவர்கள் அரசாங்கத்திற்கு வெளியேயல்ல அதனுள்ளேயே இருக்கின்றார்கள். அவர்கள் கண்டிப்போ தண்டனையோ இன்றி எதேச்சாதிகாரமாக தாம் நினைத்தபடியே நடமாடுகிறார்கள். சட்டத்தைக் காக்கும் பொறுப்புடைய பொலிஸ் நிர்வாகம் அரசியற் தலையீட்டாலும் ஊழல் பயிற்சிகளாலும் உழுத்துப் போய்விட்டது. ஒழுங்கின்மையும் சட்ட அவமரியாதையும் ஊறிக் கிடக்கின்ற பண்புப் பின்னணியில் தான் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. வேறு விதமாகக் கூறினால், இன விரோதச்சக்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான தடங்கலும் இன்றி சிறுபான்மை இனத்தவரைத் தாக்குவதற் கான சூழ்நிலை மீண்டும் தலையெடுத்துள் ளது. தமிழருக்கு பாடம் படிப்பித்தாயிற்று, இனி முஸ்லிம்களைப் பார்ப்போம் என்ற அகங்காரமும் பல மட்டங்களிலும் பரவியுள்ளது.

இந்த அகங்காரத்தோடு இணைந்து இருப்பது தேசியத் தீவிரவாதிகளின் இன வெறிக் கருத்துகளும் இன ஒழிப்புத் திட்டங்களுமே யாகும். இதுவே, எனது கருத்தில்,முஸ்லிம்விரோதத்திற்கானஇரண்டாவது காரணமாகும். எண்ணிக்கையிற் குறைந்தவராயினும், பேரினத் தேசிய தீவிரவாதிகள் அரசாங்கத்தில் முக்கியமான இடங்களையும் பதவிகளையும் பிடித்துக் கொண்டுள்ளார்கள்என்றுபாரூக்கூறியதை நாம் மீண்டும் நினைவிலிருத்திக் கொள்ளலாம். போர் முடிந்து விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பிறிதொரு அரசியற் தீர்வுக்கான தேவையென்ன என்ற கேள்வி சிங்களத் தேசிய தீவிரவாதத்தின் கேள்வியாகும். அத்தோடு, தமிழர்கள் தமிழகத்திற்கும், முஸ்லிம்கள் சவூதி அரேபியாவுக்கும் துரத்தப்படவேண்டும் என்று குரலெழுப்புவதும் தேசியத் தீவிரவாதிகளே. இலங்கையில் இலங்கையரே இருக்கின்றார்கள், அவரிடையே பெரும் பான்மை இனத்தவர், சிறுபான்மை இனத்தவர் என்ற வேறுபாடில்லை, தேசப்பற்றுடையோர், தேசத் துரோகிகள் என்ற வேறுபாடு மட்டுமே இருக்கின்றது என்றவாறாக ஜனாதிபதி ராஜபக்ஷ போரின் பின்னால் கூறியதும் இங்கு நினைவுக்கு வருகின்றது.

சிங்களத் தேசியத் தீவிரவாதத்தின் ஒரு கூறாக அரசாங்கத்தின் பிரித்தாளும் கொள்கையும் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

இலங்கைத் தமிழர், முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழர் ஆகியோரின் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் உள்ளும் புறமுமாகச் செயற்பட்டு வருவது நாம் அறிந்ததே. முஸ்லிம் காங்கிரஸ் கூட அரசாங்கத்திற்கு ஆதர வளிப்பதா அல்லது எதிர்ப்புக் கொடுப்பதா என்ற அடிப்படையில் பல தடவைகளிலும் பிளவுபட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாக தமிழ்-முஸ்லிம் இனத்தவரிடையே பகைமையையும் வேற்றுமையையும் தூண்டுகின்ற பணியையும் அரசாங்கம் புரிந்து வருகின்றது. குறிப்பாக, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் அமைச்சர், மன்னார் கத்தோலிக்க திருச்சபையின் ஆயரை முஸ்லிம் விரோதியெனவும் தம்புள்ளையில் பள்ளி வாசலைத்தாக்கிய புத்தபிக்குவைப் போன்றவரெனவும், பாராளுமன்றத்தில் உரையாற்றியதை இங்கு உதாரணமாகக் கூறலாம். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற

**கிழக்கு மாகாணத்தில் வென்று விட்டால் அந்த வெற்றி அரசாங்கத்தின் அரசியற்போக்குக்கு எல்லா இனங்களும் சேர்ந்து அளித்த வெற்றி என்று உலகமெல்லாம் வெட்கமின்றி அரசாங்கம் பறை சாற்றும். உண்மை நிலைமையோ வேறு என்பது கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களுக்குத்தான் தெரியும்**



முஸ்லிம் அமைச்சரொருவர், லத்தீவ் பாரூக் போன்று சிங்கள, முஸ்லிம் விரோதப் பிரசாரத்தைக் கண்டிக்காமல், மன்னார் கத்தோலிக்கத் தமிழ் ஆயரைப் பாராளுமன்றத்தில் தாக்கிப் பேசியது மிகவும் வருத்தத்துக்குரியது. இந்த முரண்பாட்டின் அரசியற் பின்னணியோ கண்டனத்துக்குரியது. அந்தக் கண்டனம் மன்னார் மக்களாலேயே மிகப் பகிரங்கமான வகையிற் கொடுக்கப்பட்டுள்ளது. ஐயாயிரத்துக்கும் மேலான மக்கள் முஸ்லிம்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடின்றிக் கூடி அமைச்சரைக் கடிந்தும் ஆயரை ஆதரித்தும் மன்னாரில் குரலெழுப்பிவிட்டனர்.

மேலுமொரு காரணம் இந்த அரசாங்கத்தின் ஆளுந் திறமையின்மையும் நிர்வாகப் பலவீனமும் என்று நான் கூறுவேன். கட்டற்ற அதிகாரத்தைக் குவி த்து வைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்திற்கு நேர்முறையாகத் திட்டமிட்டுச் செயற்படும் திறமை சற்றேனும் இல்லை என்றே கூற வேண்டும். அத்தோடு, எடுத்த எந்தக் காரியத்தையும் கவிட்டுக் கொட்டுகின்ற அசாதாரணமான லாயக்கு அரசாங்கத்திடம் இருக்கின்றது. அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள எந்தத்துறையை எடுத்துப் பார்த்தாலும் செயற்திறமையின்மையும் கவிட்டுக் கொட் டும் பங்கும் வெள்ளெனத் தெரிந்து விடும். இவற்றோடு சேர்ந்து பேரினத் தீவிரவாதச் சக்திகள் செயற்படும் பொழுது ஏற்படும் விளைவுகள் பாரதூரமாகவே போய்விட்டன. தமிழ் அரசியற் பிரச்சினையைப் பற்றிய தீர்வின்மையும் முஸ்லிம் விரோதப் பிரசாரங்களும் செயற்பாடுகளும் இத்தகைய விளைவுகளேயாகும்.

இந்த நிலையில், எதுவித காரணமுமின்றி, தேவையற்ற முறையில் கிழக்கு மாகாண முட்பட மூன்று மாகாணத் தேர்தல்களை நடத்த வேண்டுமென எதேச்சாதிகாரமான வகையில் அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. மாகாண அமைப்பு உருவாகி 25 ஆண்டுகளாயினும் வட மாகாணத்திலோ இன்னும் தேர்தல் நடந்தபாடில்லை. 2013 புரட்டாதி மாதமே வடமாகாணத் தேர்தல் நடைபெறலாம் என்று ஜனாதிபதியும் கூறிவிட்டார். அதற்கு முன்னால் வருகின்ற புரட்டாதித் தேர்தலில் கிழக்கு மாகாண மக்கள் அளிக்கவிருக்கின்ற தீர்ப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அரசாங்கம் எதுவிதத்திலும் வெற்றி பெற முயற்சிக்கும். கிழக்கு மாகாணத்தில் வென்று விட்டால் அந்த வெற்றி அரசாங்கத்தின் அரசியற் போக்குக்கு எல்லா இனங்களும் சேர்ந்து அளித்த வெற்றி என்று உலகமெல்லாம் வெட்கமின்றி அரசாங்கம் பறை சாற்றும். உண்மை நிலைமையோ வேறு என்பது கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களுக்குத்தான் தெரியும்.

இப்படி அரசாங்கம் வென்றுவிட்டால், அரசியற் தீர்வுக்கான, இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கான அசைவுகள் முயற்சிகள் எல்லாம் நிறுத்தப்பட்டு விடலாம். இதற்கு மாறாக,தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சிக்கூட்டணியொன்று வென்றுவிட்டால், அந்த வெற்றி பெரியதொரு அரசியல் அழுத்தத்தை அரசாங்கத்தின் மீது ஏற்றிவிடும். சிறப்பாக, ஒரு முஸ்லிம் வேட்பாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடக் கூடுமானால் அது அரசாங்கத்திற்குப் பெரும் அங்கலாய்ப்பைக் கொடுத்து விடும்.

தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு நல்ல அத்திவாரமுமாகிவிடும். தென்னிலங்கையில் நடக்கின்ற முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளுக்கு தக்கதொரு மறு மொழியாகவும் அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியேகப் பேட்டி



முத்தையா காசிநாதன்



1983இல் "கறுப்புஜூலை" என்ற ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் நடைபெற்று 29 வருடத்தை தொடப்போகிறது. அதைத்தொடர்ந்து 1987 ஜூலையில் ஏற்பட்ட "இந்திய- இலங்கை" ஒப்பந்தம் உருவானது. இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை சென்றது எல்லாம் முடிந்து 25 ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. அதாவது இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாகி வெள்ளிவிழா ஆண்டே நிறைவடைகிறது. ஆனாலும் இன்னும் அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. தமிழர்களுக்கும் அதிகாரப் பகிர்வு அளிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டித் தள்ளிப்போட்ட இலங்கை அரசு இப்போது போர் முடிந்த பிறகும் அரசியல் தீர்வு வழங்குவதில் அக்கறை காட்டவில்லை.

இந்நிலையில் நாம் இந்திய அமைதிகாக்கும் படையின் மூத்த இராணுவ அதிகாரியாக இலங்கையில் 1987 வாக்கில் இருந்தவரும், தமிழர் பிரச்சினை உள்ளிட்ட இலங்கை விவகாரத்தை நன்கு அறிந்தவருமான **கேணல் ஆர்.ஹரிகரனை** "சமகாலம்" இதழுக்காகச் சந்தித்தோம். இப்போது தமிழர் பிரச்சினை பற்றி பல்வேறு கட்டுரைகளும், ஊடகங்களின் விவாதங்களிலும் பங்கேற்று வரும் இவர், இலங்கை விவகாரத்தில் தேர்ந்த அறிவு பெற்றவர். இதோ நம் கேள்விகளும், அவரின் மனம் திறந்த பதில்களும்;

# முதலில் இந்தியாவுக்கு தன் நம்பிக்கை இருக்க வே

**கே:** 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடையப் போகிறது. அந்த ஒப்பந்தப்படி இலங்கைக்கு, இந்திய அமைதி காக்கும் படையின் தளபதியாக நீங்கள் சென்று வந்துள்ளீர்கள். இந்த வேளையில் நீங்கள் என்ன உணருகிறீர்கள்?

பதில்: இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987இல் எந்த மாதிரிச் சூழ்நிலையில் போடப்பட்டது என்பது மிக முக்கியம். மூன்றுவிதமான அடிப்படைக் காரணங்கள் இருந்தன. ஒன்று 1983ஆம் வருடம் "கறுப்புஜுலை"என்று கூறும் அளவுக்குப் பெரும் இனக்கலவரம் வெடித்து இலட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்களில் பெரும் பாலானவர்கள் முதலில் தமிழகத்திற்குத் தான் வந்தார்கள். அது தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியாவிலேயே ஒரு பெரிய அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏன் உலகளாவிய தாக்கமே உருவானது. ஆயுதமேந்திய போராட்டம் முழு அளவில் தொடங்காத நேரம் என்பதால் அப்பாவி மக்களை இப்படிச் செய்கிறார்களே என்ற அனுதாபம் ஏற்பட்டது. அடுத்த காரணம், உலகமே அப்போது கோல்ட் வார் என்ற அடிப்படையில் அமெரிக்கா, ரஷ்யா என்று பிரிந்து நின்றது. ஆனால், அந்த சர்வ தேச சூழ்நிலையும், அந்த அனுதாபமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1987 ஜூலை 29இல் கொழும்பில் ஜே.ஆர்.ஜெயவர்தன-ராஜீவ் காந்தி உடன்படிக்கையில் கைச்சாத்து

# கொள்கையில்

# வண்டும்



கேணல் ஹரிகரன்

இப்போது இல்லை. 25 வருடங்கள் போர் புரிந்த இன்றைய நிலையில் தமிழர்கள் விரக்தியடைந்துள்ளார்கள் என்பது உண்மை. ஆனால் 83இல் அகதிகள் போல் நடுத்தெருவில் நின்ற நிலை தமிழர்களுக்கு இப்போது இல்லை. 25 வருடம் எங்களால் சண்டைபோட முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்களாக இன்றைய தமிழர்கள் இருக்கிறார்கள். இலங்கையிலும் சிங்களப் பேரினவாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு பின்வாங்கியிருக்கிறது என்றே கூறுவேன். ஏனென்றால் தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று இன்று பெரும்பான்மையான சிங்களவர்களே உணருகிறார்கள். ஆகவே, 1983 அல்லது 1987க்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை இப்போது நிலவுகிறது.

கே: சிங்களவர்கள் அப்படி மாறியிருக்கிறார்கள் என்று எதை அடிப்படையாக வைத்து நீங்கள் சொல்கிறீர்கள்?

பதில்: தமிழர்களைத் தாழ்வாகவும், சிங்களவர்களை உயர்வாகவும் வைத்துப் பார்த்த காலம் மாறியிருக்கிறது. அதன் அடிப்படையில் தான் சொல்கிறேன். இலங்கை அதிபர் ஜெயவர்தன தொடங்கி, பிரேமதாசா வரை "சிங்களவர்களுக்கு இந்த நாடு. எங்களுக்கு வேறு நாடு கிடையாது. தமிழர்கள் தமிழ்நாட்டுக்குப் போகலாம்" என்று பேசுவார்கள். ஆனால் இப்போது சம்பிக்க ரணவக்க மட்டும்தான் அப்படிப் பேசுகிறார். அவர் பேசுவதைச் சீரியஸாக எடுத்துக்கொள்ளக்கூடாது.ஏனென்றால் அவர் நம்ம (இந்தியாவில் உள்ள) சுப்ரமணியசுவாமி மாதிரி! அதே போல் தமிழர்களும், "போர் மட்டும் போதாது. அது நம் பிரச்சினைகளுக்கு விடை கொடுக்காது" என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அரசியல் ரீதியாக முடிவு எடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். தனித் தமிழ் ஈழம் என்ற நிலை மாறி, தமிழர்கள் தங்கள் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருக்கிறது. "தமிழ்" நாடு பிரித்து எடுக்க வேண்டும் என்பதைப் பல பேர் இன்று ஆதரிக்கவில்லை.

கே: தமிழர்கள்,சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றத்திற்கு காரணம் என்ன என்று கருதுகிறீர்கள்.

பதில்:பயங்கரவாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் உலகச் சூழ்நிலை அடிப்படையாகவே விரோதமாக இருக்கிறது என்பதே முக்கிய காரணம். ஒரு காலத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவுமே பல தீவிரவாத இயக்கங்களுக்கு மறைமுகமாக ஆதரவு அளித்தார்கள். ஆனால் அமெரிக்காவில் நடந்த 9/11 தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகும், இந்தியாவில் ஜிகாதி தீவிரவாதத்தாலும் பயங்கரவாதத்தை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது என்பதில் உலக நாடுகள் தெளிவாக இருக்கின்றன. ஆகவே முன்பு இந்தியா விடுதலைப் புலிகளுக்கு உதவியது மாதிரி இனிமேல் செய்ய முடியாது. தீவிரவாதக் குழு என்றால் ஐ.நா. சபையிலும் ஆதரவு கிடைக்காது. இந்த மாறுபட்ட சூழ்நிலையால் இனி போர் செய்து பிரயோசனமில்லை என்ற முடிவிற்கு தமிழர்கள் வந்திருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

கே: ஆனால், தனித் தமிழ் ஈழக் கோரிக்கைகள் அங்கும் இங்கும் இப்போதும் எழுந்து கொண்டுதானே இருக்கிறது.

பதில்: 1987இல் ஓரளவு தனி ஈழம் அமைக்க வாய்ப்பு இருந்தது என்றே சொல்ல வேண்டும். இப்போது அது கிடையாது. இதைப் பின்னணியாக வைத்துக்கொண்டு பார்த்தால், 1987இல் இந்தியா செய்தது எவ்வளவு வெற்றி,எவ்வளவு தோல்வி என்று தெரியும்.



ராஜீவ் புதிதாக வந்தவர். விபரம் தெரியாதவர். இதைப் பயன்படுத்தி இந்தியாவை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தே ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். அதுவும் ஒப்பந்தம் தோல்வியடைந்ததற்கு இன்னொரு காரணம். தமிழர் அமைப்புகள் முக்கியமாக ஆயுதம் ஏந்திய குழுக்கள் ஒழுங்காக பங்கு பெறவில்லை. பிரபாகரனே கலந்து கொள்ளவில்லைத்தானே

கே: இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழர்களுக்கு உதவி செய்யவில்லை என்ற கருத்து நிலவுகிறதே.

பதில்: 1987ஆம் வருட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் நான்கு முக்கியமான அம்சங்கள். தமிழ் மொழிக்கும், தமிழர் பிரதேசத்திற்கும் உரிய அங்கீகாரம் முதல் அம்சம். அதை ஓரளவு கொடுத்துள்ளார்கள். மீதி ஓரளவு தமிழர்களை பறித்துவிட்டார்கள். 2002 அமைதிப் பேச்சுவார்த்தையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தது தான் பிரபாகரன் செய்த தவறு. அன்றைய தினம் தமிழ் ஈழமே பிரபாகரனிடம் இருந்தது. ஆனால் அவர் போர்க்கொடி தூக்குவதிலேயே கவனம் செலுத்தினார். இந்தியாவிற்கு எதிராகச் செயல்படக்கூடிய எந்தச் சக்திக்கும் இடம் கொடுக்கக்கூடாது என்பது இரண்டாவது அம்சம். அதுவும் ஓரளவு வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசம் என்பது மூன்றாவது அம்சம். அதையும் செய்தார்கள். ஆனால் சட்ட ரீதியான சிக்கலால் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் இந்தியாவின் பார்வையில் அதையொரு முக்கியமான அம்சமாகக் கருதவில்லை. தமிழர்களுக்கு அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வு நான்காவது அம்சம்.



கே: இப்படி நான்கு அம்சங்கள் இருந்தாலும், இந்த ஒப்பந்தம் வெற்றியடையவில்லை என்ற கருத்துத் தானே மேலோங்கி நிற்கிறது.

பதில்: அது உண்மைதான். ஆனால் அதற்குச் சில முக்கிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது இது ஒரு குறுகிய கால ஒப்பந்தம். தனி ஈழம் கேட்கும் இயக்கங்களுக்கு இந்தியா ஆயுதம் கொடுத்து உதவிய நேரம், அது அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை இலங்கை நாடுகிறது. "நாங்கள் உதவி செய்ய முடியாது" என்று அந்த நாடுகள்

சம்பிக்க ரணவக்க பேசுவதை சீரியஸாக எடுத்துக்கொள்ளக் கூடாது ஏனென்றால் அவர் நம்ம இந்தியாவில் உள்ள சுப்பிரமணிய சுவாமி மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை விரித்து விட்டன. அப்படியொரு ஆபத்தான நிலையில் இந்தியாவுடன் ஒரு சமரச உடன்பாடு செய்ய வேண்டும் என்று கருதினார் இலங்கை அதிபராக இருந்த ஜெயவர்தன. ராஜீவ் புதிதாக வந்தவர். விவரம் தெரியாதவர். இதைப் பயன்படுத்தி இந்தியாவை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தே ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். அதுவும் ஒப்பந்தம் தோல்வியடைந்ததற்கு இன்னொரு காரணம் .தமிழர் அமைப்புகள் முக்கியமாக ஆயுதம் ஏந்திய குழுக்கள் ஒழுங்காக



பங்கு பெறவில்லை. பிரபாகரனே கலந்து கொள்ளவில்லை.தானே தமிழினத்திற்கு ஒரே தலைவர் என்ற நினைப்பில் அவர் எடுத்த முடிவு அது. அதனால் தமிழர் குழுக்கள் இடையே ஒருங்கிணைந்த செயல்பாடு இல்லை. இதெல்லாம் இந்திய-இலங்கை ஒப்பந்தம் வெற்றி பெறாமல் போனதற்கான காரணங்கள்.

**கே: தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் சிங்களத் தலைவர்களிடத்திலேயே கருத்தொற்றுமை இல்லை என்றுதானே தோன்றுகிறது.**

**பதில்:** சிங்களத் தலைவர்களும் பௌத்த மதத்தை இலங்கை தான் கட்டிக் காக்க வேண்டும் என்ற மதவாதத்தில் நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். தமிழர் பிரச்சினையில் அதிகாரப் பகிர்வுக்கு கையெழுத்துப் போட வேண்டும் என்ற சூழ்நிலை வரும் போதெல்லாம் அது அவர்களை ஏதோ ஒரு விதத்தில் தடுக்கிறது. 1997இல் ஒரு அரசியல் சட்ட சீர்திருத்தம் கொண்டு வந்தார்கள். இப்போது இருப்பதை விட தமிழர்களுக்கு அதிக உரிமைகள் உள்ள ஒரு அழகான கட்டமைப்பை உருவாக்கினார்கள்.நீலன் திருச்செல்வம் அதை முன்னின்று செய்தார். அனைவரும் அதற்கு ஒத்துழைக்க முன்வந்த போது கடைசி நிமிடத்தில் யூ.என்.பி. பின்வாங்கி விட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் பின்வாங்கி விட்டது.இதே மாதிரித்தான் 1987இலும் நடந்தது. சிங்களவர்களின் பிரதிநிதிகளாக இருக்கும் அனைத்துக்

> எனக்கு தெரிந்தவரை சிவ்சங்கர் மேனனின் அண்மைய இலங்கை விஜயத்தினால் எந்தவித முன்னேற்றமும் இல்லை

கட்சிகளும் ஒரே நோக்கில் நின்று அன்று ஒத்துழைத்து இருந்தால் தமிழர்களின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம். அவர்களும் அதைச் செய்யவில்லை. ஆகவே 1987ஆம் வருட ஒப்பந்தம் வெற்றியடையாமல் போனதற்கு தமிழர்களை மட்டும் முழுமையாகக் குறை சொல்லமாட்டேன். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதை பிரேமதாசா விரும்பவில்லை. அதனால் அவர் ராஜீவ் இலங்கை வந்த போது அங்கே இல்லை. ராஜீவ் வருகையின் போது எஸ்.எல். எப்,ஜே.வி.பி. போன்ற கட்சிகள் நடத்திய போராட்டத்தால்,கொழும்பில் ஊரடங்கு உத்தரவே பிறப்பிக்கப்பட்டது. இலங்கை உள்விவகாரத்தில் என்ன செய்ய வேண்டும் என்று இந்தியா தலையிட்டு எப்படிச்சொல்லலாம் எனக் கருதினார்கள். அதனால் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனேயும் போட்டுக் கொண்ட அந்த ஒப்பந்தத்தைத் தங்களுக்கு ஏற்பட்ட அவமானமாக நினைத்தார்கள். இதெல்லாம் அந்த ஒப்பந்தம் 25 ஆண்டுகளுக்குப் பிறகும் செயல்வடிவம் பெறாமல் போனதற்கு காரணங்கள். ஆனால் இந்திய அமைதி காக்கும் படை இலங்கை சென்ற போது பாதிக்கப்பட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினோம். பசியால் வாடிய தமிழர்களுக்கு எங்களது ரேஷனில் இருந்தே சாப்பாடு கொடுத்தோம். தமிழர்களுக்கு இரு மாகாணங்கள் இருக்கின்றன என்ற அடையாளத்தை 1987ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தது. தமிழ் மொழியும் தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் எண்ணவோட்டம் ஓரளவு விரிவடைந்திருக்கிறது. இதெல்லாம் ஒப்பந்தத்தால் ஏற்பட்ட பலன்கள். ஆகவே மொத்தமாக ஒப்பந்தம் பலனில்லை என்று சொல்லிவிட முடியாது.

**கே: தமிழர்களின் இவ்வளவு காலப் போராட்டத்திற்கு இந்தப் பலன்கள் போதும் என்று கூறுகிறீர்களா?**

**பதில்:** இதுதவிர 13 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தில் தமிழர்களுக்கு வேறு இரு முக்கியமான சரத்துகள் இருக்கின்றன. ஒன்று நில உடைமை. இன்னொன்று பொலிஸ் அதிகாரம். அதில் நில உடைமை மிக முக்கியமானது என்பது என் கருத்து. தமிழர்கள் தங்களுக்குள் ஒரு பாரம்பரியத்தை வைத்து இருக்கிறார்கள். தங்கள் நிலத்தை விற்க வேண்டும் என்றால் கூட அருகில் இருக்கும் நிலத்துக்காரரிடம் (தமிழர்) கேட்டு விட்டுத்தான் பிறருக்கு விற்பார்கள். ஏனென்றால் நிலத்தை தங்களின் இனத்திற்கான அடையாளமாகத் தமிழர்கள் கருதினார்கள். இதேபோன்று அவர்கள் கருதிய இன்னொரு அடையாளம் கலாசாரம். ஆனால் நில உடைமை விஷயத்தில் முன்ஸிபாலிட்டிக்கு உள்ள உரிமை கூட மாகாண கவுன்சிலுக்கு இலங்கையில் கிடையாது. அதேமாதிரி அவர்கள் கொடுக்க நினைக்கும் பொலிஸ் அதிகாரமும் வெறும் கண்துடைப்புப் போலவே இருக்கிறது. அந்த வகையில் 13ஆவது அரசியல் சட்ட திருத்தமும் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. இனி,அப்படிச் செயல்படும் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. இதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூட சமீபத்தில் கூறியிருக்கிறார்.

கே: அப்படி நம்பிக்கையிழப்பதற்கு என்ன காரணம்?

பதில்: இலங்கையில் உள்ள ஆட்சி முழுமையாக மூன்று பேரின் கையில் இருக்கிறது. தேசியத் தலைமை அதிபர் ராஜபக்ஷவிடம் இருக்கிறது. அவரே கமாண்டன் இன்.சீப் ஆகவும் இருக்கிறார். இராணுவ அமைச்சரும் அவரேதான். அவர் தம்பி டிபென்ஸ் செக்கரட்டரி. அதனால் தான் இராணுவம் இலங்கையில் தலை விரித்தாடுகிறது. 13ஆவது அரசியல் சட் டத்திருத்தம்,அதில் உள்ள அதிகாரப்பகிர்வு என்ற வார்த்தைக்கே கோதாபய ராஜபக்ஷ எதிரானவர். அதனால் இந்த சட்டத் திருத்தம் நிறைவேறும் வாய்ப்புகள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

கே: இது இந்திய அரசுக்குத் தெரியுமா?

பதில்: இந்திய அரசுக்கு நன்றாகவே தெரியும். இலங்கையில் உள்ள சூழ் நிலையும் தெரியும். ஆனால் அதிபர் ராஜ பக்ஷவை எதிர்க்க அங்கு சரியான வேறு தலைவர் இல்லை. ரணில் விக்ரமசிங்க இருக்கிறார். அரசியல் முதிர்ச்சி பெற்ற தலைவர்தான். ஆனால் அவர் கொண்டு வந்த அமைதித் தீர்வே தோற்றுப்போனது. அது தவிர, அவருக்கு அவர் கட்சி க்குள்ளேயே ஏகப்பட்ட உட்பூசல். அதைச் சமாளிக்கவே அவர்களுக்கு நேரம் போதும் போதும் என்றாகிவிடுகிறது. ஆகவே யூ.என்.பி.க்கு மற்றவர்களின் ஒத்துழைப்பு இன்றி தனியாக இயங்க முடியாது என்ற நிலை. இன்னொரு கட்சியான ஜே.வி.பி.யை முழுவதுமாக ராஜபக்ஷ முடித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். பாராளுமன்ற வெற்றிக்குப் பிறகு மிச்சம் இருந்த அனைத்துக்கட்சிகளையும் முழுமையாக ஒழித்துக்கட்டி விட்டார். இன்றைக்கு உருப்படியான எதிர்க்கட்சி என்பது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மட்டும்தான். அதற்கு அடுத்தபடியாகத்தான் யூ.என்.பி. இருக்கிறது. ஆகவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் ராஜபக்ஷவை விட் டால் வேறு தலைவர் கிடையாது என்று இந்திய அரசுக்கு நன்றாகவே தெரியும். அவரை வைத்துத்தான் காரியம் சாதிக்க வேண்டும் என்று இந்தியா நினைக்கிறது. போர் முடிந்தவுடன் "13ஆவது அரசியல் சட்ட திருத்தம் ப்ளஸ் அதிகாரங்களை நான் கொடுக்கிறேன்" என்று "இந்து" பத்திரிகையில் பெரும் பேட்டி ஒன்றைக் கொடுத்தார் அதிபர் ராஜபக்ஷ. அதை அவர் காப்பாற்றவில்லை. அதுக்கு "நான் ஐந்து கமிட்டி போட்டிருக்கிறேன்" என்று



ஜனாதிபதி ராஜபக்ஷவை எதிர்க்க இலங்கையில் சரியான வேறு தலைவர் இல்லை. ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார். அரசியல் முதிர்ச்சி பெற்ற தலைவர் தான். ஆனால் அவருக்கு அவரது கட்சிக்குள்ளேயே ஏகப்பட்ட பூசல். அதைச் சமாளிக்கவே அவர்களுக்கு நேரம் போதும் போதும் என்றாகி விடுகிறது

காரணங்களைச் சொல்கிறார். ஆனால் அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வை தள்ளி வைக்க இந்தக் கமிட்டிகளை எல்லாம் கருவிகளாகவே பயன்படுத்துகிறார் ராஜ பக்ஷ. பாராளுமன்றத்தில் ராஜபக்ஷவுக்கு முழுமையான மெஜாரிட்டி இருப்பதால், என்னை யாரும் அசைக்க முடியாது என்ற தோரணையில் அவர் நடந்து கொள்கிறார். வெளியில் தனியாக ஒரு கூட்டணி உருவாகிவிடக்கூடாது என்ப தற்காக தேவையில்லாமலேயே 17 கட்சி கூட்டணியை தனக்குள் பிடித்து வைத்துக் கொண்டுள்ளார். என்னைப் பொறுத்தமட்டில், அதிகாரப் பகிர்வு என் பதை ஒரு அரசியல் நாடகம் போல் நடத்திக் கொண்டிருக்கிறார் அதிபர் ராஜபக்ஷ.

கே: அதனால்தான் இந்தியா ஜெனீவா வில் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததா?

பதில்: அதிபர் ராஜபக்ஷ தன்னிச்சையாகச் செயல்படுகிறார். என்னை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற சிந்தனையில் இருக்கிறார். ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமை கமிஷனில் ஏற்பட்ட பின்னடைவு தன் முகத்தில் விழுந்த அறை என்பது போன்று எண்ணுகிறார். 2009இலும் இப்படியொரு தீர்மானம் வந்தது. அப்போது இந்தியா இலங்கைக்கு ஆதரவாக நின்றது. ஏனென்றால் போர் முடிந்த நேரம் குறைந்தபட்சம் ஒரு வருட மாவது இலங்கைக்கு கால அவகாசம் கொடுப்போம் என்று கருதி அப்போது இலங்கையை இந்தியா ஆதரித்தது. அதே போன்று இப்போதும் இந்தியா ஆதரிக்கும் என்று ராஜபக்ஷ எதிர்பார்த்தார். ஆனால் இந்த முறை அமெரிக்காவே நேரடியாகத் தீர்மானம் கொண்டு வந்தது. இவரும் போர் முடிந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும், கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை. அதனால் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. மனித உரிமைகள் அமெரிக்காவில் நடக்கும் தேர்தலுடன் சம்பந்தப்பட்டது என்பது ராஜபக்ஷவுக்குப் புரியவில்லை. இந்தியாவில் இராணுவத்திலேயே இப் போது மனித உரிமைகளுக்கு என்று தனி டிவிஷன்கள் வந்துவிட்டது என்பதையும் ராஜபக்ஷ நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்.

கே: ஒரு காலத்தில் நேரடியாகத் தலை யிட்டு, தன் படையை அனுப்பி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்த இந்தியா, இப்போது ஏன் அமெரிக்காவின் தீர்மானத்தின் பின்பு ஒளிந்து கொண்டு செயல்பட வேண்டும்?

பதில்: இதை வைத்து இந்தியாவின் அணுகுமுறையை நீங்கள் எடைபோட முடியாது. இந்தியா இந்தப் பிரச்சினையை நேரிடையாக எடுத்திருந்தால் இலங்கை அரசுடனான உறவில் பின்னடைவு ஏற் பட்டிருக்கும். தீர்மானத்திற்குப் பிறகு அரசியல் ரீதியாக அந்நாட்டுடன் பேச வேண்டி வரும். அதில் இந்தியா பங்கேற்க வேண்டிய நிலை வரும். இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் இந்தியாவின் அணுகுமுறை அமைந்தது. அமெரிக்கா ஒரு வல்லரசு. அந்நாட்டிற்கும், இலங்கைக் கும் அப்படிப்பட்ட உறவு இல்லை. அதி பர் ராஜபக்ஷவே கூட ஒரு முறை, "எங் களுக்கும், இந்தியாவிற்கும் உள்ளது அண்ணன், தம்பி உறவு. சீனா ஒரு தோழன் மாதிரி" என்று கூறியிருக்கிறார். ஆகவே இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு முழுமையாக அறு பட்டு போகக்கூடாது என்ற நோக்கிலேயே ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்தது.இந்தியா ஜெனீவா தீர்மானத்தை ஆதரித்ததால் தான் மற்ற நாடுகளும் ஆதரித்தன. ஏனென்றால் அவர்களுக்கு இந்த விடயம் பற்றி அதிகம் தெரியாது. "இந்தியா அங்கு முக்கியமான நாடு. அது செய்தால் சரியாக இருக்கும்" என்ற எண்ணத்தில் தான் மற்ற நாடுகள் எல்லாம் அத்தீர்மானத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக வாக்களித்தன. ஆகவே இந்தியா அமெரிக்காவின் பின்னால் ஒளிந்து கொண்டு செயல்படவில்லை.

கே: ஆகவே அமெரிக்கா மூலம் தீர்மானம் கொண்டு வந்ததை ஒரு "ஸ்டிராட்டெஜிக் அப்ரோச்" என்று எடுத்துக் கொள்ளலாமா?

பதில்: அப்படியும் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் இந்தத் தீர்மானத்தில் இந்தியாவிற்கு இஷ்டமில்லை. அதனால் பயன் கிடையாது என்பது இந்தியாவிற்குத் தெரியும். ஆனால் இலங்கையின் செயல்பாடுகள் இந்தியாவிற்கு வேறுவழியைக் காட்டவில்லை. உதாரணமாக, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அதிபர் ராஜபக்ஷவைப் பார்த்தார். அவர் ஒன்றும் சரியாகப் பேசவில்லை. பலமுறை பிரதமர் மன்மோகன்சிங்கை ராஜபக்ஷ சந்தித்துள்ளார். அவர் சொன்னதைச் செய்யவில்லை. "தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு என்று இலங்கை அதிபர் வாக்குறுதி கொடுத்துள்ளார்" என்று பிர தமர் இங்கு சொன்னால், "நாங்கள் அப்படியெல்லாம் எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை" என்று ராஜபக்ஷ சொல்கிறார். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றாத வெறுப்பில்தான் இந்தியா ஜெனீவா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. கலைஞர் நிர்ப்பந்தத்தினால் மட்டும் இந்தியா அப்படி வாக்களிக்கவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு பிறகுதான் எல்.எல்.ஆர்.சி. அறிக்கையை தூசுதட்டி எடுத்து ஒவ்வொன்றாக இலங்கை செய்ய ஆரம்பித்திருக்கிறது. மற்றப்படி தமிழர் பிரச்சினையில் முதிர்ச்சியுடன் அதிபர் ராஜபக்ஷ நடந்து கொள்ளவில்லை. இதில் மட்டுமல்ல உதாரணத்திற்கு லண்டனுக்கு முதலில் போனார் ராஜபக்ஷ. அங்கு பின்னடைவு ஏற்பட்டது. அதன் பிறகு சூழ்நிலையில் எந்த மாற்றமும் இல்லாமலேயே மீண்டும் போனார். இப்போதும் பின்னடைவு. ராஜபக்ஷ தனிப்பட்ட நபர் அல்ல. ஒரு நாட்டின் ஜனாதிபதி. அவருக்கு லண்டனில் இப்படி ஏற்பட்டது இலங்கைக்கே அவமானம். மனித உரிமை முக்கியமான அம்சமாக மாறிவிட்டது என்பதை அதிபர் ராஜபக்ஷ புரிந்துகொள்ள மறுக்கிறார். அதன் தாக்கத்தை ஜெனீவாவில் சந்தித்துள்ளார் அவர்.

கே: இப்படிப்பட்ட சூழ்நிலையில்,இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் விளைவாக இந்திய-இலங்கை உறவு எப்படியிருக்கும்?

பதில்:எனக்குத் தெரிந்தவரை சிவ்சங்கர் மேனனின்விஜயத்தினால் எந்த முன்னேற்றமும் இல்லை. அதை விட முக்கியமானது அதற்கு முன்பு சுஸ்மா ஸ்வராஜ் தலைமையில் சென்று திரும்பிய இந்திய எம்.பி.க்கள் அடங்கிய குழுவே. அவர்கள் சரியான நேரத்தில் அங்கு போகவில்லை என்றாலும், அவர்களது அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள மூன்று அம்சங்கள் கவனிக்கத்தக்கது. எல்.எல்.ஆர்.சி. சிபாரிசுகளை நிறைவேற்ற வேண்டும் என்பது முதல் அம்சம். அரசியல் தீர்வு எட்டப்பட



> உள்நாட்டுப் போர் முடிந்து மூன்று வருடத்திற்கு மேலாகியும் கொடுத்த வாக்குறுதிகளை ராஜபக்ஷ காப்பாற்றவில்லை. ஆதனால் இந்தியா இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் வாக்களித்தது. மனித உரிமைகள் விவகாரம் அமெரிக்காவில் நடக்கவிருக்கும் தேர்தலுடன் சம்பந்தப்பட்டது என்பது ராஜபக்ஷவுக்கு புரியவில்லை

வேண்டும் என்பது இரண்டாவது அம்சம். இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். பாராளுமன்ற செலக்ட் கமிட்டிக் கூட்டத்தில் பங்கேற்று எப்படியாவது பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று கூறியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுசீரமைப்புப் பணிகளை உடனடியாகச் செய்து கொடுங்கள் என்பது மூன்றாவது அம்சம். [illegible] 50,000 வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்று இந்தியா சொன்ன பிறகும் கூட அதை ஆரம்பிக்கவே இலங்கை அரசு ஒரு வருடம் எடுத்துக் கொண்டது. இலங்கை அரசாங்கத்திற்கு மனசு இல்லை என்பதை அது காட்டுகிறது. போக்குவரத்து, ரயில்வே லைன் போன்ற பல்வேறு விடயங்களை இலங்கை அரசு செய்திருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்கள் வளமான வாழ்க்கைப் பாதைக்குத் திரும்புவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை.

கே: சிவ்சங்கர் மேனனின் பயணம் பயனுள்ளதாக இல்லை என்பது ஒரு புறமிருக்க, இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலோங்குவதை இந்தியாவால் தடுக்க முடியவில்லையே?

பதில்: சீனாவுடன் இலங்கை வைத்திருக்கும் உறவுமுறை பண ரீதியானது. வியாபார ரீதியானது. ராஜபக்ஷவின் தொகுதியில் (அம்பாந்தோட்டை) துறைமுகம் அமைக்கிறார். பல மில்லியன் டொலர் பணம் அதற்குத் தேவை. முதலில் இந்தியாவிடம்தான் கேட்டார். இரண்டு, மூன்று காரணங்களை மனதில் வைத்து இந்திய அரசு அதற்கு முன்வரவில்லை. அதற்குப் பிறகுதான் சீனாவிடம் கொடுத்தார். அதை என்னிடமே ஒருமுறை ராஜபக்ஷ சொல்லியிருக்கிறார். சீன வங்கிகள் இலங்கைக்கு நிறையக் கடன் வழங்குகிறது. இந்தியாவும் கடன் கொடுத்திருக்கிறது. நாம் கொடுக்கும் கடன் நான்கு சதவீத வட்டி. ஆனால் சீனா கொடுக்கும் கடனுக்கு 14 சதவீதம் வட்டி. பணம் கிடைக்கிறது என்பதற்காக இலங்கை சீனா பக்கமாகச் செல்கிறது. அது எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானது என்று எனக்குப் புரியவில்லை.

கே: அப்படியென்றால் சீனாவிற்கு இலங்கையில் "ஸ்டிராட்டெஜிக் இன்டரெஸ்டே" இல்லை என்கிறீர்களா?

பதில்: இலங்கையில் சீனாவிற்கு ஓரளவு "ஸ்டிராட்டெஜிக் இன்டரெஸ்ட்" இருக்கிறது. சீனாவிற்கு வேண்டிய ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் எல்லாம் இந்தியப் பெருங் கடல் வழியாகச்செல்கிறது. அதற்கு கொழும்பு முகத்துவாரம் போல் இருக்கிறது. யார் இலங்கையை கன்ட்ரோல் பண்ணுகிறார்களோ, அது ஒரு கடல்ப் போர் நடந்தால் அவர்களு க்குச் சாதகமாக இருக்கும். இந்தத் தொலைநோக்குப் பார்வையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமைக்க சீனா இலங்கைக்கு உதவி செய்யலாம். ஆனால்,இன்றைய அளவில் அந்தத் துறைமுகம் ஒரு கமர்ஷியல் போர்ட் அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: எப்படியிருந்தாலும் இலங்கை சீனாவை நாடுவதை இந்தியாவால் தடுக்க முடியவில்லை என்றுதானே அர்த்தம்?

பதில்: அப்படிக்கிடையாது. இந்தி யாவே சீனாவுடன் நல்லுறவை வலுவாக்கி யிருக்கிறது. சீனாவுடன் நல்ல வர்த்தக உறவு நிலவுகிறது. ஆகவே இந்தியாவின் எண்ணங்களை அனுசரித்து இலங்கையில் சீனா செயல்படும் என்று நம்பலாம். சீனா,தன்னிச்சையாகத் செயல்படாது. இது தற்போதைய சூழ்நிலையில் ஒருவேளை இந்தியாவிற்கும், சீனாவிற்கும் போர் என் றால் அது வேறு விடயம். அத்தகைய சூழ்நிலையில் இலங்கை சீனாவிற்கு ஆதர வாகச் செயல்படுவது ரொம்பக் கஷ்டம். ஏனென்றால் எந்த நேரத்தில் நினை த்தாலும் நாம் இலங்கையை ஆக்கிரமித்து விட முடியும். இந்தியப் பெருங்கடலில் இருப்பதில் மிகப்பெரிய கடற்படை நம் முடையதுதான். சீனாவிடமே இந்திய கடற்படைப் போன்று திறன் வாய்ந்த கடற்படை கிடையாது. சீனாவின் கடற்படை பலம் பெறுவதற்கு இன்னும் பத்து வருடம் பிடிக்கும். அப்போது சீனாவின் தாக்கம் இலங்கையில் மேலும் அதிகமாக இருக்கும். இதைத் தடுத்து நிறுத்துவது ரொம்பக் கஷ்டம். ஆனால் ஒரு விடயம், அமெரிக்காவே சீனாவின் உலகளவிலான பொருளாதார ஆதிக்கத்திற்கு ஓரளவு இடம்கொடுத்திருக்கிறது. பொருளாதார உறவுகளை மனதில் கொண்டு செயல்பட வேண்டிய அவசியம் சீனாவிற்கு வரும். ஆகவே பழைய "கோல்டு வார்"காலத்தில் இருந்த மாதிரி சீனா செயல்பட முடியாது.



யாழ் நகரில் ஜே.என்.தீக்ஷித்

கே: தமிழர்களுக்கு அரசியல் தீர்வு அளிக்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை தொடர்ந்து ராஜபக்ஷ நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், எதிர்காலத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எப்படியிருக்கும்?

பதில்: அதற்காகத்தான் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறுகிறேன். தங்களுக்குள் குடுமிப்பிடி சண்டை போட வேண்டாம். தமிழ் ஈழத்தைப் பற்றிப் பேச வேண்டாம். அதற்குப் பதில், இந்தப் பிரச்சி னையில் என்ன செய்ய வேண்டும் என்று அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு செயல் திட்டம் உருவாக்க வேண்டும். மக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படைத் தேவைகள், காணாமல் போயிருப்பவர்களை கண்டு பிடிப்பது, சிறையில் உள்ள கைதிகளை விடுதலை செய்வது போன்ற மனித உரிமை சம்பந்தப்பட்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவற்றை ஒருமுகப்படுத்தி அனைவரும் சேர்ந்து அதற்காக தமிழக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, "இதை நிறைவேற்ற சம்மதிப்பவர்களுடன்தான் 2014 பாராளு மன்றத் தேர்தலில் கூட்டணி வைப்போம்" என்று பிரகடனப்படுத்த வேண்டும். அப்போதுதான் இந்திய அரசு இதில் உறுதியாகச்செயல்படும்.தமிழர்கள்உரிமை என்றால் தமிழ் நாட்டிலிருந்து மத்திய அரசில் இருப்போரும்,பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள எம்.பி.க்களும் இணைந்து மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்க வேண்டுமே தவிர, பஞ்சாபிலும், வட இந்தியாவிலும் உள்ள எம்.பி.க்களா குரல் கொடுப்பார்கள். கலைஞர் ஐந்து முறை முதலமைச்சராக இருந்தார். தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க என்ன செய்தார். ஆகவே தமிழர்கள் உரிமை பற்றி தமிழ்நாட்டிற்கு இல்லாத அக்கறை மற்றவர்களுக்கு இருக்காது. மத்திய அரசோ, தமிழர் பிரச்சினையை ஒரு வெளி நாட்டுடன் உள்ள உறவுப் பிரச் சினை என்ற ரீதியில்தான் பார்க்கும். ராஜபக்ஷ தொடர்ந்து அதிகாரப்பகிர்வு அளிக்க மறுத்தால்,அதற்கு எதிராக ஒன்று திரண்டு, ஓரணியில் நின்று கோரிக்கை வைக்க வேண்டியது தமிழ்நாட்டுக் கட்சிகள்தான்.

1987ஆம் ஆண்டு ஓரளவு தமிழீழம் அமைக்க வாய்ப்பிருந்தது என்றே சொல்ல வேண்டும். இப் போது அது கிடையாது. இதைப் பின்னணியாக வைத்துக்கொண்டு பார்த்தால் அந்த நேரத்தில் இந்தியா செய்தது எவ்வளவு வெற்றி, எவ்வளவு தோல்வி என்று தெரியும்

கே: தி.மு.க. தலைவர் கருணாநிதி "ஜனநாயக ரீதியில் தமிழ் ஈழம் அடை வோம்" என்று கூறி, வருகின்ற ஆகஸ்ட் 5 ஆம் திகதி சென்னையில் டெசோ மாநாடு நடத்துகிறாரே?

பதில்: எனக்கு ஒன்றும் புரியவில்லை. 1986இல் இப்படியொரு மாநாட்டைக் கூட்டினார். அதன் பிறகு இவ்வளவு காலம் என்ன செய்து கொண்டிருந்தார். கலைஞர் நினைத்திருந்தால் 2002 அமைதிப் பேச்சுவார்த்தை நடந்த போது,அது முறிவு அடையாமல் இருக்க பிரபாகரனுக்கு புத்திமதி சொல்லியிருக்கலாம். இன்று இவ்வளவு பெரிய இழப்பை ஏறக்குறைய 50,000இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதையும், மூன்று இலட்சம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டதையும் தவிர்த்திருக்கலாம். அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இருந்து குரல் கொடுக்க ஒருவரும் கிடையாது. வைகோவும் தமிழ் ஈழம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாரே தவிர,எதுவும் செய்யவில்லை. பாரதியார் "வாய்ச்சொல்லில் வீரரடி" என்றார்.

அதைத்தான் ஈழத்தமிழர் பிரச்சினையில் இங்குள்ள தமிழ்நாட்டுத் தலைவர்கள் செய்கிறார்கள். பேசினால் மட்டும் போதாது. தமிழர்களுக்கு உரிமை பெற்றுத்தர ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும். மற்றப்படி டெசோ மாநாடு கலைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதற்கு மட்டுமே உதவும். அதுவும் இதுவரை டெசோ பற்றி பேசிய போதெல்லாம் கடைசியில் ஓரிரு வார்த்தைகள் பேசுவார். மற்றப்படி அந்தக் கூட்டத்தில் ஜெயலலிதா மீதான தாக்குதல்தான் அதிகம் இருக்கும். ஆகவே டெசோ மாநாடு போட்டும் அப்படித்தான் பேசப் போகிறார்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க.வும் இருக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் இருக்கிறது. அங்கு இருந்து கொண்டே டெசோ மாநாடு நடத்துவது "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்பது போல்தான் இருக்கிறது. இந்த நாடகத்தைப் பார்த்து எல்லாம் தமிழ் மக்கள் ஏமாறுவது கிடையாது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து தமிழகத்தில் அரசியல் வியாபாரம் மட்டுமே நடக்கிறது. ஆகவே டெசோ மாநாடு ஒரு கண்துடைப்பு.

கே: இன்றைய சூழ்நிலையில் இந்திய அரசு, இலங்கை அதிபர் ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்றும் தமிழர் பிரச்சினையில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: மூன்று பேரும் வெவ்வேறு மாதிரித்தான் செயல்படுவார்கள். ஏனென்றால், மூன்று பேருடைய குறிக்கோளும் வெவ்வேறு. என்னைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அவர்கள் பேச முன்வரவில்லை என்று அதிபர் ராஜபக்ஷ சொல்வதற்கு இடமளிக்கக்கூடாது. ஏனென்றால் பேச்சுவார்த்தைக்குப் போகாமல் இருந்தது அப்போது எல்.டி.டி.ஈ. செய்த தவறு. "நாங்கள் தொடர்ந்து பேசத் தயார். எங்கள் கருத்து இதுதான்" என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாதது கவலைக்குரியது. கருத்து வேறுபாடுகள் அவர்களுக்குள் இருந்தாலும் ஜனநாயக ரீதியில் அவர்கள் செயல்பட வேண்டும். இப்பிரச்சினையில் அதிபர் ராஜபக்ஷ இன்னும் நெருங்கி வரவில்லை. விரைவில் அவருக்குப் பெரிய பொருளாதார நெருக்கடி வரப்போகிறது. ஈரானிலிருந்து பெட்ரோல் இறக்குமதி செய்ய முடியவில்லை.அதனால் விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது. 2014 பாராளுமன்றத் தேர்தலின் போதுதான் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை ராஜபக்ஷ உணருவார். அப்போதுதான் இந்தியாவின் ரோல் அதிகரிக்கும். அதற்கு இந்தியா தயாராக இருக்க வேண்டும். அந்த நேரத்தில் தமிழர் பிரச்சினையில் ஒரு அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா பாடுபட வேண்டும்.

கே: ஆனால், தமிழர் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடாமல் இருக்கிறதே?

பதில்: அப்படியிருப்பதுதான் மிகத் தவறானது. அதனால் தான் எல்லோருக்கும்

> தமிழர் பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிடாமல் இருப்பது மிகத் தவறானது அதனால் தான் எல்லோருக்கும் இந்தியா மீது சந்தேகம் வருகிறது. அமெரிக்கா செய்தது மாதிரி தமிழர் பிரச்சினையில் இந்தியா தன் கருத்துக்களை ஓரளவு முன்வைக்க வேண்டும்

இந்தியா மீது சந்தேகம் வருகிறது. தமிழர் பிரச்சினையில் அமெரிக்கா செய்தது மாதிரி இந்தியா ஓரளவு தன் கருத்துகளை முன் வைக்க வேண்டும். அதற்கு முதலில் தன் கொள்கையில் இந்தியாவிற்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அது சரியோ, தவறோ இந்தக் காரணத்திற்காகத் தமிழர் பிரச்சினையில் நாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளோம் என்பதை இந்தியா வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். "ராஜபக்ஷ பலமுறை வாக்குறுதி கொடுத்துவிட்டுப் பிறகு அதை நிறைவேற்றவில்லை. அதனால் நாங்கள் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தோம்" என்பதை இந்தியா சொல்ல வேண்டும். அப்போதுதான் வெளிநாடுகளுக்கு விடயம் புரியும். ஆனால் தமிழர் பிரச்சினை என்று இல்லை. எல்லாப் பிரச்சினைகளிலுமே இந்தியக் கொள்கையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்ற நிலை இன்றைய ஆட்சியில் வந்துவிட்டது. அதுவே நமக்கு அரசியல் கலாசாரமும் ஆகிவிட்டது. காங்கிரஸ், பா.ஜ.க. போன்றவை பெரிய கட்சிகள் என்றாலும் அவர்களுக்குள் கூட ஜனநாயக ரீதியாகப் பேசி முடிவு எடுக்க மாட்டார்கள். ஆங்காங்கே நாட்டாமை செய்வோர் போல் ஒரு குழு இருக்கிறது. அவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் இந்தக் கட்சிகள் முடிவு எடுக்கின்றன. தமிழர் பிரச்சினையில் இந்தியா என்ன முடிவு எடுத்தது,ஏன் அப்படி எடுத்தது என்பது பற்றி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். அந்த மாதிரி செய்தால் அதிபர் ராஜபக்ஷ ஓரளவு தனிப்பட்ட முறையில் இயங்க மாட்டார். அதே மாதிரி இங்கு முதல்வர் ஜெயலலிதா தன் கருத்துகளைத் திடமாக மத்திய அரசிடம் சொல்கிறார். அவருக்கு மத்திய அரசுடன் உரசல் இருக்கிறது. அதைத் தவிர்த்து, மத்திய அரசுக்கு தமிழர் பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்லி செயல்பட வைக்க வேண்டும். குறிப்பாக மேற்கு வங்கத்தில் உள்ள தலைவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்டுத்தான் பங்களாதேஷ் விவகாரங்களில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும். அது போன்ற வலிமையான,ஆக்கபூர்வமான செயல்முறைகளுக்கு வழிகாட்டினால் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு நிச்சயம் செய்யும்.

கே: இறுதியாக ஒரு கேள்வி. அரசியல் கட்சிகள் மட்டத்திலும், தமிழர், சிங்களவர் மத்தியிலும் தமிழர் பிரச்சினை எப்படிக் கருதப்படுகிறது என்று நினைக்கிறீர்கள்?

பதில்: சிங்களவர்களும் சரி,தமிழர்களும் சரி,நிறையப்பேர் எனக்கு எழுதுவார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களும் எழுதுவார்கள். போர்க்குற்றங்கள் புரிந்த குற்றவாளிகள் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்பதில் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஆனால் மற்ற விடயங்களில் ஒற்றுமை கிடையாது. ஏனென்றால் நல்ல வேலைகளில் இருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இப்பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி விட்டார்கள். அடுத்த தலைமுறை வந்துவிட்டது. நிறையப் பேருக்கு தமிழ் தெரியுமா என்றே தெரியவில்லை. கோவில்களும், பண்டிகைகளும் தான் அவர்களுக்கு தமிழர் அடையாளமாக இருக்கிறது. தமிழ் ஈழம் என்ற அடையாளம் அவர்கள் மத்தியில் மறைந்து கொண்டே வருகிறது. அதே நேரத்தில் உடைமைகளை இழந்து அகதிகளாக அங்கு போயிருக்கும் தமிழர்கள் மத்தியில்தான் இப்பிரச்சினை பெரிய அளவில் பேசப்படுகிறது. நமக்கு விடியலே கிடையாதா என்ற ஏக்கம் அவர்கள் மனதில்தான் இருக்கிறது. அவர்களில் சிலர், அங்குள்ள பழைய விடுதலைப் புலிகள் அமைப்புகளைச் சேர்ந்த சில குழுக்களுடன் சேர்ந்து மீண்டும் புதியதொரு கட்டமைப்பை உருவாக்க முனைகிறார்கள். அது வெற்றிபெறும் என்று நான் நம்பவில்லை. பிரபாகரன் ஒரு முக்கியமான பெரிய தலைவர். அப்படியொரு தலைவர் கிடைத்தால்தான் இனிமேல் பெரிய இயக்கம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னடையாளமும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பும்

கறுப்பு ஜூலை நினைவாக ஒரு சிந்தனை




சாந்தி சச்சிதானந்தம்

1983 ஜூலை இன வன்முறைகளில் சகல உடைமைகளும் இழந்து கொழும்பில் நாம் அநாதரவாகத் திரிந்த காலங்கள் அவை. இயல்பு வாழ்க்கை மிக மிக மெதுவாகத் திரும்பிக்கொண்டிருந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என ஓடித் தப்பியவர்கள் போக மீதியாக ஒரு சில உறவினர்கள்தாம் கொழும்பில் வாழ்ந்து வந்தனர். இவர்களை அவ்வப் போது நானும் என் கணவர் மனோவும் சந்தித்து வருவதுண்டு. வேலைக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களிலெல்லாம் அநேகமாக வேட்டி சட்டையில்தான் மனோ திரிவார். எனவே உறவினர்கள் வீட்டுக்குச் செல்லும்போதும் அதே உடைதான். இப் படித்தான் ஓர் நாள் கொழும்பு ஹவ லொக் வீதியிலுள்ள எனது சின்னம்மா வீட்டுக்குச் சென்றோம். சின்னம்மாவைப் பார்த்துவிட்டு எமது வீடு திரும்பியபோது, அவர் எம்மைத் தொலைபேசியில் அழைத் தார். ஐயோ தயவு செய்து இனி என்னுடைய வீட்டுப் பக்கம் வரவேண்டாம் பக்கத்து வீட்டுச் சிங்களவரெல்லாம் மனோ ஒரு கொட்டி(புலி) யா என்று என்னை வந்து கேட்கிறார்கள் என்று பயத்தில் அரற்றிக் கெஞ்சினார்.

என்னைக் கேட்டால், இனக்கலவரங்கள் நடக்கும்போதினை விடவும் நடந்து முடிந்த பின்பு எற்படும் அனுபவங்கள்தாம் மனதினை ஆழமாகத் தாக்குபவை என்பேன். கலவரங்கள் நடக்கும்போது, ஒரு சமூகத்தளத்தில் யார் மேலாண்மை கொண்டவர், எவருக்கு அரச அதிகாரம் இருக்கின்றது என்பது வன்முறையின் பிரயோகத்தினூடு நிலைநாட்டப்படுகின்றது. இந்த அதிகார உறவுமுறைகள் அந்தந்த சமூகத்தினரினால் அகப்படுத்தப் படுகின்றன. கலவரங்களுக்குப் பின்புதான் அவற்றின் மக்களின் அன்றாட கொடுக்கல் - வாங்கல்களிலெல்லாம் இவை நிதர்சனமாகத் தெரிய ஆரம்பிக்கின்றன. கூலிக்கு மாரடிக்கும் "படிக்காத" காடையர்கள் எம்மைத் தாக்கி சூறையாடுவதை நாம் மன்னிக்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால், "படித்த" மத்தியதர வர்க்கச் சிங்களவர்கள் தமது மனப்பாங்குகளை வெளிக்காட்ட ஆரம்பித்தவுடன்தான் நெஞ்சு அதிகமாக வலித்தது. இது கல்வியின் பண்படுத்தும் தன்மை பற்றி எமக்கெல்லாம் உள்ள மாயையின் பயனாகவும் இருக்கலாம். மனோ ஒரு கொட்டி இல்லை என்பது நிச்சயமாக அவர்களுக்குத் தெரியும். ஆனால், அவர் ஒரு கொட்டியா என்று கேட்டுப் பயமுறுத்தும் அதிகாரத்தினை அவர்கள் தங்களுக்கென்று எடுத்துக்கொண்டார்கள், அவ்வளவுதான். எவரும் தனது இனத்தின் அடையாளங்களைப் பேண விழையும் திமிரினை, அதாவது வேட்டி உடுத்துக் கொண்டு செல்லும் துணிச்சலை அடக்க முனைவதுதான் அதன் முக்கிய நோக்கமாக அமைந்தது. இனி பாதுகாப்பாக வாழ விரும்பினால் தத்தமது இன அடையாளங்களை ஒழித்துவிட்டு வரவேண்டும் என இங்கு சூசகமாக உணர்த்தப்பட்டது.

ஒரு சமூகத்தின் பாதுகாப்பினைப் பற்றிப் பேசும்போது அதன் தன்னடையாளத்தைப் பற்றி ஆராய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. தெரிவு செய்யப்படும் வேறுபாடுகளைத் தொகுத்து "அவர்கள்" என்கின்ற கட்டின் எதிர் பிம்பமாய் "நாங்கள்" என உருவாக்கப்படும் கருப்பொருளே சுய அடையாளமாகின்றது எனலாம். ஒவ்வொரு தனிமனிதரும் தான் வாழும் சமூகத்துடன் இடையீடு செய்யப்புகும்போது தாம் யார் என்னும் தன்னடையாளம் அங்கு அத்தியாவசியமாகின்றது. நம்பிக்கைகள், கலாசாரப் பாரம்பரியங்கள், வழக்கங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றின் அடித்தளத்தின் மீது நின்றுகொண்டுதான் சமூகத்துடன் பேரம் பேசக் கூடியதாக இருக்கின்றது. நான் யார் என்பதை நான் அடையாளப்படுத்துவது மட்டுமன்றி ஏனையோரும் அங்கு என்னை அடையாளப்படுத்துகின்றதன் மூலம்தான் எனக்கும் பிறருக்கும் இடையிலான தொடர்புகள் தீர்மானிக்கப்படுகின்றன. அவ்வாறாக ஒரே நம்பிக்கைகள், ஒரே பாரம்பரியங்கள் கொண்ட மனிதர்களின் கூட்டுச் சமூகம் தனது தொடர்ந்த இருப்பிற்காக சுய அடையாளத்தினைப் பேண முனைகின்றது. அப்படிப் பார்த்தால், சுய அடையாளமே ஒரு தனிமனிதரினதும் ஒரு சமூகத்தினதும் பாதுகாப்புக்குக் கால் எனக் கூற லாம். தன்னம்பிக்கையுடன் ஏனைய கலாசாரங்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் கூட தனிநபர்களுக்கும் சமூக த்திற் கும் வலுவான தன்னடையாளம் உதவுகின்றது.

இவ்வகையாக எமது பாதுகாப்பின் அடித்தளமாக இருக்கும் அதே தன்னடையாளமானது, ஓர் அரசின் இடையீட்டினால் எமது பாதுகாப்பின்மைக்கு அல்லது நலிவுத் தன்மைக்குக்கூட இட்டுச் செல்லுகின்றது. அரசு தான் ஆளும் சமூகங்களின் அதிகார உறவுமுறைகளைப் பிரதிபலிப்பதாய் அமைவதே இதன் முக்கிய காரணமாகும். உதாரணமாக, எங்களது நாட்டில் அது பெரும்பான்மையினத்தின் முதலாளித்துவ வர்க்க ஆண் கலாசாரப் பார்வை உடையதாய் தனது அடையாளங்களை வரித்துக் கொண்டிருப்பதை நாம் காணலாம். இங்கு அதன் இந்த வரையறைக்குள் அடங்காத சமூகங்கள் மிதிக்கப்படுகின்ற வாய்ப்புகள் தோன்றுகின்றன. இந்தச் சூழ்நிலையில் அடையாளப்படுத்தப்படுகின்ற வேறுபாடுகளே ஒரு சமூகம் கருவறுக்கப்படுவதற்கும் காரணமாகின்றன. இது தனியே இன அழிப்புக் கலவரங்களின்போது நடைபெறுவதல்ல. மாறாக, அன்றாட நிகழ்வுகளில் பின்னிப் பிணைந்து அதன் போக்குகளின் விளைவினைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இலை மறை காய் போல் நிகழும். சமீபத்தில் திருகோணமலை தம்பலகாமம் பிரதேசத்தில் நிகழ்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர் பளீலின் கொலை இதற்கொரு நல்ல உதாரணமாகும்.

கடமையுணர்வுள்ள உத்தியோகத்தர் பளீல் ஒரு மக்கள் சந்திப்பின் போது இரு வகையான கேள்விக்கணைகளுக்குட் படுத்தப்பட்டார். அதெப்படி இதுவரை டெங்கு ஒழிப்புச் சட்டங்களின் கீழ் தனியே தமிழ், முஸ்லிம் மக்கள்தான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள், ஒரு சிங்கள வரும் குற்றஞ்சாட்டப்படுவதாகக் காணவில்லையே என்பது முதல் கேள்வி. ஏன் தனியே தமிழ், முஸ்லிம் மக்களை மட்டும் குறிவைத்து தம்பலகாமப் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள் டெங்கு தொடர்பான விசாரணைக்கு காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று பணம் பறித்துவிட்டு விடுகிறார்கள் என்பது அடுத்த கேள்வி. இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், பாதுகாப்பின்மையினால் தாம் சிங்களக் கிராமங்களுக்குச் செல்லுவதில்லை என்கின்ற உண்மையை பளீல் ஒப்புக் கொண்டார். ஆனால் மக்களின் கேள்விகள் இவரைச் சூடேற்றியிருக்கும் போல. அதற்குப் பின்பு நடந்த ஒரு பகிர ங்கக் கூட்டத்தில் அவர் தம்பலகாமம் பொலிஸைச் சாடியது மட்டுமல்லாமல், முதன் முறையாக சாலியபுர என்னும் சிங்களக் கிராமத்திற்கு தனது கடமைகளின் நிமித்தம் சென்றிருக்கின்றார். அங்கு அவர் உலக்கையால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இப்பொழுது மனநோய்க்கு ஆளான சிங்களவர் ஒருவரைக் கொலைக் குற்றவாளி என்று சொல்லி முன்னிறுத்தியிருக்கிறார்கள்.

இந்தக் கதையில் பல உண்மைகள் தொக்கி நிற்கின்றன. சிறுபான்மைச் சமூகங்களின் அரச உத்தியோகத்தர்கள் அரசாங்கக் கடமைகளில் ஈடுபடுவதிலும்கூட பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினை கள் இருக்கின்றன என்பது ஒன்று.

நீதித்துறை வழங்கும் பாதுகாப்பு சிறுபான்மைச் சமூகங்களுக்குக் கிட்டுவதில்லை என்பது அடுத்தது. சிங்கள மக்கள் சட்டத்திற்கும் எட்டாத் தூரத்தில் இருக்க முடியும் என்பது மூன்றாவது. இதன் விளைவு என்னவென்றால், தமிழ், முஸ்லிம் கிராமங்களில் விளைந்த டெங்கு நுளம்புகள் சிங்களக் கிராமங்களில் விளைந்த நுளம்புகளைவிடவும் பன்மடங்கு ஆபத்தானவையாகக் கருதப்பட்டதுதான்.


அரசில் அதிகாரம் வகிக்காத சமூகங்களின் பாதுகாப்பினைப் பற்றிப் பேசும்போது இறைமை என்னும் பொருளைப் பற்றியும் கருதவேண்டியிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட பூகோளப் பரப்பில் வாழுகின்ற மக்கள் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் மூலமாக தமது விதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை கொண்டவர்கள் என்பது இறைமையின் தத்துவமாகும். இறைமையைக் கொண்டியங்கும் அரசொன்று அது பிரதிநிதித்துவம் செய்யாத ஆனால் தனது பூகோளப் பரப்பில் வாழ்கின்ற மக்கள் குழுமங்களுக்கு எதிராக இயங்க ஆரம்பித்தால் அதனைத் தடுக்க எவராலும் முடியாது. அது பாராளுமன்றத்தின் ச





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்டங்களைக்கொண்டு ஒரு மக்களின் பிரஜா வுரிமையைப் பறிக்க முடியும். நிர்வாக நடைமுறைகளின் மூலம் வாக்குரிமையை நிராகரிக்க முடியும். அபிவிருத்தித் திட்டங்களின் போர்வையில் காணி, நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு முகாம்களில் அடைக்கப்படலாம். பிரதேச ங்களைக் கூறு போடுவதன் மூலம் தாம் பெரும்பான்மையாக இருக்கும் இடங்களிலும் அவர்கள் சிறுபான்மையினராக மாற்றப்படலாம். தேசியமயமாக்கல் என்கின்ற போர்வையில் முக்கிய நிறுவனங்களையெல்லாம் பெரும் பான்மையினமயமாகச் செய்யலாம். சிறு பான்மை மக்களின் வசிப்பிடங்களை இரா ணுவமயமாக்கலாம். பெரும்பான்மையி னத்துக்குச் சாதகமாக வரலாறுகளைத் திருத்தி எழுதி அதனடிப்படையிலேயே கலா சார மாற்றங்களைக் கொண்டு வரலாம். இவையனைத்தும் சிறுபான்மைச் சமூகங்களின் அழிவுக்கு வாய்ப்பாகின்றன. இறைமை என் கின்ற கோட்பாட்டின் அடிப்படையிலே சர்வதேச சமூகத்தின் எதுவிதத் தலையீடுமின்றி அரசு தனது மக்கள் மீதே பயங்கரவாதத்தினைக் கட் டவிழ்க்கக் கூடியதாக இருக்கின்றது.





சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு இலங்கையில் தமிழ் மக்கள் மேற்கூறிய சகல சவால்களுக்கும் முகம் கொடுத்து வந்துள்ளார்கள். 1983ஆம் ஆண்டில் தெற்கில் தாக்கப்பட்ட தமிழர்கள் புகலிடம் தேடுவதற்காவது அவர்கள் பெரும் பான்மையினராய் வாழ்ந்த வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் இருந்தன. இன்று அவர்களுடைய புகலிடமானது சிங்களக் குடியேற்றங்களினால் இன விகிதாசாரங்கள் மாற்றப்பட்டு, இராணுவம் நிலை கொண்ட பிரதேசங்களாக மாறியுள்ளன. இப்போக்குகள் மாற்றப்படவேண்டுமாகில், அரசின் நடவடிக்கைகள் இறைமை என்கின்ற தளத்திலிருந்து எடுக்கப்பட்டு மானுடப் பாதுகாப்பு (Human Security) என்னும் தளத்தில் வைத்து நோக்கப்படவேண்டும். ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் உயிர் வாழ்வதற்கு எந்தவித அச்சு றுத்தலுமின்றி, உணவு, உறைவிடம், கல்வி, தொழில் என்னும் அடிப்படை வசதிகளுடன், தனது கலாசார அடையாளங்களைப் பேணக்கூடியதாக வாழ்வதையே மானுடப் பாதுகாப்பு குறிக்கின்றது. மானுடப் பாதுகாப் பினை உறுதிப்படுத்த முடியாத எந்த அரசுக்கும் எதிராக அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நடவடிக்கையினை எடுப்பதற் கான பொறுப்பினை சர்வதேச சமூகம் கொள் வதற்கான சட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. மானுடப் பாதுகாப்பு என்கின்ற இக்கோட்பாட்டின் பிரயோகத்தில் தான் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் எதிர் காலமும் அவர்களின் பாதுகாப்பும் நிச்சயப் படுத்தப்படலாம் என் றால் மிகையா காது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த அடிகள்: மீள்நோக்கும் மீள்வாசிப்பும்



சபா.ஜெயராசா


தமிழ்ச் சூழலுக்குரியவாறு நவீன 'பரிசோதனைமுறை' என்பதைக் கட்டமைப்புச் செய்த முன்னோடி. அந்த வகையில் தமிழரின் தொன்மையான இசைக்கருவியாகிய யாழை எடுத்துக்கொண்டார்

உலகில் மேலெழுச்சி கொள்ளத் தொடங்கிய நவீனத்துவத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய மொழியாக தமிழை மேலும் வளப்படுத்தக்கூடிய முனைப்புகளை முன் னெடுத்தவர் துறவி சுவாமி விபுலானந்தர் (1892-1947).

மொழிகள் இயங்கு பண்பு கொண்டவை. மாற்றமுறும் புதிய அறைகூவல்களுக்கு ஈடுகொடுத்த மொழிகள் உலகில் நின்று நிலைத்து வருகின்றன. உயிரினங்களிலும் இதற்குரிய ஒப்புமையைக் காண முடியும். மாறும் சூழலுக்கேற்றவாறு இயங்கி இசைவாக்கம் செய்த விலங்குகள் தொடர்ந்து உயிர்வாழ்ந்து வருகின்றன.

தாய்மொழியின் வாழ்வை என்றும் தக்க வைத்து இயங்குபவர்கள் சமூகத்தில் அடிநிலை மக்களே. சமூகத்தில் உயர் நிலை மக்களிடையே வாழும் அனுகூலம் வேண்டுவோர் தாய்மொழியை இலகுவிலே விட்டுக் கொடுத்து விடுவர். காலனித்துவ ஆட்சியில் தாய்மொழியை முற்றிலும் நிராகரித்து ஆட்சி மொழியைக் கற்றோர் அவ்வகையினரே. தாய்மொழி உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சேரிப்புறத்து மக்களின் கல்வியில் அண்ணாமலை பல்கலைக்கழகச் சூழலில் உடனடிக் கவனம் செலுத்தியவர் சுவாமி விபுலானந்தரே. அந்த நடவடிக்கை உயர் மட்டத்தினரிடத்தே அதிருப்தியை ஏற்படுத்தியது. ஆனாலும் அடிகளார் அதனைப் பொருட்படுத்திக் கொள்ள வில்லை.

உலக பல்கலைக்கழகங்களின் வரலாறு சமூகத்தின் உயர் அடுக்கினருக்குரிய கல்வி வரலாறாகவே இருந்து வந்துள்ளது. உயர் கல்வி அவர்களுக்குரியதாகவே மேலெழுந்து வந்துள்ளது. அந்நிலையிலே பல்கலைக்கழகங்களைத் "தந்தக் கோபுரங்கள்'' (IVORY TOWERS) என்று அழைக்கும் மரபு தொடர்ந்தது. அண்ணாமலை பல்கலைக்க ழகத்துப் பேராசிரியராக இருந்து கொண்டு அடிகளார் சாமானியர்களின் கல்வியில் அக்கறை காட்டியமை பல்கலைக்கழகம் உருவாக்கிய வர்க்க நியமங்களை தகர்க்கும் செயற்பாடாக அமைந்தது.



அதன் நீட்சி, புலமை நிலையிலே காலனித்துவ எதிர்ப்பை விரிவுபடுத்தும் செயற்பாடாயிற்று. அடிகளார் வாழ்ந்த காலம் சுதந்திரப் போராட்டம் இந்தியப் பெரு நிலப்பரப்பிலே தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டமாகும். காலனித்துவ எதிர்ப்பு நடவடிக்கைகள் சமயத் தளத்திலும் நிகழ்ந்தன. இந்து சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்து சமயத்தின் வளர்ச்சி இந்திய நிலவுடமையாளரது கருத்தியலைக் கட்டமைப்புச் செய்து வளர்ப்பதாகவும் இந்தியச் சூழலில் தனிச்சொத்துரிமையைப் பாதுகாத்துக் கொடுப்பதாகவும் அமைந்திருந்தது. அவற்றை நிலைநிறுத்தும் சமூக செயல்முறையின் நீட்சியாக சாதியக் கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருந்தது. அவற்றை மேலும் வலிதாக்கும் வகையிலே சடங்குமுறை களும் உருவாக்கப்பட்டிருந்தன. இந்து சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் அவற்றை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தினர். சாதிய எதிர்ப்பு கருத்தியல் வடிவில் முன்னெடுக்கப்பட்டது. பிரதிகூலமெய்தியோரின் வாழ்வாதாரங்கள் மீது உற்றுணர்வு கொள்ள வைத்தலும் இந்து சமய மறுமலர்ச்சியின் பிறிதொரு நடவடிக்கையாயிற்று. அவற்றை முன்னெத்த இராமகிருஷ்ணமிஷன் செயற்பணிகளோடு அடிகளார் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

சமய மறுமலர்ச்சியானது இந்தியச் சூழலில் இந்து சமயத்தையும் இலங்கைச்சூழலில் சைவசமயத்தையும் குவியப்படுத்தின. சமூகப்பன்மை நிலைகள் அதிகளவில் காணப்பட்ட இந்தியச் சூழலில் அனைவரையும் ஒன்றிணைப்பதற் குரிய பொதுக் குறியீடாக 'இந்து' என்ற பரந்த வேதாந்தக்கருத்து வடிவம் முன்வைக்கப்படுதல் தவிர்க்க முடியாத தேவையாயிற்று. இந்திய தேசிய சமயங்களின் அனைத்துப் பிரிவுகளையும் ஒன்றிணைப்பதற்குரிய தேவையை 'இந்து' என்ற பொதுக்குறியீடு ஏற்படுத்தியது.

இந்தியச் சூழலில் அனைத்தையும் ஒன்றிணைப்பதன் வாயிலாக சமூகப் பலத்தை நிலைநாட்டல் முன்னெடுக்கப் பட்டது. இலங்கைச் சூழலில் வேறுபடுத்தல் வாயிலாக பலத்தை உருவாக்கலாம் என்ற கருத்து மேலோங்கியது. சமூக வளர்ச்சி இந்தியச் சூழலிலும் இலங்கைச் சூழலிலும் வேறுபட்ட நிலைகளிலேயே அமைந்திருந்தமை சமூக யதார்த்தமாகும். இந்திய தரிசனம் பன்மை நிலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைப்பு வழியான பலத்தை வலியுறுத்தியது. இலங்கை நிலைவரம் ஒருமை மேலோங்கலின் கீழ் ஒன்றிணைப்பை முன்னெடுத்தது. அந்நிலையில் ஆறுமுகநாவலர் சைவம் (சித்தாந்தம்) என்பதை முன்னெடுத்தார். ஆறுமுகநாவலர் முன்னெடுத்த 'கஞ்சித்தொட்டி தர்மம்' என்பதும் அவர் பயன்படுத்திய 'சற்சூத்திரர்' என்ற சொல்லாட்சியும் ஒருமை நிலையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளாயின.


விபுலானந்த அடிகளார் பன்மைநிலை வழியான ஒன்றிணைப்பை முன்னெடுத்தார். 'இந்து' என்ற கருத்தியலின் வழியான சமூக நடவடிக்கைகளையும் புலமை முயற்சிகளையும் விரிவாக்கினார். ஆயினும் நாவலரது சமய, சமூகக் கல்விப் பணிகளை அடிகளார் விதந்து நோக்கி னார்.

பரந்த தளத்திலே இந்து சமயத்தை நோக்கியோர் சமய உட்பிரிவுகளை எளிதில் உள்வாங்கிக் கொண்டனர். அடிகளார் பரந்த தளத்திலே இந்து சமயத்தை நோக்கியதற்கு அவரிடத்தை உட்பொதிந்திருந்த நவீனத்துவ அணுகு முறைகளும் காரணங்களாயின.

அடிகளார் காலத்திலே நவீனத்துவம் மற்றும் நவீனமயப்பாடு ஆகியவை பல நிலைகளிலே எழுச்சி கொள்ளத் தொடங்கின. பிரெஞ்சு ஆய்வாளராகிய ரோலண்பார்த் (BARTHES) அவர்கள் நவீனத்துவம் என்பதற்கு தந்த விளக்கம் முக்கியமானது. நவீனத்துவம் என்பது உலக நோக்கு பற்றிய பன்மை நிலையாக்கம் (PLURALISATION) என அவர் விளக்கினார். பொருளாதார நடவடிக்கைகளால் உருவாக்கம் பெற்ற புதிய சமூக வகுப்பினர் பன்முகப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நுகர்ச்சிக் கோலங்கள், கல்வி நிலையில் ஏற்பட்ட பன்முகப்பாடு முதலியவை பன்மை நிலையாக்கத்தை ஏற்படுத்தின.

அடிகளாரிடத்துக் காணப்பெற்ற நவீனத்துவம் பற்றிய நோக்கு அவர் மேற்கொண்ட தமிழ்மொழி சார்ந்த புதிய நடவடிக்கைகளின் வெளிப்பாடு கொண்டது. விஞ்ஞானத்துறைகளிலும் அவருக்கு புலமை இருந்தமையால் நவீனத்துவத்தை அறிவியல் நிலையிலும் விளங்கிக் கொண்டார். ஈன்ஸ்டின் கண்டுபிடித்த சார்புக் கோட்பாடு, எக்ஸ் (X) கதிரின் கண்டுபிடிப்பு, விரிவடையத் தொடங்கிய தொழில்நுட்ப மாற்றங்கள் முதலாம் எழுபுலத்தில் தமிழ் மொழியின் நவீனப்பாடு பற்றிய தேவையைச் சிறப்பாக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் அடிகளார் நோக்கினார்.

தமிழ்ச்சூழலுக்குரியவாறு நவீன 'பரிசோதனைமுறை' என்பதைக் கட்டமைப்புச் செய்த முன்னோடியாகவும் அடிகளார்



விளங்கினார். அந்த வகையில் தமிழரின் தொன்மையான இசைக்கருவியாகிய யாழை எடுத்துக்கொண்டார். இந்து சமய தொன்மங்களோடு கட்டமைப்புச் செய்திருந்த இசைக்கருவிகளையும் இசை ஒலிகளையும் தொன்மத்தளத்தில் இருந்து விஞ்ஞானத் தளத்துக்கு நிலைமாற்றம் செய்த தளப்புரட்சியாளராகவும் அவர் விளங்கினார்.

அதனை இன்னொரு விதமாகக் கூறப்போனால் சமயம் சாராத(SECULAR) நிலையில் இசைக்கருவிகளை நோக்கும் தமிழ் மரபுக்கு அடிகளார் மீள் வடிவம் கொடுத்தார். பழந்தமிழ் இலக்கியங்களிலே குறிப்பிடப்பட்ட யாழ் வடிவங்கள் தொடர்பான மாதிரிகைகளைச் செய்து அவற்றின் அதிர்வுகளையும் ஓசை எழுகையினையும் பரிசோதனைக்கு உட்படுத்தினார். தமக்கு இருந்த இயற்பியல் அல்லது பௌதிகவியல் புலமையை அந்த ஆய்வுகளிலே பயன்படுத்திக் கொண்டார். அந்நிலையிலே பரிசோதனை முறையை அடியொற்றி தமிழில் முதன் முதல் எழுதப் பெற்ற ஆய்வாக 'யாழ் நூல்' அமைந்தது.

அறிவு மேலெழுந்து வளரும் பொழுது மொழி நிலையானது அதிக சிக்கல்ப் பாடுகளை அடையும் என்பதை 'அறிகைச் சிக்கல் அமைப்பாக்கம்' (COGNO COMPLEX FORMATION) என்ற கோட்பாடு தெளிவாக விளக்கும். அதனை விளங்கிக் கொள்ளாதோர் யாழ் நூல் விளங்காத மொழிநடையில் எழுதப்பட்டுள்ளது என்ற கருத்தை முன்வைக்கின்றனர். தமது ஆழமான ஆய்வை நீர்த்துப்போன நிலைக்குக் கொண்டுவராது கனகாத்திரமாக வெளியிட்டமை அடிகளாருக்குரிய புலமை நேர்மையை புலப்படுத்துகின்றது.

தமிழ்மொழியின் நவீனமயப்பாட்டுக்குரியவாறு புதிய கலைச் சொல்லாக்க முயற்சிகளும் அடிகளாரால் முன்னெடுக்கப்பட்டன. கலைச் சொற்களின் வளம் தமிழ் மொழிவாயிலான உயர்நிலை ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு உறு துணையாக இருக்கும் என்பதுடன், பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிற்றுமொழியாவதுக்குரிய புலமைக் கட்டமைப்பு நடவடிக்கைகளையும் அடிகளார் முன்னெடுத்தார். அதன் நீட்சியாகவே அடிகளார் மேற்கொண்ட மொழி பெயர்ப்புச் செயற்பாடுகள் அமைந்தன.

பன்மொழிப்புலமை அடிகளாரின் மொழி பெயர்ப்பு முயற்சிக்கு வளமூட்டியது. ஆங்கிலம், இலத்தீன்,கிரேக்கம்,வடமொழி, அரபு, சிங்களம், தமிழ் மொழி முதலாம் மொழிகளிலே புலமையுடையவராக அவர் விளங்கினார். தமக்குக் கிடைக்கப்பெற்ற பன்மொழி அறிவின் ஊட்டங்களே அவர் தமிழ் மொழியின் வளமேம்பாட்டுக்கு பயன்படுத்தியமை ஒரு முக்கியமான புலமை நிகழ்ச்சியாகும். தமிழை அறிவியல் வளமுள்ள மொழியாக ஏற்றம் செய்வதற்கு அவர் மேற்கொண்ட முயற்சியானது பன்மொழி அறிவினாலும் விஞ்ஞான அறிவினாலும் தூண்டப்பெற்றதெனலாம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வு 'வெளியீடாகிய செந்தமிழ்' என்பது அவர் 'விஞ்ஞான தீபம்' என்னும் கட்டுரையை 1922ஆம் ஆண்டில் எழுதினார். அக்கட்டுரையில் அவர் 'ஸயன்ஸ்' என்ற சொல்லை வாஞ்சையுடன் பயன்படுத்தினார். விஞ்ஞானத்தின் மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை அந்த சொல்லாட்சி புலப்படுத்தியது. அதே ஈடுபாடு விஞ்ஞானத்தைத் தமிழுக்கு கொண்டுவரும் முயற்சியிலும் இருந்தது. அக்கட்டுரையை அடிகளார் பின்வருமாறு நிறைவித்து வைத்துள்ளார்.

'ஸயன்ஸ் இல்லாதது தமிழ் மாதுக்கு ஒரு குறை என்று பலகாற் சொல்லிக்கொள்கிற ஆங்கில விற்பன்னரது பழிமொழி இதனோடு தீர்ந்துவிடக் கருணை செய்யுமாறு சங்கப்புலவர் நாவினின்று நடம் புரியத் தண்டமிழ்த் தாயை,இளமை வனப்பென்று மகலா இன்றமிழ்த் தெய்வத்தை,மனமொழி மெய்களால் வணங்கி இந்நூன்முகத்தை முடிப்பாம்'. அடிகளாரிடத்திற் காணப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன் மொழிப் புலமையின் பிறிதொரு விளைச்சலாக ஒப்பியல் ஆய்வு மேலெழுந்தது. வள்ளுவரின் சிந்தனைகளை அரிஸ்டோட்டிலின் சிந்தனைகளுடன் ஒப்பு நோக்கினார். அடியாட்கு நல்லார் வழங்கிய நாடகக் குறிப்புகளை சேக்ஸ்பியரின் நாடக ஆக்கங்களோடு தொடர்புபடுத்தி நோக்கினார்.

தமிழ்மொழி தொடர்பான உற்றுணர்வே ஒப்பியழ் ஆய்வு முயற்சிக்கும் அடிகளாரை இட்டுச் சென்றது. ஆசியத் தளத்தில் இருந்த தமிழை அகிலத் தளத்திற்கு நீடிக்கச் செய்யும் புலமை நடவடிக்கையும் ஒரு வழிமுறையாக அவர் ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டார் என்று வாசித்தலும் தவறாகாது. நாடகங்கள் பெருமளவில் உலகியல் மயப்பட்டு நின்றமையால் பிற்காலத்திய இந்திய மரபிலே துறவிகள் நாடக இலக்கியங்களைத் தீண்டாது ஒதுங்கி வாழ்ந்தனர். மேலும் பௌத்த மரபு உலகியல் இன்பங்களை முற்றாக ஒதுக்கியது.

அடிகளார் துறவுநிலையிலிருந்தாலும் நாடக இலக்கியங்களில் ஈடுபாடுகொண்ட அகநிலைப்புரட்சியாளராக விளங்கினார். ஒரு வகையிலே மட்டக்களப்பின் வளமான கூத்துப் பின்புலம் அவர் மீது செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கலாம். மறுபுறம் அவரிடத்துக் காணப்பட்ட கிரேக்க மற்றும் ஆங்கில இலக்கியங்களின் ஈடுபாடும் நாடக இலக்கிய ஈடுபாட்டைத் தூண்டியது என்று துணியலாம். அவர் எழுதிய 'மதங்க சூளாமணி' என்ற நாடக தமிழ் நூல் நாடக இலக்கிய நோக்கில் மட்டுமன்றி ஒரு துறவியின் எழுபுலத்திலே வாசிக்கப்பட வேண்டிய நூலாகும்.

அவரது சமூகப் பணிகளும் மீள் நோக்கலுக்குரியவை. பாரதியின் கவிதைகளை முன்னிலைப்படுத்தியமை ஒரு புறம் இலக்கியப் பணியாகவும் மறுபுறம் சமூகப்பணியாகவும் அமைந்தது. பாரதியின் கவிதைகளில் உட்பொதிந்திருந்த சமூக உள்ளீடுகளை இச்சந்தர்ப்பத்தில் இணைத்து நோக்குதல் முக்கியமானது. சமூகப் பணியின் எல்லை விரிவாக்கத்தை முன்னெடுத்த 'மாற்றுச் சிந்தனையாளராகவும்' அடிகள் விளங்கினார். அண்ணாமலையிலே திருவேற்களச் சேரியிலும் யாழ்ப்பாணத்திலே புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகில் அமைந்த விளிம்பு மக்கள் கூட்டத்திலும் அவர் மேற்கொண்ட சமூகப்பணிகள் இந்துமத சமூகப் பணி எல்லைகளைத் தகர்த்தன. மேலும் மத விளிம்பைக் கடந்தும் அவரது சமூகப்பணிகள் விரிவடைந்தன. இஸ்லாமியச் சிறார்களையும் தமது சமூகப்பணிக் கரங்களுக்குள் அடக்கிக் கொண்டமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். சுவாமி விபுலானந்தரது பன்முகப்பணி களை மீள்நோக்கும் பொழுதும் மீள் வாசிக்கும் பொழுதும் விடுபட்ட புலக்காட்சிகள் மேலெழுகின்றன.



# பனுவல் பார்வை

## இலங்கையின் பொதுப்பறவைகள்

ஆதி

இன்று தமிழ்ச் சூழலில் பல்வேறு புதிய துறைசார் நூல்கள் அதிகம் வெளிவரத் தொடங்கியுள்ளன. இந்த வரிசையில் தற்போது வெளிவந்திருக்கும் புதிய வரவு 'இலங்கையின் பொதுப் பறவைகள்' என்னும் நூலாகும். இது பறவைகளை அடையாளம் காண்பதற்கான கைநூலாக அமைந்துள்ளது.

இந்நூலை சுற்றுச் சூழல் பேராசிரியர் மற்றும் பறவையியல் நிபுணர் பேராசிரியர் சரத் டபிள்யூ. கொடகம என்பவர் எழுதியுள்ளார். இலங்கையில் காணப்படும் பொது வான பறவைகளை அடையாளங் காணக்கூடிய படத்துடன் கூடிய கை நூலில் தேவை உணரப்பட்டதன் விளைவாகவே இந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது. குறிப்பாக தமிழ் மொழியில் (இலங்கையில்) பறவைகள் சம்பந்தமான புத்தகங்களை வெளியிடும் நோக்கத்திலும் இந்நூல் வெளியீடு முன்னோடி முயற்சியாக அமைந்துள்ளது.

இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி 1 பறவைகளை அடையாளம் காணும் முறைகள் பல்வேறு கூறுகளைக் கொண்டதாக விஞ்ஞான முறையியல் சார்ந்த அணுகுமுறைகளில் தொகுப்பாக உள்ளது. விளக்கப்படங்கள் இன்னும் தெளிவாக காட்டப்பட்டுள்ளன. பகுதி 2 பறவைகளின் தட்டுருக்களும் பறவைகளைப் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. இங்கும் நிறைய தெளிவான படங்களும் அவற்றுக்கான குறிப்புகளும் உள்ளன.

பறவையியல் தொடர்பிலான அறிவும் அனுபவமும் வரன்முறையாக கற்கை நெறி மரபுக்குட்பட்டு விளக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பறவையினங்கள் தொடர்பிலான அவதானிப்புக்கும் தேடலுக்கும் உரிய தளங்களை அடையாளப்படுத்துகிறது.

சூழலியல் சார்ந்த பின்புலங்களில் பறவையியல் கண்ணோட்டத்தையும் நுணுக்கமாக ஆய்வுக்குட்படுத்தும் பாதுகாக்கும் தன்மைகளையும் இனங்காட்டுகிறது. இதுபோன்ற நூல் தமிழுக்கு புதிது மட்டுமல்ல, இயற்கை சார்ந்த உயிரினப் பல்வகைமையைப் பாதுகாக்கும்.

நடைமுறைக்கும் புதிய கலாசார உணர்திறனை கையளிக்கும் கடத்தும் நன் நோக்கும் கொண்ட நூலாக ஆக்கம் பெற்றுள்ளது. நூலின் தனிச் சிறப்புகளில் ஒன்றாக பறவைகளின் சாதிகளுக்கான தமிழ்ப் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளமை நிச்சயம் குறிப்பிட வேண்டும்.





இந்நூலை தமிழ் மூலமாக்கித் தந்திருப்பவர் கணபதிப்பிள்ளை அசோகன். இவர் இதனை வெறும் மொழிபெயர்ப்பாக மட்டுமல்லாமல் துறைசார் அறிவையும் உரிய எண்ணக் கருக்களுடன் தமிழ்ச் சிந்தனையாகவும் வெளிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் அவரது பணி பாராட்டுக்குரியது.

இலங்கை களப்பறவையியல் குழு கொழும்புப் பல்கலைக்கழகம் இந்நூலினை அழகாக வெளியிட்டுள்ளது. இத்துறைசார் ஆர்வலர்கள் இந்நூலினை நன்கு பயன்படுத்தி மேலும் முன்னேறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச அரசியல்



*சிமொன் ரிஸ்டால்*

இராணுவ ஜெனரல் கும்பலொன்று பின்னாலிருந்து கொண்டு இயக்கிய எதேச்சாதிகார ஆட்சியின் கீழ் பல தசாப்தங்களாக இருந்துவந்த பர்மா தற்போது எதிர்பாராத வகையில் கிடைத்திருக்கக் கூடிய ஒரு 'ஆடம்பரத்தை' அனுபவித்துக்கொண்டிருக்கிறது போல் தோன்றுகின்றது.

பிரபல்யமான இரு 'ஜனாதிபதிகளின்' தலைமைத்துவத்தின் கீழான அரசாங்கமொன்றே பர்மாவில் இன்று அதிகாரத்திலிருக்கிறது போன்றதொரு தோற்றப்பாடு காணப்படுகின்றது. ஒருவர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி,மற்றவர் கௌரவத்தின் காரணமாக ஜனாதிபதிபோன்று தென்படுபவர். இந்தப் பொருத்தங் கெட்ட ஒத்துவராத ஒழுங்கு தற்போதைக்கு விழுந்துவிடாமல் இருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் வலுவாக உள்ளன. இதற்குக் காரணம் பர்மாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் செயன்முறைகளில் பங்கும் ஈடுபாடும் கொண்ட சகல தரப்பினருமே முன்னர் சென்ற பாதையில் பர்மா இனிமேல் செல்ல முடியாது என்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதேயாகும். ஆனால், இத்தகைய பொதுவான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு நாம் புதிய பர்மாவைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளை 'இந்த இரு ஜனாதிபதிகளும்' கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

இராணுவ அதிகாரக்கும்பல் அதன் நலன்களை எதிர்காலத்திலும் உறுதிப்படுத்தும் நோக்குடன் வரைந்த அரசியலமைப்பின் கீழான ஏற்பாடுகளின் அடிப்படையில் 2010 பிற்பகுதியில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு பதவிக்கு வந்தவர் தான் தீய்ன் சீன். ஆனால்,ஒரு முரண்நகையாக பர்மாவின் ஜனநாயகத்தொடக்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசியற் கைதிகளை விடுதலை செய்து, ஊடகங்கள் மீதான

## அரசியல் பதவியின்

மியன்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகீ கடந்த வாரம் (ஜூலை 9) செய்த பாராளுமன்றப் பிரவேசம், இராணுவ ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த தனது நாட்டுக்கு ஜனநாயகத்தை மீள்வித்துக் கொண்டு வருவதற்காக சுமார் கால் நூற்றாண்டு காலமாக அவர் நடத்திவந்த போராட்டத்தின் ஒரு புதிய கட்டத்தைக் குறித்து நிற்கிறது.

தலைநகர் நாய்ப்பிடோவில் அமைந்திருக்கும் பாராளுமன்றத்துக்கு மக்களால் தெரிவான உறுப்பினர் என்ற வகையில் அன்றைய தினம் முதற்தடவையாக வந்து தனது ஆசனத்தில் அமைதியேயுருவான முகத்துடன் அமர்ந்த சூகீ 'எனது நாட்டுக்காக என்னால் இயன்றதைச் செய்ய முயற்சிப்பேன்' என்று குறிப்பிட்டார்.

இந்த ஜனநாயகப் போராளி அரசியல் பதவியொன்றை முதலில் ருசிபார்க்க வந்திருக்கும் தருணம் அண்மைய [illegible]வன்முறைகளின் விளைவாகவும் மாணவர்கள் கைது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பர்மாவின் 'இரு ஜனாதிபதிகள்'

கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதுடன் மாத்திரம் நின்றுவிடாமல், ஒப்பீட்டளவில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள் நடத்தப்படுவதை அனுமதித்ததன் மூலம் தீய்ன் சீன் உலகை வியப்பிலாழ்த்தினார். அண்மையில் தீவிரமடைந்த இனத்துவ மோதல்களுக்கு மத்தியிலும் அவர் அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதிலிருந்து பின் வாங்கவில்லை. அதனால் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பர்மாவுக்கு எதிரான தடைகளில் ஒரு இடைநிறுத்தத்தைச் செய்திருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக ஒருபுறத்தில் தீய்ன் சீன் இருக்க,மறுபுறத்தில் பர்மாவின் ஜனநாயக இயக்கத் தலைவியான நோபல் சமாதானப் பரிசாளரான ஆங் சாங் சூகீ நிற்கிறார். மாற்றத்தை வேண்டி நிற்கும் பர்மிய மக்களின் நம்பிக்கைத் திருவுருவாக விளங்கும் சூகீ தற்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற போதிலும்கூட,நாட்டு அரசியலில் அவரது பாத்திரம் பிரதானமாக ஒரு தார்மீக வழிகாட்டி மற்றும் தனிமனித தேசிய மனச்சாட்சியாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. சூகீயினுடைய நோக்கு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படவேண்டியவை என்று பொதுவில் நம்பப்படும் அல்லது எதிர்பார்க்கப்படும் செயன்முறைகளின் மாதாந்த நிலைகளுடன் ஒத்துப்போகக்கூடியதாக இருக்குமா என்பது சர்வதேச அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ள முக்கியமான கேள்வியாகும்.



பர்மாவின் 'இரு ஜனாதிபதிகளின் கதை' கடந்த மாதம் தீய்ன் சீன் தனது இரண்டாவது கட்ட சீர்திருத்தங்களை அறிவித்த போது தீர்க்கமான ஒரு திருப்புமுனையை எடுத்தது. பொருளாதார வளர்ச்சி,வெளிநாட்டு முதலீடுகளைக் கவருதல் மற்றும் தேசிய உள்ளகக் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றின் மீதே புதிய கவனம் குவிக்கப்பட வேண்டுமென்று தீய்ன் சீன் வலியுறுத்தினார். மின்சாரவலு, ரெலிக்கொம் போன்ற முக்கிய துறைகளில் மாத்திரமல்ல,சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளிலும் அரசின் வகிபாகம் குறைக்கப்பட வேண்டும் என்பதும் அவரின் வலியுறுத்தல். இந்த மார்க்கத்தின் ஊடாகவே பரந்தளவில் சுபீட்சத்தை அளவிட முடியும் என்பது தீய்ன் சீனின் நம்பிக்கை.

இத்தகைய ஆர்வக் கருத்துகள் கோட்பாட்டு அளவில் மேற்குலகத்தவர்களின் காதுகளுக்கு இனியவை. திறந்த சந்தைப் பொருளாதார முறைமையை அரவணைக்கும் எந்தச் செயற்திட்டமும் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் வரவேற்கப்படும்,பர்மாவில் சீனா எந்தவிதமான மட்டுப்பாடுமில்லாமல் செல்வாக்குச் செலுத்த அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நாடுகள் நீண்ட நாட்களாக மனப்

## அனுபவத்தைப் பெற ஆரம்பித்திருக்கும் ஜனநாயகப் போராளி

காரணமாகவும் ஐயப்பாடான சூழ்நிலை கொண்டதாகவே காணப்படுகிறது. 67 வயதான நோபல் சமாதானப் பரிசாளரான சூகீயின் ஜன நாயகத்துக்கான தேசிய கழகம் கட்சிக்குப் பாராளுமன்றத்தில்




37 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சில மாதங் களுக்கு முன்னர் நடைபெற்ற இடைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஐரோப்பாவுக்கான இருவாரங்களுக் கும் கூடுதலான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிறகு தனது சொந்தத் தொகுதி மக்களைச் சென்று சந்தித்துவிட்டே அவர் தனது பாராளு மன்றப் பிரவேசத்தைச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைய வெளிநாட்டு விஜயங்களின் போது சூகீ தனது நாட்டை 'பர்மா' என்றே உரைகளின் போது குறிப்பிட்டார். இதனால் வெறுப்படைந்த அரசாங்கம் 'மியன்மார்' என்றே அழைக்க வேண்டுமென்று அறிவுறுத்தியது. ஆனால், சூகீ அந்த அறிவுறுத்தலை அலட்சியம் செய்து 'பர்மா' என்றே தனது தாய் நாட்டை அழைக்கப்போவதாகக் கூறினார்.

ஜனநாயக இயக்கத்தவர்கள் முன்னாள் இராணுவ ஆட்சியாளர்களுக்கு தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான ஒரு குறியீடாக முன்னைய பர்மா என்ற பெயரையே பயன்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருதசாப்தங்களுக்கு முன்னர் இராணுவ ஆட்சியாளர்கள் நாட்டின் பெயரை மாற்றிக் கொண்டனர். பர்மா என்பது பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் நினைவுச் சின்னம் போன்று இருக்கிறது என்பதும் பல்வேறு இனங்கள் வாழ்கின்ற நாடு பெரும்பான்மையினத்தவர்களான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைச்சலுக்கு உள்ளாகியிருந்தன. பர்மா விவகாரங்களில் மேற்குலகின் கைகள் பெருமளவுக்கு கட்டப்பட்டிருந்த அதேவேளை, சீனா அந்த நாட்டின் செழிப்பான இயற்கை வளங்களைச் சூறையாடியது. பர்மாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் சீனாவே மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது.

பர்மாவின் ஏழ்மைப்பட்ட பொருளாதாரத்தின் மீது பெய்ஜிங் கொண்டிருந்த சுரண்டல்த்தனமான பிடியைத் தகர்ப்பதில் இருந்த ஒரு ஆர்வமே தீய்ன் சீனின் எழுச்சியின் பின்னணியில் இருந்திருக்கக் கூடிய முக்கிய காரணி என்று கருதப்படுகிறது. 360 கோடி டொலர்கள் செலவிலான நீர்மின் அணைத் திட்டமொன்று சீனாவின் உதவியுடன் முன் வைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. கடந்த வருடம் அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டமை தீய்ன் சீனின் மேற்படி ஆர்வத்தை உருவகப்படுத்தியது.

2015-2016 மட்டில் நிகர உள்நாட்டு உற்பத்தியை மும்மடங்காக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நோக்கம் கொண்டிருக்கையில்,கொக்காகோலா போன்ற மேற்கத்திய பெருவர்த்தகங்கள் பல தசாப்தங்களுக்குப் பிறகு மீண்டும் பர்மாவுக்குத் திரும்பிவருவதற்கான அறிவிப்பைச் செய்திருக்கின்றன. கரையோரத்திலும் கடற்பகுதியிலும் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிக்கான கூடுதல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில்,ஷெவ்ரோன் மற்றும் டோட்டல் போன்ற சக்திவலு பல்தேசியக் கம்பனிகள் தங்கள் பங்கையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உல்லாசப் பிரயாணத்துறையிலும் இயற்கை வளங்கள் துறைகளில் முதலீடுகளைப்



"எந்தநேரத்திலுமே உள்ளுக்குள்ளால் வெடிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்ட ஒரு சஞ்சலமான அதிகாரச் சமநிலையின் காரணமாக சீர்திருத்தச் செயன்முறைகள் தொடரக்கூடியதாக இருக்கிறது என்பதை இந்த நிலைவரங்கள் எமக்கு உணர்த்துகின்றன. சூ கீ, தீய்ன் சீன் என்ற இரு தனிநபர்களிலேயே சீர்திருத்தச் செயன்முறைகள் பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றன. இருவரதும் ஆதரவுத் தளங்களுக்கு இடையேயான வெற்றிகரமான ஒத்துழைப்பின் மீதே அவை தங்கியிருக்கின்றன"

பெறுவதில் பர்மா நாட்டங்கொண்டிருப்பதாக கைத்தொழில் அமைச்சர் சூ தானே அண்மையில் அறிவித்திருந்தார். இயற்கை வாயு ஏற்றுமதி கடந்த வருடம் சுமார் 300 கோடி டொலர்க்கு அதிகரித்திருந்தது. இது 2013 இல் மேலும் கடுமையாக அதிகரிக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியிருக்கிறது. 'வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்குத் தீவிரமாக நாம் நாட்டங்காட்டுகின்றோம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வந்து முதலீடுகளைச் செய்வதற்கு சிநேகபூர்வமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன' என்றும் கைத்தொழில் அமைச்சர் கூறினார்.

பர்மாவின் 'மற்றைய ஜனாதிபதி'யிடமிருந்து வந்திருக்கக்கூடிய செய்தி மிகவும் தீர்க்கமான முறையில் எச்சரிக்கைத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அண்மையில் ஐரோப்பாவுக்கு மேற்கொண்ட விஜ

பேர்மன் (Burman)களுக்கு மாத்திரமே சொந்தமானது என்ற தோற்றப்பாட்டைக் கோருகிறது என்பதுமே பெயர் மாற்றத்துக்கு அன்று ஆட்சியாளர்கள் கூறிய காரணமாகும்.

தான் விரும்புகிற விதத்திலேயே தனது நாட்டை அழைக்கப்போவதாக சூகீ கூறுகிறார். 'ஒரு ஜனநாயக நாட்டிலே, மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே காரியங்களைச் செய்ய வேண்டும். எந்த வித கலந்தாலோசனையும் இன்றியே இராணுவம் பர்மாவை மியன்மார் என்று மாற்றியது' என்று அவர் யங்கோனில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார்.

பர்மா என்று அழைப்பதன் மூலமாக சூகீயும் அவரது கட்சியினரும் அரசியலமைப்பை ஏளனம் செய்வதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

'பேச்சுச் சுதந்திரமும் சிந்தனையைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதும் எவரையுமே அவமதிப்பதாக அமையாது. இது அடிப்படையில் ஜனநாயகக் கோட்பாடுகள், கொள்கைகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரம். எனக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பதால் நான் விரும்பிய பெயரைப் பயன்படுத்துவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்று கருதுகிறேன்' என்று சூகீ கூறியிருக்கிறார்.

உலகத் தலைவர்கள் கூட,இந்த நாட்டை எவ்வாறு அழைப்பது என்பதில் பெரும் சங்கடங்களை எதிர்நோக்கி வந்திருக்கிறார்கள்.

பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கெமரூனும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் பர்மா என்ற காலனித்துவப் பெயரையே பயன்படுத்துகின்றனர். கடந்த டிசம்பரில் இந்த நாட்டுக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் பர்மா என்று குறிப்பிட்டபோதிலும் அடிக்கடி அவ்வாறு அழைப்பதைத் தவிர்த்தார். சர்ச்சை மூழுவதைத் தவிர்ப்பதற்காக 'இந்த நாடு' என்றே அவர் அடிக்கடி குறிப்பிட்டார்.

**சர்வதேச ஆதரவு**

அண்மையில் ஐரோப்பாவுக்கு சூகீ மேற்கொண்ட விஜயத்தின் போது அவரது இலட்சியத்திற்கு எந்தளவுக்கு சர்வதேச ரீதியில் ஆதரவு இருந்து வருகிறது என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. சூகீயின் லண்டன் விஜயத்தை முன்னிட்டு 'த கார்டியன்' பத்திரிகை தீட்டிய ஆசிரியத் தலையங்கத்தில் பிரிட்டிஷ் மக்களுக்கு இருக்கும் சர்வதேசிய உணர்வு குறித்து தெரிவித்திருக்கும் கருத்து கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தின் போது ஆங் சாங் சூகீ தெரிவித்த கருத்துக்கள் தீய்ன் சீனின் திட்டங்களை அதைரியப்படுத்துபவையாக இருந்தன. ஒளிவுமறைவற்ற தன்மை, பொறுப்புக் கூறும் கடப்பாடு, சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் ஆகியவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கையில்,மேற்குலகின் முதலீடு சம்பந்தப்பட்ட விடயம் சகல தரப்பினருக்குமே மிகவும் ஆபத்தாக அமையும் என்று சூகீ திரும்பத் திரும்ப எச்சரிக்கை செய்தார்.

ஜெனீவாவில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தில் உரையாற்றிய சூகீ, சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றதும் தொழிலாளர் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கக் கூடியதுமான முதலீடுகளைத் தான் வரவேற்பதாகக் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. முன்னைய அரசாங்கம் சீனாவுடன் மேற்கொண்ட எண்ணெய் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து கேள்வியெழுப்பிய அவர், அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மியன்மார் எண்ணெய், வாயு நிறுவனத்துடன் (Myanmar Oil and Gas Enterprise) (Moge) கொடுக்கல்வாங்கல்களைச் செய்ய வேண்டாமென்று வெளிநாட்டுக் கம்பனிகளைக் கேட்டிருக்கிறார். சூகீயைப் பொறுத்தரை அந்த நிறுவனம் ஒளிவுமறைவற்ற தன்மையையோ,பொறுப்புடைமையையோ கொண்டதல்ல. நிலைபேறானதாகவும் நாட்டு மக்களுக்கு உண்மையான பயனைத் தரக்கூடியதாகவும் விளங்கவல்ல முதலீடுகளைக் கவரத்தக்க சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சூகீ அழைப்புவிடுத்தார்.

'சிறந்த நடைமுறை' ஒழுக்கக் கோவைகளை முதலீட்டாளர்கள் பின்பற்ற வேண்டும். சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் தராதரங்கள் மற்றும் சுற்றாடலியல் பொறுப்புணர்வு தொடர்பில் முதலீட்டாளர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள் விசாரணை செய்யப்பட வேண்டும். பிறருக்காக வாழ்வதற்கான நோக்கங்களுடன் முதலீட்டாளர்கள் வருவதில்லை என்பது எமக்குத் தெரியும். பிரதிபலனைத் தரக்கூடிய முதலீட்டையே நாம் ஏற்றுக்கொள்வோம். இலாபத்தைத் தரக்கூடிய முதலீட்டையே நாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால்,இந்த இலாபங்கள் முதலீட்டாளர்களுக்கும் எமது மக்களுக்கும் இடையே பகிரப்படுவதையே நாம் விரும்புகிறோம் என்று சூகீ பிரகடனம் செய்தார்.

சூகீயின் இந்த அறிக்கையையடுத்து தீய்ன் சீனுக்கும் அவருக்குமிடையே மோதல் ஏற்படப்போகிறது என்று அவதானிகள் கருதினார்கள். ஆனால், அத்தகையை எந்த மோதலுக்கும் இடமில்லை என்று இரு முகாம்களுமே நிராகரித்துவிட்டன. 'பர்மாவின் சீர்திருத்தங்களின் நிலை தொடர்பில் சூகீ தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பிளவை ஏற்படுத்திவிட்டன. இருவரும் முன்னுரிமை கொடுக்கவிருக்கின்ற விவகாரங்களுக்கிடையிலான வேற்றுமை அம்பலமாகியிருக்கிறது' என்று 'ராவடி' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டது.

'எந்தநேரத்திலுமே உள்ளுக்குள்ளால் வெடிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்ட ஒரு சஞ்சலமான அதிகாரச் சமநிலையின் காரணமாக சீர்திருத்தச் செயன்முறைகள் தொடரக்கூடியதாக இருக்கிறது என்பதை இந்த நிலைவரங்கள் எமக்கு உணர்த்துகின்றன. சூகீ, தீய்ன் சீன் என்ற இரு தனி நபர்களிலேயே சீர்திருத்தச் செயன்முறைகள் பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றன. இருவரதும் ஆதரவுத் தளங்களுக்கு இடையேயான வெற்றிகரமான ஒத்துழைப்பின் மீதே அவை தங்கியிருக்கின்றன' என்று ஆசிய ஆய்வாளரான கியுலியா சினோ பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஆங் சான் சூகீயின் கணிப்பு பல முனைகளில் பாராட்டத்தக்கது. ரஷ்யர்களும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்த முன்னாள் சோவியத் அணியின் நாடுகளின் மக்களும் 1990களில் கற்றுக்கொண்டதைப் போன்று,சுபிட்சங்கள் பகிர்ந்து கொள்ளப்படாவிட்டால், ஜனநாயகச் சீர்திருத்தங்களில் அர்த்தமிருக்காது. தற்போதைய அடிப்படைக் கேள்வி; நீண்டகாலமாகப் போற்றிப் பேணுகின்ற கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டே அதேவேளை சூகீயினால், பர்மா தற்சார்பிலான, பயனுறுதியுடைய விளைவுகளை அடைவதற்கு உதவ முடியுமா?. இந்த இரு ஜனாதிபதிகளின் கதை நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிறது.



2012, ஜூன் 21இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உரை

பிரிட்டிஷ் மக்களின் சர்வதேசிய உணர்வு ஆழமான வேர்களைக் கொண்டது. இத்தாலிய நாட்டுப் பற்றாளரான கரிபால்டி 1864இல் லண்டன் வந்து சேர்ந்த போது மக்கள் செய்த ஆரவாரத்தை அப்போதைய கார்டியன் செய்தியாளர் 'உணர்ச்சித் துடிப்புகளை அளவிடுவதற்கு உதவிய பெருங்காட்சியும் முழக்கமும்' என்று வர்ணித்திருந்தார். இந்தக் காட்சியும் முழக்கமும் இறுதியில் கண்ணீரையே வரவழைத்தன.

கரிபால்டியை வரவேற்கத் திரண்ட மக்கள் அலை விதிவிலக்கானது, தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆனாலும்,அடுத்து வந்த சந்ததிகளைச் சேர்ந்த லண்டன் பிரஜைகள் தங்களது சொந்த கரிபால்டிகளை வரவேற்பதற்கு அலையலையாகத் திரளவே செய்தனர். தேசம், இனம், எல்லைகள் கடந்து புகழ்பெற்ற பல கதாநாயகர்களை அவர்கள் தொடர்ச்சியாக வரவேற்று வந்திருக்கிறார்கள். உலகளாவிய சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் பாடுபட்ட உலகத் தலைவர்களை லண்டன் வாசிகள் வரவேற்பதில் எப்போதுமே பூரிப்பு அடைவார்கள்.

1918இல் அந்தச் சந்ததியினர் வூட்ரோ வில்சனை லண்டனில் தங்கள் கதாநாயகனாகக் கண்டனர், வரவேற்றனர், பூரிப்படைந்தனர். 1931இல் அந்தச் சந்ததியினர் மகாத்மா காந்தியைக் கண்டனர், பூரிப்படைந்தனர். 1990களில் நெல்சன் மண்டேலாவைக் கண்டு பரவசமடைந்தனர். இப்போது 2012இல் ஆங் சான் சூகீ என்ற கதாநாயகியைக் கண்டு பரவசப்பட்டனர் என்று கார்டியன் எழுதியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிய நெருக்கடி

# முட்டுக்கட்டையைத் தகர்க்க ஒரே வழி ஆயுதத்தடையே



ஜொனாதன் ஸ்ரீல்




சிரியாவில் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப் பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், அந் நாட்டு நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை மீண்டும் தீவிரப்படுத்தியிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனான், பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் அவற்றுக்கிடையேயான "நாசகாரத்தனமான போட்டாபோட்டியை" முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அழைப்பு விடுத்திருப்பதைக் கடந்த வாரம் காணக்கூடியதாக இருந்தது. உண்மையிலேயே இது மிகவும் சரியான ஒரு அழைப்பேயாகும். சிரியாவில் அரசியல் மாற்றத்தைத் தடுத்துக் கொண்டிருப்பதாக ரஷ்யாவை மேற்குலக வல்லாதிக்க நாடுகள் குறைகூறிக் கொண்டிருப்பதென்பது பாசாங்குத்தனமானதாகும். ஏனென்றால், மறுபுறத்திலே சிரியாவுக்குள் ஆயுதங்களின் வருகையைத் துரிதப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு மேற்குலகம் ஆதரவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் மேலும் ஆயுதங்கள் கொண்டுவரப்படுவது சிரிய நெருக்கடிக்கான இறுதித் தீர்வை மேலும் கூடுதல் மனித இழப்புகளுடனான தாக்குவதற்கே வழி வகுப்பதாக அமையும் என்பதிற் சந்தேகமில்லை.

கடந்த மூன்று மாதங்களாக ஆயுத பாணிக் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கப்படைப் பிரிவுகளுக்கும் இடையேயான மோதல்கள் படுமோசமாக அதிகரித்திருக்கின்றன. ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தின் படைகள் எதிரணியின் கொத்தளப் பகுதிகள் மீது இடைவிடாது ஷெல்தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். நூற்றுக்கணக்கில் குடிமக்களும் படை வீரர்களும் பொலிஸாரும் பலியாகியிருக்கிறார்கள். அரசாங்க ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைதியான முறையில் அரசியல் மாற்றமொன்று ஏற்படுமென்ற எதிர்பார்ப்பில் கடந்த வருடம் வீதிகளில் இறங்கியவர்களில் பலர் நெருக்கடியின் இராணுவமயத் தன்மை யின் கொடூரத்தைக் கண்டு விரக்தியடைந்து காணப்படுகிறார்கள். சலாபி அடிப்படைவாதிகளும் அல்-கயெடா பாணி குண்டுத் தாக்குதல் போராளிகளும் களத்தில் இறங்கியிருப்பதனால், மதசகிப்புத் தன்மைக்கும் இனங்களுக்கிடையிலான நல்ல அயலுறவுகளுக்கும் பெயர்போன இடம் என்ற சிரியாவின் அடையாளம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது.

இழப்புகள் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருப்பதற்கு மத்தியிலும் அரசாங்கம் இன்னமும் கூட தனது மேல்நிலைப்படை வல்லமையினாலும் பெரும் எண்ணிக்கையானோரைத் தடுத்து வைப்பது போன்ற நடவடிக்கைகளினாலும் வெற்றிபெற்றுவிட முடியுமென்று நம்புகிறது. கிளர்ச்சியாளர்களும் கூட, வெற்றிபெற முடியுமென்ற நம்பிக்கையை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் நவம்பரில் நடைபெறவிருக் கும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும், வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ) லிபியாவில் மேற்கொண்டதைப் போன்ற ஆகாயமார்க்கத் தாக்குதல்களை மேற்குலகம் சிரியாவிலும் மேற்கொள்ளும் என்று கிளர்ச்சியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். கிளர்ச்சியாளர்களு க்கு ஆயுதங்களை அனுப்புவதற்கான செயற்பாடுகளை அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனம் (சி.ஐ.ஏ) தென் துருக்கியில் இருந்து முன்னெடுத்து வரு கிறது. துருக்கி விமானப்படையும் நடவடிக் கையில் இறங்குவதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறது.

சண்டையில் வெற்றியை நாடுவதைவிட விட்டுக்கொடுப்பு அடிப்படையில் தீர்வு ஒன்றுக்கு வருவதே யதார்த்தபூர்வமானது என்று சிரிய நெருக்கடியில் சம்பந்தப்பட்ட தரப்பினரை நம்பவைப்பதற்கு அனானுக்கு உச்சபட்ச ஆதரவு தேவைப்படுகிறது. இறுதிப் பிரயத்தனத்தின் ஒரு அங்கமாக அனான் கடந்த வாரம் ஜனாதிபதி அசாத்துடன் டமாஸ்களில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். அதைத் தொடர்ந்து சிரிய எதிரணியினருடனும் பேசும் முயற்சிகளில் ஈடுபடத் திட்டமிட்டிருந்தார். போர் நிறுத்தமொன்றைக் கொண்டு வருவதற்கும் அதைத் தொடர்ந்து ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்கக்கூடிய அரசியல் செயன்முறைகளில் இறங்குவதற்கும் தங்கள் நண்பர்கள் மீது உலக வல்லாதிக்க நாடுகள் செல்வாக்கைப் பிரயோகித்தால் மாத்திரமே அனான் நடத்திவருகின்ற பேச்சுவார்த்தைகள் பயனுறுதியுடைய விளைவுகளைத் தரக்கூடியதாக இருக்கும்.

ஆயுதத் தடைவிதிப்பொன்றுக்கே இப்போது முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். எதிரணி அதன் தாக்குதல்களை நிறுத்துவதானால், நகர்ப்புறங்களில் இருந்து கனரக ஆயுதங்களை வாபஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமாறும் தடுப்புக் காவலில் உள்ளவர்களை விடுதலை செய்யுமாறும் ரஷ்யா அசா த்திடம் வலியுறுத்த வேண்டும். இதற்கு இணங்காவிட்டால், ரஷ்யாவின் இராணுவ விநியோகங்கள் நிறுத்தப்படு மென்று மாஸ்கோ அசாத்திற்கு தெட்டத் தெளிவாகக் கூறிவிட வேண்டும். இதேபோன்ற கடப்பாடுகளை ஈரானும் நிறைவேற்ற வேண்டும். இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கிளர்ச்சியாளர்களை நிர்ப்பந்திக்குமுகமாக, எந்தவொரு சூழ்நிலையின் கீழும் இராணுவ ரீதியான தலையீட்டைச் செய்யப் போவதில்லை என்று மேற்குலக நாடுகள் திட்டவட்டமாகப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அத்துடன் ஆயுதப்போட்டிக்கு நிதியுதவி செய்வதை கட்டாரும் சவூதி அரேபியாவும் நிறுத்த வேண்டுமென்றும் மேற்குலகம் வலியுறுத்த வேண்டும்.

பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு முன்நிபந்தனையாக பதவிவிலக வேண்டுமென்று அசாத்துக்கு விடுத்த கோரிக்கைகள் தோல்வியைக் கண்டுவிட்டன. அவரின் தற்போதைய பதவிக்காலம் 2014 வரை செல்கிறது. அந்த இடைப்பட்ட காலத்தை, அரசியல்நிருணயசபையொன்றைத்தெரிவு செய்வதற்கான தேர்தல்களுக்கும் ஏனைய சீர்திருத்தங்களுக்கும் தயாரிப்புகளைச் செய்வதற்கான தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை அமைப்பதற்குமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குப் பயன்படுத்துவது சிறப்பானதாக இருக்கும். நீண்ட கால ஆட்சியாளர் வெளியாரின் இராணுவத் தலையீடு இன்றி அதிகாரத்திலிருந்து இறங்கிய யேமன் நாட்டிடமிருந்து பயனுடைய பாடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்ற மாற்றம் சிரியாவில் ஏற்பட முடியாதா?

யேமன் மக்கள் கிளர்ச்சியின் போது சுமார் 265 குடிமக்களே பாதுகாப்புப் படைகளினால் கொல்லப்பட்டார்கள். சிரியாவில் கொல்லப்பட்டு வருகின்ற குடிமக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது யேமன் எண்ணிக்கை ஒரு அற்பமேயாகும். அலி அப்துல்லா சாலி சட்டபூர்வ - நியாயபூர்வத் தன்மையை இழந்துவிட்டார் என்று கூச்சம் போட்டு மேற்குலக நாடுகளும் அரபு லீக்கும் அவரைப் பழி தூற்றவில்லை. மீண்டும் ஒரு பதவிக்காலத்தை நாடி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று சாலி அறிவித்தபோது அது பெரியதொரு கௌரவக் குறைவாக இருக்கவில்லை. அவருக்கும் குடும்பத்தவர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால், அரசாங்கத்துக்கு அத்தகைய தெரிவு எதுவுமே வழங்கப்படவில்லை.

யேமன் நெருக்கடிக்கு இணக்கபூர்வமான தீர்வைக் கண்டதில் ஐ.நா.செயலாளர் நாயகத்தின் யேமனுக்கான விஷேட ஆலோசகர் ஜமால் பெனோமார் முக்கியமானதோர் பாத்திரத்தை வகித்தார். மொரோக்கோ நாட்டவரான அவர் தனது சொந்தநாட்டிலேயே ஒரு அதிருப்தியாளராக விளங்கிய பிரத்தியேகமான வரலாற்றைக் கொண்டவர். ஆனால், அனான் போன்று செல்வாக்கும் பிரபல்யமும் கொண்ட ஒருவரல்ல. அவர் யேமனுக்கும் சிரியாவுக் கும் இடையே ஏனைய வேறுபாடுகளையும் காண்கிறார். அதில் ஒன்று தடைகளை விதிப்பதற்கு தெரிந்தெடுக்கப்பட்ட நேரமாகும்.

"கடந்த அக்டோபரில் பாதுகாப்புச்சபையில் ஏகமனதாக தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டதையடுத்து, யேமன் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு இருந்த தடைதகர்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. 30 நாட்களுக்குள் நடை முறைப்படுத்தல் தொடர்பான அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு நான் கேட்கப்பட்டேன். இரு வாரங்களாக விசாரணையை நடத்திய நான் சாலியைச் சந்தித்துப் பேசினேன். எனது அறிக்கை மிகவும் எதிர்மறையானது என்று அவரிடம் கூறினேன். தடைகளை விதிப்பது குறித்து பாதுகாப்புச் சபையில் குரல்கள் எழுந்தன" என்று பெனோமர் அண்மையில் யேமன் தலைநகர் சானாவில் வைத்து என்னிடம் கூறினார்.

சாலி தனக்கு இருக்கக்கூடிய அச்சுறுத்தல்களைப் புரிந்து கொண்டார். உடனடியாகவே எதிரணியுடன் பேச்சுவார்த்தைகளில் இறங்குவதற்கு இணங்கினார் அவர். ஆனால், சிரிய நிலைவரத்தைப் பொறுத்தவரை தடைகள் மிகவும் முன்கூட்டியே விதிக்கப்பட்டுவிட்டன. அத்தடைகள் இனி மேலும்கூட, ஒரு பயனுடைய ஆயுதமாக விளங்குவதாக இல்லை.

யேமன் எதிரணியோ அல்லது அரசாங்கமோ படைப்பலத்தின் மூலமாக அல்லது வெளிநாட்டு இராணுவ உதவியுடன் வெற்றி பெற முடியுமென்று நினைத்ததில்லை. இது சிரிய நெருக்கடிக்கும் யேமன் நெருக்கடிக்கும் இடையிலான இன்னொரு முக்கியமான வித்தியாசமாகும்.

"சாலி இராணுவக்கமிட்டி ஒன்றை அமைத்து, இராணுவத் தீர்வொன்றை உத்தரவாதப்படுத்த முடியுமா என்று அந்தக்கமிட்டியிடம் கேட்டார். தங்களால் முடியாது என்று கமிட்டி உறுப்பினர்கள் கூறினார்கள். அவ்வாறு ஒரு இராணுவத் தீர்வை நோக்கி செயலில் இறங்கினால், ஆகக்கூடியபட்சம் நாட்டின் 20 சதவீத பகுதிகளே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். 25 சதவீதம் எதிரணியிடம் இருக்கும். ஏனைய பகுதிகளில் சட்டம், ஒழுங்கு முற்றுமுழுதாகச் சீர்குலைந்து விடுமென்று அவர்கள் சாலியிடம் கூறிவிட்டார்கள். அடுத்து சாலி அந்தக் கமிட்டியைக் கலைத்து விட்டார். இன்னொரு கமிட்டியை நியமித்தார். அந்தக் கமிட்டியின் உறுப்பினர்களும் அதேவிதமான பதிலையே அளித்தார்கள். இராணுவத் தீர்வில் நாட்டம் காட்டுவது பயனுடையதல்ல. அதனால் மனித இழப்புகளைப் பொறுத்தவரை செலுத்த வேண்டிய விலை மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்று அவர்கள் கூறினார்கள்" என்று பெனோமார் தெரிவித்தார்.

சிரிய நெருக்கடியைப் பொறுத்தவரை, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கச் செய்வதற்கே பெருமளவு முயற்சிகள் தேவை. துருவமயமாதல் படுமோசமானதாகும். பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமென்று விதந்துரைக்கின்ற எதிரணிக்குள் இருக்கக் கூடிய சக்திகள் அரசாங்கத்தின் கையாட்கள் என்று நாமகரணம் சூட்டப்பட்டு கண்டிக்கப்படுகிறார்கள். அசாத்தரப்பினரும் உருப்படியான சலுகைகளை வழங்குவதற்கு அல்லது விட்டுக் கொடுப்புகளைச் செய்வதற்கு தயாராயிருக்கும் என்பதும் நிச்சயமில்லை. ஆனால், உள்நாட்டுப் போரை தீவிரப்படுத்துவதென்பது பொறுப்பு வாய்ந்த தெரிவாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வன்முறைகள், படுமோசம்

சமூக வாழ்வியல்

உ.லிபிக்கா

கடந்த ஆறு மாதத்திற்குள் பொலிஸ் புள்ளி விபரவியலுக்கமைய சிறுவர் பாலியல் வன்புணர்ச்சி உட்பட சிறுவர் துஷ்பிரயோகம் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது கடந்த ஆறு மாதத்திற்குள், இது பற்றிய 975 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளது. இதில் வன்புணர்ச்சி தவிர்ந்த துஷ்பிரயோகங்கள் 700 என பதிவுகள் தெரிவிக்கின்றன. நாளாந்தம் 16 வயதிற்கு குறைந்த 4 சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிக்குட்படுத்தப்படுகிறார்கள்.

இதேவேளை 2010ஆம் ஆண்டில், 1089 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்புணர்ச்சி மற்றும் 235 பெண்களுக்கெதிரான பாலியல் வன்புணர்ச்சி முறைப்பாடுகளும், 2011ஆம் ஆண்டில் 1169 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்புணர்ச்சி மற்றும் 281 பெண்களுக்கெதிரானதுமான பாலியல் வன்புணர்ச்சி முறைப்பாடுகளும் பொலிஸ் புள்ளி விபரங்களில் பதியப்பட்டுள்ளன. இதில் 90 சதவீதமான வன்புணர்ச்சிகள் நியதிச் சட்ட வன்புணர்ச்சிக் குற்றங்களாகும். அதாவது, 16 வயதிற்கு குறைவான ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அந்தப் பெண்ணின் சம்மதத்துடன் பாலுறவு கொண்டாலும் அது நியதிச்சட்ட வன்புணர்ச்சிக் குற்றமாகும். 16 வயதிற்கு மேற்பட்ட ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அப்பெண்ணின் சம்மதத்துடன் பாலுறவு கொண்டால் அது வன்புணர்ச்சி ஆகாது என்பது சட்ட வரைவிலக்கணமாகும்.

அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.எம் ஹிஸ்புல்லாஹ், பாலியல் வன்புணர்ச்சி குற்றங்களில் நிரூபிக்கப்படுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள இன நல்லுறவு, ஆட்சி மொழி அமுலாக்கல் அமைச்சர், வாசுதேவ நாணயக்கார, எந்தக் குற்றமாகிலும் அதற்காக மரண தண்டனையை தான் எதிர்ப்பதாகவும், பாலியல் குற்றம் புரிந்தோருக்கான உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்படுவதை தான் எதிர்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விருப்பத்துடன் ஒன்று சேர்ந்தாலும் அது அம்பலமாகும் போது, பொதுவாக பெண்கள் தாங்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதையும் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது பலாத்காரமாக பாலுறவுக்கு உட்படுத்தப் படுகின்ற பெண்கள், சிறுவர்கள் தொடர்பான விடயங்களில் செல்லுபடியாகாது என்பதைப் புரிவோமாக.

பாலியல் உறவு என்பது திருமணத்தினூடாக சட்டரீதியாகவும், திருமணத்திற்கு அப்பால் சம்பந்தப்பட்ட தரப்பினரின் பூரண சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற போது, அது சமூகத்திற்கு எதிர்மறையான விளைவுகள் ஏற்படுவது மிகவும் அரிது. இதில் பாலியல் வக்கிரத்தை காண்பதும் அரிது.

உயிரினங்களுக்கு இயற்கையாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய உடல், உளத் தேவையாக பாலுறவு அமைகிறது. இதனை பிள்ளைகளை பெற்றுக் கொள்ளுவதற்கான மறு உற்பத்திக்கான, மறு உற்பத்தியை மறுக்கும் பாலுறவு என்று வகைப்படுத்தலாம்.

பெண்கள் காட்சிப்படுத்தலுக்குரிய பண்டமாகவும், பாலியலுக்குரிய நுகர்வுப் பண்டமாகவும் முதலாளித்துவ சமூ கத்தின் அபிவிருத்தியின் விளைவாக மாற்றப்பட்டுள்ளனர். இதில் இரு பாலாரான சிறுவர்களும், பெண்களும், வயது வந்த இரு பாலாரினதும் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பலவீனமான, வசதியான பண்டங்களாக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்கள்

மறுபக்கத்தில் மூலதனம் அல்லது அதிகாரங்களைக் கொண்டிருப்பவர்களின் வக்கிரங்களை தீர்த்துக்கொள்ளும் பாலியல் பண்டங்கள் அல்லது சொத்துகளாக சிறுவர்களும் பெண்களும் ஆக்கப்பட்டுள்ளனர். இந்தப் பின்புலத்தில் இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள பாலியல் துஷ்பிரயோகங்கள் வன்புணர்ச்சி அல்லது பாலியல் குற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு இயலும். அதனைச் சட்டம், சமூகவியல், பொருளாதாரம் அரசியல், பண்பாடு, சுகாதாரம் குறிப்பாக மனோவியல் ரீதியாகப் பார்ப்பதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்தி நீண்டகாலத்தில் இல்லாமல் செய்வதற்கான ஒரு சமூகத்தைப் படைக்கும் நோக்கத்துடன் முன்னேற முடியும்.

பாலியல் துஷ்பிரயோகங்களின் அதிகரிப்புக்கான முக்கிய காரணமாக பொலிஸார் கருதுவது, பெரும்பாலான பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் பிரிந்து வாழ்வோராகவோ, வெளிநாட்டில் பணி புரிவோராகவோ உள்ளனர். பாதிக்கப்பட்டோர் கூடுதலாக குறைந்த வருமானங்களில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு பின்பு, பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் சரளமாக இயங்கத் தொடங்கியதன் காரணமாக இத்தகைய முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

### சட்டத்தின் பார்வை

பாலியல் வன்புணர்ச்சி பற்றி இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனுடைய ஆரம்ப சட்டத்தில் இருந்த தண்டனையை விட அதிகரித்த தண்டனையையும், பாலியல் வன்புணர்ச்சி குற்றத்தை நிரூபிக்கும் தராதரத்தை நெகிழ்வுபடுத்தும் வகையிலும் 1995 தண்டனைச் சட்ட கோவைக்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்த திருத்தச் சட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தாலும், வன்புணர்ச்சியாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தவிர சிறுவர் பாலியல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் சிறுவர் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இலங்கை சட்டத்தின்படி பாலியல் வன்புணர்ச்சி சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஆரம்பத்தில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட போதும் சந்தேக நபருக்கு எதிரான வழக்குகளை சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வார்.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை பொறுத்தவரையில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் வன்புணர்ச்சி, சிறுவர்களை பாலியல் தொழிலில் உட்படுத்தல், அந்த நோக்கத்துக்காக சிறுவர்களை கடத்தி விற்றல் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

### தண்டனை

சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டும், அச்சட்டங்களின் கீழ் புதிய மருத்துவ பரிசோதனை முறைகளை அறிமுகம் செய்தும், விசாரணைகளை நடத்தும் பொலிஸாருக்கு சம்பந்தப்பட்ட புதிய பயிற்சிகள் வழங்கப்பட்ட போதும், கடுமையான தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதும், பாலியல் குற்றங்கள் வீழ்ச்சியடையாமையாலும் சட்டத்திலிருந்து தப்புபவர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளதாலும் இச்சட்டத்திற்கு திருத்தங்களைக் கொண்டு வர அரசாங்கத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள் ளது.

இதேவளை, சில நாடுகள் பாலியலைத் தொழிலாக மேற்கொள்வதையோ, விபசார விடுதிகளை வைத்திருப்பதையோ சட்டத்தில் அனுமதித்திருந்த போதும், இலங்கைச் சட்டத்தில் இதற்கு இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 16 வயது யுவதியை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தியது தொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜண்ட் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டியில் தாயாருடன் வசிக்கும் இந்தச் சிறுமி கடந்த 4ஆம் திகதி கடையொன்றுக்கு பொருட்களை வாங்குவதற்குச் சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த முச்சக்கரவண்டிச் சாரதியொருவர் அந்த சிறுமியை அணுகி தான் வீட்டில் கொண்டு சென்று விடுவதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, அந்த பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகப் புள்ளி ஒருவரின் புதல்வரும் முச்சக்கரவண்டியில் பயணித்ததுடன், சிறுமியை வாடி வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று, அங்கு இரு நாட்களாக சிறுமி மீது பாலியல் வல்லுறவு புரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சம்பவம் குறித்து சிறுமியே அவசர பொலிஸ் பிரிவிற்கு அறிவித்ததையடுத்து, அங்கு விசாரணைக்காக வந்த பொலிஸ் சார்ஜண்ட் அவரை ஏமாற்றி முச்சக்கரவண்டி ஒன்றில் ஏற்றி வாடி வீடொன்றுக்கு அழைத்துச் சென்று அங்கு சார்ஜண்ட்டும் முச்சக்கர வண்டிச்சாரதியும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தாயாரிடம் அவர்கள் இருவரும் அச் சிறுமியை ஒப்படைத்துள்ளனர்.பின்னர் வைத்தியசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸ் சார்ஜண்ட்டும் முச்சக்கரவண்டிச் சாரதியும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முறைப்பாடு செய்யச் சென்றவரையே இன்னுமொரு முறைப்பாட்டாளர் ஆக்கியுள்ளார் ஒரு பொலிஸ் சார்ஜண்ட். இது வேலியே பயிரை மேய்ந்த கதையா குமா? இதில் யார் பயிர்? யார் வேலி? பாலியல் வன்புணர்ச்சியில் குற்றம் புரிந்தோரும் பாதிக்கப்பட்டோரும் ஜடங்களாக இருந்தால் இந்த வேலி பயிர் கதை பொருந்தலாம். இங்கே பொருந்துமா?

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராணுவச் சிப்பாய் ஒருவர் வீட்டிற்கு அண்மையில் விளையாடிக்கொண்டிருந்த ஆறு வயதுச் சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தியதன் காரணமாக கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாய் அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் கடமையாற்றுபவராவார். இதற்கு முன்பும் 2010ஆம் ஆண்டில் சிறுமியொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவத்தின் பேரில் இவரின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதாரப் பார்வை

பாலியல், தொழில் வறுமை காரணமாக தொடங்கியதாகச் சொல்லப்பட்ட போதும் இப்போது இத்தொழில் பூகோளமயமாதல் காரணமாக பெரும்பாலும் சந்தைப் பொருளாதாரத்தில் கூறாக திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான விடுதிகள், வாகனங்கள் மற்றும் கசினோ போன்ற விளையாட்டுக் கழகத்தில் மறைமுகமான சட்ட அங்கீகார த்துடனும் பாலியல் தொழிலானது மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு அப்பால் இரு பாலாரான சிறு வர்களும் தேவைக்கு ஏற்ப வயது வந்த இரு பாலாருக்கும் விநியோகிக்கப்படுகிறார்கள். இவர்கள் "கடற்கரை பையன்கள்" (beach boys) என்ற பெயரில் விநியோகிக்கப்படுவது வழக்கம். இது தவிர சிறுவர்கள் ஆபாசத் திரைப்படங்கள், படக்காட்சிப்படுத்தல் என்ப வற்றால் தூண்டப்பட்ட சமூகம் சட்டத்துக்கு மாறாக சிறுவர்களை கடத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

ஆகவே சிறுவர்கள் ஆபாசப் படக்காட்சிப் படுத்தல், ஆபாச சஞ்சிகைகள் மற்றும் விளம்பரங்களுக்காக சந்தைப்படுத்தும் நோக்கில் பயன்படுத்தப்படுகிறார்கள்.

அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் இலங்கையில் மாபியா (mafia) கோஷ்டியி னரின் உதவியுடன் இச்செயல்கள் கேளி க்கை (entertainment) தொழிலாக மேற் கொள்ளப்படுகிறது. பாலியல் வியாபாரம் கேளிக்கை வியாபாரத்தின் பிரிக்க முடியாத பகுதியாகிவிட்டது. அத்துடன் அரசியல்வாதிகள் இவ்வியாபாரங்களுக்கு துணை போவதாலும், அவர்களின் அரசி யல் பலம் காரணமாகவும், அவர்கள் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்கு சுலபமாக உள்ளது.

சுற்றுலாத்துறை சார் பிரதேசங்களில் மலிந்து கிடக்கின்ற ஒன்றாக சிறுவர் துஷ் பிரயோகம் காணப்படுகின்றது. சுற்றுலாத் துறையால் பாதிப்புகளுக்கு உள்ளான சம்பவங்கள் கூடுதலாக இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலேயே அதி கரித்துக் காணப்படுகின்றது. பொருளா தார வளர்ச்சி, சுற்றுலாத்துறை அபிவிரு த்தி என்பவற்றின் அடிப்படையில் இத்த கைய பாலியல் வக்கிரகங்கள் மேலோங்கி யுள்ளன. வறுமை காரணமாகவும் வெளி நாட்டுப் பண மோகத்தாலும் வியாபார நோக்கில் பல முகவர் நிலையங்கள் இயங்கி வருவதாக தெரிய வந்துள்ளது. இவற்றுக்கு உடந்தையாக பெற்றோர்களும், உறவினர்களும் இருப்பதாகச் சொல்லப்படு கிறது.



சுற்றுலாத்துறை சார் பிரதேசங்களில் மலிந்து கிடக்கின்ற ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையால் பாதிப்புகளுக்கு உள்ளான சம்பவங்கள் கூடுதலாக இலங்கையின் கரையோரப் பிரதேச ங்களிலேயே அதிகரித்துக் காணப்படுகின்றது

அண்மையில் காலியில் வெளிநாட்டுப் பெண்கள் இருவர், எமது நாட்டு சிறுமிகளை வைத்து ஆபாசப் படங்கள் தயாரித்ததாக குற்றம் சாட்டப்பட்ட போதிலும் அவர்களுக்கு எதிராக எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தச் சிறுமிகளை கடத்திச் சென்று அந்த வெளிநாட்டுப் பெண் களிடம் கொடுத்தவர்கள் இலங்கையர்கள். அந்தப் பெண்களுக்கும் இந்த இலங்கை யர்களுக்கும் யாரால் தான் என்ன செய்ய முடிந்தது? பாவமில்லையா எங்கள் சிறுமி கள்?

பெப்ரவரி 6ஆம் திகதி 47 வயதான ஜேர்மனிய பெண்ணொருவர் திக்குவல்லை பகுதியில் உள்ள கேளிக்கை விடுதியில் அவரது கணவருடன் தங்கியிருந்த போது இனம் தெரியாத ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இதனடிப்படையில் விடுதிக்கு அருகில் வசி க்கும் இளைஞர் ஒருவர் கைது செய்யப் பட்டிருந்தார்.

### சமூகவியல், பண்பாட்டு ரீதியான பார்வை

பாலியல் பழக்கவழக்கங்கள் பண்பாட்டு ரீதியாக ஒழுக்கத்தின் மையமாக கொள்ளப் பட்ட போது விழுமியமாக பார்க்கப்பட வேண்டுமா?

பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப் பட்டவர்களை சமூகத்தில் தீண்டத்தகாதவர்க ளாக பார்க்கும் தன்மை நிலவி வருகிறது. அது மட்டுமல்லாது பாலியல் வன்புணர்ச்சி க்கு உட்படுத்தப்பட்டமையால் பிறந்த பிள்ளைகளை பண்பாட்டு ஒழுக்கம் என்ற நோக்கில் சமூகத்திலிருந்து நிராகரித்தும் தள்ளியும் வைக்கப்படுகின்றனர்.

இதேவேளை, துஷ்பிரயோகங்களை மேற்கொள்வோர் பெரும்பாலும் சமூகத்தின் பிடியிலிருந்து தப்பியே இருக்கின்றனர். இந்தச் சந்தர்ப்பங்கள் அவர்களை மேலும் குற்றச்செயல்களை தொடருவதற்கான வாய்ப்பை அமைத்துக் கொடுக்கிறது. ஆகவே பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்க ளின் எண்ணிக்கை அதிகரித்தும் செல்கிறது.

குடும்ப பழக்கவழக்கம், பண்பாடு என்ற பேரில் எமது நாட்டின் சில பகுதிகளில் பெற்றோரின் உடந்தையுடன் இளவயது திருமணங்கள் நடைபெறுகின்றன. அதாவது 12 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட சிறுமிகளுக்கும் யுவதிகளுக்கும் திருமண வயதை எட்டுவதற்கு முன்பே பெற்றோர்கள் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கின்றனர். இது இந்தியாவில் இல்லை இலங்கையிலும் நடப்பதாக நம்புவீர்களா? இவ்வகையான சம்பவங்கள் கூடுதலாக மகியங்கனை பிரதேசத்தில் இடம் பெற்று வருவதாக உத்தியோகபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்கிரமசி ங்க இளவயது திருமணம் பற்றி கூறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, மகியங்கனைப் பகுதியில் பொலிஸ் பிரிவினரினால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருவதாகவும், சிறுவர் சட்டம், திருமணச் சட்டம் பற்றி தெளிவுபடுத்தலும் இடம்பெற்று வருவதாகக் கூறினார்.

சர்வதேச ரீதியாகக் கூறப்படுகின்ற சிறுவர்கள், பெண்களின் உரிமைகள் வெறும் காகிதத்திலே மாத்திரமே உள்ளது. சமூக ரீதியாக சிறுவர்களும், பெண்களும் காட்சிப் பண்டங்களாகவே பார்க்கப்படுகின்றனர்

**சுகாதாரம், மனோவியல் பார்வை**

பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களில் ஈடுபடுவோர் முதலாளித்துவ சந்தைப்படுத்தலினால் அறிமுகம் செய்யப்பட்ட ஆபாசத் திரைப்படங்கள், ஆபாசப் படங்கள், ஆபாச இணையத்தளம் என்பவற்றின் ஈர்ப்பால், அவர்களின் நுண்ணிய உணர்வுத்தூண்டலினாலும் தூண்டப்பட்டு அவர்களின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கேளிக்கை விடுதிகளை நாடுகின்றனர். ஆனால் அவ்விடுதிகளில் அறவிடப்படும் கட்டணங்களை எல்லோராலும் செலுத்த முடியாது. எனவே நுகர்வு மறுக்கப்படுகின்ற போது, சாதாரணச் சூழலில் உள்ள அப்பாவிச் சிறுவர்களும் பெண்களும் இவர்களின் இச்சைகளுக்கு இரையாகின்றனர்.

இதேவேளை, குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் மது, போதைவஸ்துப் பழக்கத்துக்கு அடிமையானவர்களாகவே உள்ளனர். குறிப்பாக இளம் வயதினர், மாணவர்கள் கஞ்சா, சிகரட், ஹெரோயின், கொக்கெயின், அபின் போடீன் போன்ற போதைவஸ்து பாவனைக்கு உள்ளானோராக இருக்கின்றனர். இந்த பழக்க வழக்கங்களுக்கு ஏதுவானதாக தொழில்நுட்பத்தின் பாதகமான வளர்ச்சி காணப்படுகிறது.

> பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களை சமூகத்தில் தீண்டத்தகாதவர்களாக பார்க்கும் தன்மை நிலவி வருகிறது. அது மட்டுமல்லாது பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டமையால் பிறந்த பிள்ளைகளை பண்பாட்டு ஒழுக்கம் என்ற நோக்கில் சமூகத்திலிருந்து நிராகரித்தும் தள்ளியும் வைக்கப்படுகின்றனர்

ஆகவே குற்றம் புரிபவர்களும், துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களும் மீள்வதற்கு முடியாத கடினமான மனோ ரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்பதை அறிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்றவகையில் அதிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் உளவியல் ரீதியான ஆலோசனைகளை தேர்ந்தெடுத்து வழங்க வேண்டும்.

துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டோர் உள ரீதியாக மட்டுமல்லாது, உடல் ரீதியாகவும் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். அவர்களை மீட்டெடுக்கும் மருத்துவ, உள சிகிச்சைகளை வழங்குவது அவசியமானதாகும்.

இத்தகைய குற்றச்செயல்களை நாளாந்தம் கேட்டும் பார்த்தும் வாசித்தும் வரும் பெண்களும், சிறுவர்களும், பெற்றோருக்கும் தங்களுக்கும் இது ஏற்பட்டு விடுமோ என்ற உளவியல் பயத்தால் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு தற்போது இருக்கின்ற மற்றைய சுமைகள், பிரச்சினைகளுடன் இதுவும் ஒரு பெரிய பிரச்சினையாக வந்துவிட்டது.

மனித வளம் நாட்டுக்கும், சமூகத்துக்கும் முக்கியமானதாகும். இதில் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெரும்பாலான குற்றமிழைக்கும் ஆண்களும் அடங்குகின்றனர். இவ்வாறான குறை பாடாக இருக்கும் மனித வளம் குன்றியே உள்ளது. குன்றிப்போய் உள்ள மனித வளத்தினால் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொள்ள முடியாது.

எனவே வக்கிரத்துக்கு உட்படுவோர், இவக்கிரங்களைப் புரிவோர் ஆகியோரை மீட்கும் நோக்கில் புனர்வாழ்வு பற்றிய கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் உருவாகியுள்ளது. புனர்வாழ்வு மற்றும் உடல், உள ரீதியான சிகிச்சைகளை இவர்களுக்கு வழங்குவதன் மூலம், ஆக்கபூர்வமான மனித வளமாக இவர்களையும் மாற்ற முடியும்.

இவ்விடயம் தொடர்பாக அஹிம்சாமூர்த்தி என்று இன்றும் பரப்புரை செய்யப்படுகின்ற மகாத்மா காந்தி எனப்படும் மோகன் தாஸ். கே. காந்தி, நள்ளிரவு நேரத்திலும் ஒரு பெண் தனியாக சாலையில் எவ்வித இடையூறுமின்றி நடமாடக்கூடிய சூழ்நிலை நிலவும் போதே சுதந்திரம் என்பது மெய்யாகும் என்று தெரிவித்ததுடன், ஒரு பெண் தனக்கு எதிராக குற்றம் புரியப்படும் போது, தன்னுடைய பற்களையும், நகங்களையும் பாவித்தாவது தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார்.

சோவியத் ஒக்டோபர் புரட்சியின் கர்த்தாவான விளாடிமிர் லெனின், பாலியல் உறவு என்பது ஒரு குவளை நீர் அருந்தும் நிகழ்வன்று என்றும் அந்த உறவுக்குரிய ஒழுக்கக் கட்டமைப்பு பெண்களை மதிப்பதான அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பலருக்குத் தெரியாத, தெரியவிரும்பாத கருத்து.

| குற்றம் | தண்டனை |
|---|---|
| சிறுவர்களுக்கு எதிரான பாலியல் சுரண்டல் | • சிறைத்தண்டனை (5 வருடம், குறைந்த பட்சத்தண்டனை மற்றும் 20 வருட அதிகபட்சத்தண்டனை)<br>• தண்டப்பணமும் அறவிடப்படலாம். |
| சிறுவர்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் | • சிறைத்தண்டனை (10வருடம், குறைந்த பட்சத்தண்டனை மற்றும் 20 வருட அதிகபட்சத் தண்டனை)<br>• தண்டப்பணமும் அறவிடப்படலாம் |
| சிறுவர் ஆபாச திரைப்படம் | • சிறைத்தண்டனை ( 2 வருடம், குறைந்த பட்சத்தண்டனை மற்றும் 10 வருட அதிகபட்சத்தண்டனை)<br>• தண்டப்பணமும் அறவிடப்படலாம் |
| சிறுவர் கடத்தல் | • சிறைத்தண்டனை( 5 வருடம், குறைந்த பட்சத்தண்டனை மற்றும் 20 வருட அதிகபட்சத்தண்டனை)<br>• தண்டப்பணமும் அறவிடப்படலாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் களரி

# வாடகைத் தாய்மாரின் கண்ணீர்க் கதை

## மருத்துவத்தின் மறுபக்கம்



முப்பதே வயதுடைய அந்த இளம் பெண்ணின் மரணம் எந்தச் சலசலப்புமின்றி பத்தோடு பதினொன்றாக மறக்கப்பட்டுவிட்டது. பத்திரிகைகள் தலைப்புச் செய்தி கொடுக்கவில்லை. தொலைக்காட்சிச் சனல்கள் கண்டுகொள்ளவில்லை. யாரும் அவளது இறப்பைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அவளது உறவினர்கள் கூட கேள்வி எழுப்பாது மௌனம் காத்தனர். கள்ள மௌனம் என்பது அதுதானோ?

அகாலமாக இறந்த அந்தப் பிரமிளா பெற்றெடுத்த குழந்தைக்கு உடனடியாகவே அதிஉச்ச மருத்துவ உதவி கொடுக்கப்பட்டது. அது நிறைமாதப் பிள்ளை அல்ல. தாயின் ஆபத்தான உடல் நிலை கருதி 8 மாதத்தில் அவசர சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் பிறக்க வைக்கப் பட்டிருந்தது.

அமெரிக்கா செல்லப் போகிற குழந்தை அல்லவா? அதிசிறந்த மருத்துவ உதவிகள் கொடுக்கப் பட்டதில் ஆச்சரியமில்லை.

### தாய் ஏன் இறந்தாள்?

அஹமதாபாத்தைச் சேர்ந்த பெண்களுக்கான பல்ஸ் மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரியான Dr.Manish Banker இந்த மரணம் பற்றி இவ்வாறு சொன்னதாக அக்கறை உள்ள ஒரு சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. "வழமையான மருத்துவப் பரிசோதனைக்கு வந்த அந்தப் பெண் திடீரென ஏற்பட்ட வலிப்பினால் மயங்கி விழுந்திருந்தாள். உடனடியாக அவளை சிகிச்சைக்கு எடுத்தோம். கடுமையான நிலையில் இருந்ததால் உடனடியாகஅவசர சிசேரியன் சத்திரசிகிச்சை செய்தோம்". சத்திர சிகிச்சைக்கு ஆளாக்கப்பட்ட பிரமிளா உடனடியாக வேறொரு மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டாள். மாற்றப்பட்டதற்குக் காரணம் அத்தகைய ஆபத்தான நோயாளிகளை கையாள்வதற்கான வசதி அங்கு இல்லை என்பதாகவே இருக்கலாம். சடுதியான இருதய நிறுத்தத்தால் (Cardiac Arrest) கடுமையான நிலையில் இருந்த அவள் சிகிச்சை பயனளிக்காது அங்கு இறந்தாள்.

அந்தத் தாயின் உயிர் துச்சமானதாகவும், குழந்தையின் உயிர் பெறுமதிமிக்கதானதாகவும் ஆனது எதனால்?

### வாடகைத் தாய்

காரணம் அவள் ஒரு சாதாரண வாடகைத்தாய். குழந்தையோ அமெரிக்க மில்லியனரின் உயிரியல் சுவடுகளைச் சுமக்கும் மறைமுக பணக்கார வாரிசு.

வாடகைத் தாய்களின் பிரச்சினை இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் எமது அயல்நாடான இந்தியாவைப் பொறுத்தவரையில் பெருமளவு இருக்கிறது. சுமார் 25,000 குழந்தைகள் வருடாந்தம் வாடகைத் தாய்மாரால் பெற்றெடுக்கப்படுவதாக மதிக்கப்படுகிறது. வெளியே அதிகம் பேசப்படாத தொழிலாக இருந்தபோதும் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதிமிக்கதாக இருக்கிறது.

இவர்களில் இரு வகைகள் உண்டு.

கரு முட்டை, விந்து இரண்டுமே வெளியிலிருந்து பெறப்பட்டு, செயற்கையாக இணைய வைக்கப்பட்டு அதனால் பெறப்பட்ட கருமுளையை (Embrayo) வாடகைத் தாயின் கருப்பையில் வைத்து வளரச் செய்தல் ஒரு முறை. இங்கு கருப்பையில் வளரும் குழந்தைக்கும் வாடகைத் தாய்க்கும் எந்தவித ஜெனடிக் தொடர்பும் கிடையாது.

இரண்டாவது முறையில் வாடகைத் தாயின் கரு முட்டையை வாடகைக்கு பெறும் ஆடவனின் விந்துடன் செயற்கையாக இணையச் செய்து பின் இவளது கருப்பையில் வைத்து வளரச் செய்தலாகும். இங்கு அது அவளது குழந்தை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆத்மார்த்த ரீதியான தொடர்பு இங்கு அவளுக்கும் மிகவும் நெருக்கமானது என்பதில் சந்தேகம் இல்லை.

### பணம் கொழிக்கும் தொழில்

தாயின் ஆரோக்கியத்தை விட பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு இயங்கும் இந்தத் தொழிலானது சட்டங்களின் கைகளில் அகப்படுவது இல்லையென்றே சொல்லலாம். இதற்குக் காரணம் வலுமிக்க டொலர்களின் பெறுமதிக்கு முன்னால் அபலைப் பெண்களின் தீனமான குரல்கள் அடங்கிப் போகின்றன என்பது மட்டு மல்ல காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப புதிய சட்டங்கள் இயற்றப்படாமல் தாமதப்படுத்துவதும் மற்றொரு காரணமாகும். செயற்கைக் கருவூட்டல் கிளினிக்குகள் (IVF) என்ற பெயருக்குள் மறைந்து நின்று செயலாற்றுவதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாகத் தெரிவதில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

- உலகளாவிய ரீதியில் ஆண், பெண் இருபாலாரது மலட்டுத்தன்மையும் அதிகரித்து வருகின்ற நிலையில் தமக்கென ஒரு வாரிசை மாற்று வழிகளில் தேடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தெரியாத ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதை விட தமது உயிரியல் கூறுகளைக் கொண்ட, கொண்டிருக்கக் கூடிய குழந்தையைச் செயற்கைக் கருவூட்டல் முறையில் பெறுவது விருப்புடையதாக இருக்கிறது. மேற்கூறிய கிளினிக்குகள் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய முனைகின்றன.
- இந்தியாவின் பெரிய நகர்கள் எங்கும் இத்தகைய கிளினிக்குகள் இயங்குகின்றன. இப்பொழுது சிறிய பட்டினங்களிலும் தலை தூக்குகின்றன.
- இங்கு செயற்கையாகக் கருவூட்டப்பட்டுக் கிடைக்கும் குழந்தைகளில் 50 சதவிகிதத்திற்கு மேலானவை மேலை நாடுகளிலிருந்து வரும் பணக்காரர்களுக்காகவே உற்பத்தியாகின்றன.
- குழந்தையின்மைக்கான சிகிச்சைகளும், வாடகைத் தாய்மாரைப் பிடிப்பதும் இந்தியாவில் மலிவானது என்பதால்தான் இங்கு இத்தொழில் சூடுபிடித்துள்ளது.
- இக் கிளினிக்குகளின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை கிடையாது. வாடகைத் தாயோடு செய்யப்படும் ஒப்பந்தங்களில் உள்ள நுணுக்கமான சரத்துகளால் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் வாடகைக்கு அமர்த்திய பெற்றோர்கள் பிரச்சினைகளுக்குள் அகப்படாமல் தப்பிக்க முடிகிறது. பாதிப்புறுவது அப்பாவிப் பெண்களே.
- எதிர்பாராதவிதமாக வாடகைத் தாய்க்கு கடுமையான நோய் அல்லது பாதிப்பு கர்ப்பத்தில் ஏற்பட்டால் கருவைக் காப்பதற்காக அவளது உயிரைத் தக்க வைத்திருப்பதற்கான சரத்துகளும் அவ் ஒப்பந்தங்களில் அடங்கியிருக்கும். அதாவது தாயைக் காப்பாற்றுவதற்காக அல்ல,கருவை உயிருள்ள குழந்தையாகப் பெற்றெடுக்க வைப்பதற்காக. அவளது உயிரைச் செயற்கையாக இயந்திரங்களால் தேவைப்படும் காலம் வரை இயக்க வைப்பார்கள்.
- தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அவளது குடும்பத்தினருக்கு பணத்தைக் கொடுத்துவிடுவார்கள். கதை அத்துடன் மூடி வைக்கப்படும். பாவம்! இதுதான் பிரமிளாவின் கதையும் ஆயிற்று.

### மருத்துவ ரீதியான பாதிப்புகள்

குழந்தையற்றவர்களுக்கு அவர்களது உயிரணுக்களின் கூறுகளைக் கொண்ட வாரிசுகளை உருவாக்கும் குழந்தை உற்பத்தித் தொழிற்சாலைகள் இவை. வறுமையில் உழலும் இந்தியப் பெண்கள் அதற்காக தமது கருப்பைகளை வாடகைக்குக் கொடுக்கிறார்கள். இந்த மருத்துவச் செயற்பாட்டால் அந்த வாடகைத் தாய்க்கு ஏற்படும் உடல், உள ரீதியான பாதிப்புகள் பேசப்படாமலே போய்விடுகின்றன. தனது வயிற்றில் வளரும் அந்தக் குழந்தையின் ஒவ்வொரு சிறு துடிப்பையும் அசைவுகளையும் உணர்ந்து, அதனோடு மௌன மொழியில் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, அதன் வளர்ச்சியில் பத்து மாதங்களாக மகிழ்ந்து நின்ற தாய் சேய் உறவானது ஒரே நிமிடத்தில் அறுத்துப் பிரிக்கப்படுகிறது. குழந்தைக்கென அவளது உடல் உற்பத்தி செய்யும் முலைப்பாலானது பிரிவின் ஏக்கத்தில் சுரக்கும் அவளது கண்ணீருடன் கலந்து விரயமாகிறது. அவளுக்குப் பரிசாகக் கிடைக்கும் பிரிவாற்றாமை, தனிமையுணர்வு, குற்றவுணர்வு, மனப்பதற்றம், விரக்தி ஆகியவற்றுடன் தனது வாழ்நாளைக் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறாள், அபாக்கியவதியாகிறாள்.

கரு கலைந்து போகாமல் இருப்பதற்காக அவளுக்கு ஏராளமான ஹோர்மோன் ஊசிகள் தொடர்ச்சியாகப் போடப்படுகின்றன. இவற்றால் அவளது எதிர்கால நலத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஏராளம். அவளது




மாதவிடாய்ச் சக்கரத்தின் ஒழுங்குமுறை பாதிப்புறுகிறது.

மகப்பேறு பெரும்பாலும் இயற்கையானதாக இருப்பதில்லை. அவளது கருப்பையை வாடகைக்குப் பெறுபவர்களின் காலநேர விருப்பங்களுக்கு ஏற்ப மகப்பேற்று நேரம் தள்ளிப் போட அல்லது முன்னகர்த்தப்படுகிறது.

சிசேரியன் சத்திரசிகிச்சை மூலமே குழந்தை பெறுவிக்கப்படுகிறது. இது மருத்துவக் காரணங்களுக்கானது அல்ல, பணம் கொடுத்தவர்களின் தேவைகளுக்காகவே நடக்கிறது. அவசியமற்ற இத்தகைய சத்திர சிகிச்சை மூலம் அவள் வாழ்நாள் முழுவதும் படப்போகிற உடல், உள பாதிப்புகள் கவனத்தில் எடுக்கப்படுவதே இல்லை.

### தவறான நடைமுறைகள்

மருத்துவ ரீதியான வேறு பல தவறான நடத்தைகளுக்கும் இத்தொழிலில் குறைவில்லை.

முக்கியமானது நான்கிற்கு மேற்பட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

கருமுளைகள் (embrayo) ஒரு தடவையில் அவளது கருப்பைக்குள் வைக்கப்படுகிறது. சில கலைந்தாலும் ஒன்றாவது தப்பும் என்ற காரணத்திற்கான ஏற்பாடு இது. பிற்பாடு தமது தேவைகளுக்கு ஏற்ப கருக்குறைப்புச் (foetal reduction) செய்யப்படுகிறது. பெரும்பாலான மருத்துவர்களால் ஏற்கப்படாத மருத்துவ நெறிமுறையாக இது இருக்கிறது.

### பெண்கள் ஏன் இணங்குகிறார்கள்? பாதிப்புகள் இருந்தபோதும் பல பெண்கள் வாடகைத் தாயாவதற்கு ஏன் தயாராக இருக்கிறார்கள்?

பொருளாதார நிர்ப்பந்தங்கள் தான். நிதம் குத்தென ஏறிச் செல்லும் வாழ்க்கைச் செலவில் தமது நாளாந்த வாழ்வைக் கொண்டிழுப்பதே பெரும்பாடாக இருக்கிறது. தமது பொருளாதாரத்தை தக்க வைப்பதற்கு அவளிடம் இருக்கக்கூடிய ஒரே மூலதனம் அவளது கருப்பை ஒன்றுதான். அதை வாடகைக்கு விடுவதன் மூலம் தனது வீட்டுப் பொருளாதாரத்தைச் சமாளிக்க முடியும். சிலரால் தமது பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வழங்க முடிந்திருக்கிறது. சிலரால் சிறிய வீடு ஒன்றைத் தங்களுக்குச் சொந்தமாகக் கட்டிக் கொள்ளவும் முடிந்திருக்கிறது.

இதனால் ஒரு கருவை வயிற்றில் சுமக்கும்போதே மற்றதை சுமப்பதற்கான ஆயத்தங்களைச் செய்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

இருந்தபோதிலும் இவர்கள் யாவரும் தாம் வாடகைத் தாயாக இருப்பதால் ஏற்படப் போகும் பாதிப்புகளையும், தாங்கள் செய்யும் ஒப்பந்தங்களிலுள்ள ஓட்டைகளையும் புரிந்து அப்பணிக்குச் செல்பவர்கள் அல்ல. நவயுகத்திற்கான புதிய சட் டங்கள் அவர்களைக் காக்க வேண்டும்.

இவ் ஏழைப் பெண்களின் ஆரோக்கியத்தைவிட பணம் கொழிப்பவர்களுக்கு குழந்தை பெற்றுக் கொடுப்பதால் தமக்குக் கிடைக்கப்போகும் ஆதாயங்களையே நினைக்கும் மருத்துவர்களின் செயற்பாடுகள் அவர்களது தொழில் தர்மத்திற்கு ஏற்றதல்ல. இதற்குக் காரணம் மருத்துவத் தொழில் என்பது சேவை என்பதற்கு அப்பால் பணமீட்டும் தொழிலாக மாறிவிட்டது. எல்லா மருத்துவர்களும் அவ்வாறு இல்லாவிட்டாலும் அத்தகையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பது கவலையான விடயம்தான்.

# பிடிபடுகிறது பிரபஞ்சம்



ஆர்.நரேந்திரன்

1964ஆம் ஆண்டு இது பற்றிய கொள்கை முன்வைக்கப்பட்டாலும் அயன் ஸ்பீன் காலத்தில் வாழ்ந்த இந்திய பௌதிக விஞ்ஞானி சத்தியேந்திர நாத்போஸ் என்பவரே இத்துகள் பற்றி முன்மொழிந்தவர் ஆவார். அவரின் bose என்ற சொல் மருவியே boson என வந்தது. ஆனால் இன்று அவர் மறக்கப்பட்டவராகவே கருதப்படுகிறார். இங்கிலாந்து எடின்பரோ பல்கலைக்கழக பௌதியவியலாளர் ஹிக்ஸ் பெயராலேயே இது அழைக்கப்படுகிறது. ஆனாலும் இத்துகள் நீண்டகாலமாகவே டிமிக்கி கொடுத்து வந்ததால் ஒரு விஞ்ஞானி இதனை 'நாசமாகப் போன துகள்' என்று சலித்துக் கொண்டார். அதனையே அழகுபடுத்த சமயோசிதமாக பப்பராசிகள் அதனை கடவுள் துணிக்கை என அழைக்கலாயினர். முன்னர் H+ அயன் செறிவு ஆனது பத்தினது மறை வலுவேற்றிய பெறுமானமாக இருந்ததை Sorensen என்பவர் PH என அழகுபடுத்தியதுபோல் இத் துகளும் அழகான பெயர் பெற்றுள்ளது. இத்துகள் 04-07-2012 புதன்கிழமை இடம்பெற்ற பாரிய வெடிப்பின் போது கண்டறியப்பட்டு இன்னமும் கண்டறியப்படவேண்டியுள்ளது. அதாவது அதையொத்த துகள் போன்று அமைந்த உத்தேச (tentative) துகள் பரிபூரணமாகவில்லை. இதற்குரிய முக்கிய காரணங்களாக அது மிகவும் குறைந்த வாழ்வுக் காலம் (1/10 21 செக்கனில்) அல்பாயுசு கொண்டதாலும் இளகு தன்மை அதாவது வேறு துகள்களாக உடன் மாறி விடுவதாலும் பரிசோதனையில் கண்டறியப்பட்ட துகளில் குழப்பநிலை நீடிக்கிறது.

## அந்தத் துகள் அம்பலம்

அடி முடி தேடும் படலத்தில் அந்த முடிவுக்கும் முடிவான துகள் கண்டறியப்பட்டது.

| | |
|---|---|
| குறியீடு : | HO |
| பெயர் : | Higgs boson ஹிக்ஸ் போசோன் |
| காலம் : | 04-07-2012 புதன்கிழமை |
| இடம் : | ஜெனீவா அருகிலுள்ள சுவிஸ் - பிரான்ஸ் எல்லையிலுள்ள CERN (ஐரோப்பிய அணு ஆராய்ச்சிப் பேரவை) |
| பரிசோதனை - | Large Hadron colloider உபகரணத்தில் நிலத்தின் கீழ் 27 கி.மீ.ஆழத்தில் |
| கொள்கை : | இங்கிலாந்து எடின்பரோ பல்கலைக்கழக பௌதிகவியலாளர் ஹிப்ஸ் மற்றும் 5 பேர் அடங்கிய விஞ்ஞானிகள் |
| ஏற்றம் : | பூச்சியம் |
| நிறமாற்றம்: | பூச்சியம் |
| திணிவு : | 1/133 பங்கு புரோத்தோன் |
| தனித்துவம்: | ஏனைய முடிவு உப அணுத்துணிக்கைகளுக்கு திணிவு வழங்கல். |
| ஆயுள் : | அற்ப ஆயுள் |


## இத்துகள்களின் வகிபாகம்

இன்று பௌதிகவியலில் துகள்கள் பற்றிய, ஆராய தனித்துறையே உள்ளது. துகள் இயல்பியல் என இது அழைக்கப்படுகிறது. சடப்பொருட்களின் தொடர்ச்சியற்ற தன்மை பற்றி இது ஆராய்கிறது. இதன் கருத்து சடப்பொருட்கள் யாவும் துணிக்கைகளால் ஆனவை என்பதாகும்.

இடத்தை அடைப்பதும் திணிவு உடையதுமான பதார்த்தமே சடப்பொருள் ஆகும். இது திண்மம், திரவம், வாயு என்ற நிலைகளில் காணப்படுகின்றது. இவை மேலும் அடிப்படைத் துணிக்கைகளான (Fundermental particles) (Atom) அணு மூலக்கூறு (Molecule) அயன் (Ion) என்பவற்றால் ஆனது. அணுவை மேலும் பிரிக்கும் போது உப அணுத் துணிக்கைகள் அல்லது முடிவுத் துணிக்கைகளாக (Terminal particles) இலத்திரன் (e) புரோத்தோன் (p) நியூத்திரன் (n) என்பன அமைகின்றன. இவற்றில் e தவிர p யும் n உம் திணிவு உடையன.

இவ்விடத்தில் திணிவு பற்றி விளக்க வேண்டும். திணிவு என்பது சடத்தின் அளவாகும். இதற்கு புவியீர்ப்பு விசை கிடைக்கும் போது நிறை பெறுகிறது. பூமியில் 1 Kg இற் நிறையுடைய தேயிலை பக்கற் ஒன்று சந்திரனில் ¼ K.g ஆக இருக்கும். காரணம் சந்திரனின் புவியீர்ப்பு விசை பூமியினது ¼ பங்காகும்.

புரோத்தோனும் நியூத்திரனும் சடத்தினை எவ்வாறு பெற்றன. அதற்குக் காரணமான துகள்கள் எவை. இயற்கையிலேயே திணிவு கொண்ட இந்தத் துகள்கள் எவ்வாறு புரோத்தோனினுள்ளும் நியூத்திரனினுள்ளும் சென்று முடிவிற்கும் முடிவான துகளாகின. அவ்வாறாயின் சடப்பொருளின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்திற்கும் அதன் வழியாக கிரகங்கள் கோள்களின் தோற்றத்திற்கும் அதன் மூலம் பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாவாக கடவுள் துணிக்கை ஒரு பெரும் வகிபாகத்தினைச் செய்கிறது. இதன் மூலம் பௌதிக நியமத் துணிக்கையாக ஹிக்ஸ் போசன் துணிக்கை அமைகிறது. இந்த நியம துணிக்கை மூலம் ஏனைய துணிக்கைகள் பற்றியும் அவற்றின் இடைத்தாக்கங்கள் பற்றியும் விளக்க முடிகிறது.





### மனுக்குலத்தின் மாண்பு

சூழல் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு உயிரினமாக மனிதன் கூர்ப்பில் பரிணமித்தபின் அவனுக்கு என்று சில தலையாய கடமைகள் உண்டு.

அதுவே எமது பின்னோக்கிய வேர்களை (Roots) தேடுவதாகும். அதன்படி பூமியில் முதலாவது உயிர் எவ்வாறு தோன்றியது என்பதற்கு விடையளிக்க வேண்டும்.

உயிரின் தோற்றம் A.I.Oparin தோற்றம் பற்றி முன்வைத்த கொள்கையின்படி ஆதி வளிமண்டலத்திலுள்ள $NH_3$, $H_2O$ (நீராவி), $CH_4$, $H_2$ வாயுக்கள் மின்னல் கிரகங்களில் சக்தி பெற்று சிறிய சேதன மூலக்கூறுகளாகி பின் திரள் அடைந்து கூழ்நிலை விறாத்தாகி (Premordial soup) பின் முன் கருவன்கள் (prokaryotic cells) அதன் பின்னர் அவை ஒன்றாக கூட்டாகி அகவொன்றியமாகி மெய் கருவன்கள் (Eukaryotic cells) தோன்றின எனக் கூறப்பட்டது. கொள்கை கூறுபவர்கள் அதனை தமது கருதுகோளுக்கு விளக்க மாகவே கூறுவர். அது விஞ்ஞான முறையில் பரிசோதனைகள் மூலமே மெய்ப்பிக்கப்பட வேண்டும். அதனை மில்லர் என்பவரும் ஹல்டேன் என்பவரும் ஆய்வுச்சாலையில் ஆதி வளிமண்டலத்தை (ஐதரசனின் தாழ்த்தப்பட்ட சேர்வைகள்) உருவாக்கி மின் இறக்கம் மூலம் சிறிய சேதனமூலக்கூறுகளை உருவாக்கி மெய்ப்பித்தனர். ஆனாலும் இது மனுக்குலத்திற்கு உடனடிப் பலன் எதையும் தரவில்லை.

அதேபோலதான் 1964 ஆம் ஆண்டு ஹிக்ஸ் கொள்கை மூலம் முன்வைக்கப்பட்ட கொள்கையானது இரு குழுக்களான (Atlas) மற்றும் ஒரு குழுவினரால் தனித்தனியே பரிசோதிக்கப்பட்டது. 27 கி.மீ. ஆழத்தில் 100 மீற்றர் விஸ்தீரணத்தில் (அதாவது ஒலிம்பிக் நீச்சல் தடாக அளவில்) வைத்து எதிரும் புதிருமாக புரோத்தோன்கள் இரண்டு காந்தப் புலங்களினால் ஆர்முடுக்கப்பட்டு (இது எப்படி என்றால் மாட்டு வண்டிச் சவாரியின் போது மாட்டின் இரு புறமும் சவுக்கால் விளாசுவது போல்) ஒளியலையின் வேகம் எட்டப்பட்ட பெருவெடிப்பு (big bang) நடந்தபோது ஏற்பட்ட அதே வெப்பத்தில் மோதவிட்டு சிதறடித்த போது போசன் துகள் தடங்கள் தோன்றின. பாரிய சக்தி மூலம் புரோத்தோன்கள் உடைந்தபோது அவை சிதறி அவற்றின் கதிரியக்கச் சிதைவுகள் மேலும் மேலும் சிதறி துகள்களாகி ஒன்றிணைந்தன. அதி நவீன கமராக்கள் துல்லியமாகப் படம் எடுத்தன. ஆனால் அதனது அல்பாயுசு காரணமாக பிற துகளாக மாறிவிடுவதால் மூன்று, நான்கு மடங்கு துகள்கள் பெற முடிந்தமை பரிசோதனையை 6 சிக்மா அளவிற்கு அல்ல 5 சிக்மாஅளவிற்கே திருத்தமாக ஆக்கியுள்ளது.

### புதிய மண்டலம் உருவானது

இதுவரையில் அறியப்பட்ட புலங்கள், ஈர்ப்புப் புலம், காந்தப்புலம், அணுவிலுள்ள புரோத்தோன் நியூத்திரன்களான நியூக்கிளியோன்களைப் பிணைக்கும் புலம். இப்போது இத்துகள் காரணம் புதிய புலம் அறியப்படுகிறது. இதனால் அறிவியலில் மேலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அண்டவெளிக் கொள்கையில் ஒருமுறை நடைபெற்ற பெருவெடிப்பின் போது உருவானது தான் இந்த திணிவுத்துகள்கள். அவன்பின்னர்

$E= mc2$

இதில் E சக்தி M திணிவு C ஒளி வேகம் சமன்பாட்டின்படி சக்தி திணிவாக முடியும். இதனடிப்படையில் பெருவெடிப்பின்போது அணுக்கள் எண்ணிக்கையற்ற அதியுயர்ந்த சக்திமட்ட மோதல்கள் அணுக்களை உருவாக்கிவிட; அணுவாகத் திரள முடியாத சக்தி வீச்சொலியாக பால் வழியில் (milky way) சென்று விடுகின்றன. மனுக்குலத்தின் மற்றைய வேர் தேடும் கேள்விகளான;

பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொன்றும் எதனால் ஆக்கப்பட்டது? பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பிரபஞ்சம் எவ்வாறு இருந்தது?

என்பதற்கு இனி விடை கிடைத்துவிடும்.

பெருவெடிப்பிற்குப் பிறகு நிறை இல்லாத் திணிவு நுண் துகள்கள் அண்டவெளியில் சுழன்று கொண்டிருந்தன. அவை எவ்வாறு பிரபஞ்சங்களாக, கோள்களாக இணைந்தன, பிரிந்தன, மாறின என்ற கேள்விகளுக்கு இனி ஹிக்ஸ் போசன் துகள்களின் கண்டுபிடிப்பு விடையளிக்கும் எனலாம்.

இன்னொரு விதமாகக் கூறுவதாயின் சகல துணிக்கைகளும் சக்திகளும் அவற்றிற்கிடையிலான தொடர்பாடல்களுமே பிரபஞ்சத்தை உருவாக்கின என்ற கோட்பாட்டினை விளக்கும் தரமான முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிக்கான இடைவெளியினை இது நிரப்புகின்றன. அல்லாமலும் போசன் துகள்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் பிரபஞ்ச தோற்றம் பற்றிய கொள்கையில் பெரிய ஓட்டை விழுந்திருக்கும். மொத்தத்தில் இத்துகள்கள் தான் சடத்திற்கான துணிக்கைகளை மற்றெல்லா துணிக்கைகளுக்கும் வழங்குகிறது.

### மாற்றம் ஒன்றுதான் மாற்றம் அடையாதது

80 வருடங்களுக்கு முன்னர் இரதபோட் என்பவர் கூறிய அணுமாதிரியுரு பின்னர் நீல் - போர் என்பவரது சக்திச்சொட்டெண்களால் (Quantum Theory) மாற்றி அமைக்கப்பட்டது. அணுவை மேலும் பிரிக்க முடியாது எனக் கூறினார் டோல்ரன். ஆனால் அணுப் பிளவினை ஏற்படுத்தி அணுகுண்டினை பின்நாட்களில் தயாரித்தனர்.

பெரும் சக்தியினைத் தோற்றுவிக்கும் போது நுண்ணிய துகள்கள் வடிவில் பொருள்தோன்றி அதுவே சடப்பொருளாகி பின் பிரபஞ்சத்திற்கும் உயிரினத் தோற்றத்திற்கும் அடிப்படையாகிறது. இது இன்னமும் மாற்றம் அடையலாம்.



### முடிவல்ல ஆரம்பம்

இன்னமும் அறியப்படாத, விளக்கப்படாத விடயங்கள் பல உள்ளது. அவற்றில் கரும் பொருள், கருஞ்சக்தி என்பனவும் அடங்கும். சடப்பொருளின் அடிப்படை அமைப்புக் கூறான போசன் துகள் கண்டு பிடிப்பு எமது வாழ்க்கை முறையில் உடனடியாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை. ஆனால் பல மர்ம முடிச்சுகளில் சிலவற்றையாவது இது அவிழ்த்துவிட்டுள்ளது.

கரும்பொருள் என்பது அண்ட வெளியினது கால்பங்கு திணிவைக் கொண்டு உடுக்கூட்டங்களுடன் இணைத்துள்ளது புலப்படாது உள்ளது. அதுபற்றி நாம் இன்னமும் அறியவில்லை. பிரபஞ்சம் விரிவடைந்து செல்கிறது. அதற்குக் காரணமான இயக்க விசையை வழங்கும் கருஞ்சக்தி பற்றியும் எமக்கு விளக்கமில்லை. அறியப்படாத இம் மர்மங்களிலிருந்து விடுபட நாம் இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும். நாம் எதற்காக சடப் பொருளினால் ஆக்கப்பட்டோம்? பதிலாக சடப் பொருள் அல்லாத ஒன்றினால் ஆக்கப்படவில்லை.

புவியீர்ப்பு விசை ஏன் பலம் இழந்துள்ளது. அதை மீறி ரொக்கெட்டினால் கடந்து செல்ல முடிகிறது.

விடை காணமுடியாத விடயங்களாக இவை விரிவடைந்து செல்கின்றன. ஆனாலும் பாரிய பணச்செலவில் நிறுவிய பெரு வெடிப்புக் குழாய் என்றுதான் முன்பு பிரபஞ்சத்தில் என்ன நிகழ்ந்திருக்கலாம் என்பதை ஓரளவாவது எமக்கு எட்டாத எல்லைக்கு அப்பால் நின்று காட்டித் தருகிறது. அந்தளவில் திருப்தியுடன் அடுத்த காலடியை எடுத்து வைப்போம். அந்த அளவில் இதுவரை கண்டறிந்தது ஒரு மைல்கல் என மனம்விட்டுக் கூறலாம்.

உங்கள் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ற வகையில் விளம்பரம் செய்ய




கேசரி வார வெளியீட்டின் புதுமையான இணைப்பிதழ் உங்கள் சகல தேவைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகம்

# சமூக மாற்றங்களை உள்வாங்காத தமிழ் சினிமா

தமிழாகரன்



உலகத் திரைப்படங்களுக்கும் இந்தியத் திரைப்படங்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. பொதுவாக இந்தியப் படங்களில் யதார்த்த நிலைமை புறக்கணிக்கப்பட்டு கற்பனையான புனைவுகள் மேலாதிக்கம் பெற்றுள்ளன. இதனால் திரைப்படங்கள் படைப்பின் இயல்புத் தன்மையை இழக்கின்றன. இங்கு பாட்டு, நடனம், சண்டை, நகைச் சுவை முதலானவை காட்சித் தொடர்களாக திணிக்கப்படுகின்றன.

சினிமா என்ற சொல்லின் பொருளே ''கேமராவின் கண்'' என்பது தான். சினிமா மொழி என்பது கேமரா வழியாக காட்சிரூபமாக நகர்வதுதான். அதாவது, காட்சி ஊடகமாக பரிணாமம் பெறுவது தான் சினிமா. ஆனால் தமிழ் சினிமா இன்னும் சினிமாவின் இயங்கு மொழித் தன்மைக்குள் காட்சி ஊடகமாக முழுமையாக உள்வாங்கப்படவில்லை. அல்லது அவ்வாறு உள்வாங்கப்படுவதற்கான முன் முயற்சிகள் தான் தமிழ்ச் சூழலில் நிலவுகின்றன. இதுவொரு தொடர் நிகழ்வாக கலைப்படைப்பாக்கமாக மாறுவதற்கான தடயங்களை கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை.

ஆனால் தமிழ்ப் படங்கள் வணிக ரீதியில் பெரும் வெற்றி பெற்றுவருகின்றன. தொடர்ந்து தமிழில் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கும் திரைப்படச் சட்டகம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இந்த மரபுக்குள்ளே தான் கலைஞர்கள் என்று தம்மை அடையாளப்படுத்துபவர்களும் இழுபட்டுக் கொண்டே செல்கின்றனர். இதுகுறித்து நாம் விரிவாகவும் ஆழமாகவும் பல்வேறு நிலைகளில் தளங்களில் வைத்து ஆராய வேண்டும். இதை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்துக்கொள்வோம். இருப்பினும் தமிழரின் பண்பாட்டில் சமூக உளவியலில் தமிழ்ப் படம் பெற்று வரும் செல்வாக்கை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் வெளிவந்த ''சுப்பிரமணியபுரம்'' எனும் தமிழ்ப் படத்தின் ஒரு காட்சியில் ரஜினியின் முரட்டுக்காளை படம் ரிலீஸ் ஆகும். உலகின் எந்த மூலையிலும் ஒரு திரைப்பட ரிலீஸ் இவ்வளவு அமர்க்களமாக நடந்திருக்காது. அப்படிச் சொல்லும் வகையில் அந்த நாடுகளில் ஊரே திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். சுப்பிரமணியபுரம் படக் காட்சியில் நண்பர்களுடன் ஜெய்யும் சசிக்குமாரும் முரட்டுக்காளை படம் பார்க்கச் செல்வார்கள். அங்கே ஜெய்யின் காதலியும் குடும்பத்துடன் அந்தப் படத்துக்கு வந்திருப்பார். அங்கு நடக்கும் சிறு மோதல்களுக்குப் பின் ஜெய் நண்பர்கள் வெளியேறுவார்கள். இது படக்காட்சி தான். இந்தக் காட்சியில் இடம்பெறும் விடயத்தை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.



பெரும் ஹீரோக்களின் படம் தோல்வியுற இந்த இளம் புது நடிகர்களின், புது இயக்குநர்களின் படங்கள் வெற்றி பெற்றுவருகின்றன. பெரிய பட்ஜெட் படங்கள் வீழ்ச்சியிலும் தோல்வியிலும் துவண்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் இருந்து தமிழ்ப்பட உலகைச் சிறிய பட்ஜெட் படங்கள் தான் மீட்டெடுத்து வருகின்றன. பெரிய ஹீரோக்களுக்கான ஒரு படத்தைப் பார்க்கும் பழக்கம் தமிழ் ரசிகர்களிடையே குறைந்து வருகிறது.

தமிழர்களின் பொழுது போக்குகளில் திரைப்படம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. மக்களின் வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது. கிட்டத்தட்ட 1980களிலும் கோவில்களுக்கு அடுத்தபடியாக மக்கள் அதிகம் சென்ற இடம் தியேட்டர்களாகத் தான் இருந்திருக்கி றது. அந்த அளவிற்கு மக்கள் வாழ்வில் திரைப்படம் செல்வாக்குப் பெற்றுள்ளது. வார இறுதிகளில் மக்கள் குடும்பம் குடும்பமாக தியேட்டர்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

அன்று தங்கள் அபிமான கதாநாயகனின் - ஹீரோவின் - படம் ரிலீஸ் ஆகும் நாளை தங்கள் வீட்டு விஷேடத்தை விட பெரிதாகக் கொண்டாடும் ரசிகர்கள், இளைஞர்கள் இன்றும் உள்ளார்கள். இவர்கள் தான் அநேகமாக தமிழ்சினிமாவை வாழ வைத்துக் கொண்டிருப்பவர்கள். அன்று தியேட்டர்களுக்கு குடும்பம் குடும்பமாய் வந்து கொண்டிருந்த மக்கள் கூட்டம் இன்று அப்படி வருவதில்லை. பல தியேட்டர்கள் மூடப்பட்டு வருகின்றன. பெரும் ஹீரோக்களின் படங்கள் கூட வணிக ரீதியில் தோல்வியடைகின்றன. இந்த மாற்றங்களையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்.ஜி.ஆர் X சிவாஜி தலைமுறைக்குப் பிறகு ரஜினி X கமல் தலைமுறை பேசப் பட்டது. இன்று விஜய் X அஜித் என்றும் கூறப்படுகிறது. இன்னும் எத்தனையோ இளம் ஹீரோக்கள் வந்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இன்று பெரும் நடிகர்களின் படங்கள் எதிர்பார்த்தளவு வெற்றி பெறுவதாக இல்லை. ஊடகங்கள் மூலம் தான் படத்தின் வெற்றியை செயற்கைத்தனமாக உருவாக்கவும் மற்றும் அந்த வெற்றியைப் போலியாகத்தக்கவைக்கவும் பல்வேறு நுணுக்கமான தந்திரோபாயங்கள் கையாளப்படுவதையும் பலர் சுட்டிக் காட்டுகின்றனர். தயாரிப்பாளர்களுக்கும் நடிகர்களுக்கும் மற்றும் விநியோகஸ்தர்களுக்கும் திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இடையே நடக்கும் சச்சரவுகள், மோதல்கள் இவற்றிற்குச் சாட்சி. இதற்குப் பின்னால் திரைப்படங்கள் தோல்வியுற்ற தன் விளைவுகள் தான் உள்ளன. இதற்கு ரஜினி, கமல், விஜய், அஜித் போன்றோரின் படங்களே நல்ல எடுத்துக்காட்டு. இந்த இடத்தில் நாம் வரலாற்று ரீதியில் நடந்து வந்த மாற்றங்களையும் இணைத்துப்பார்க்க வேண்டும்.

1970களின் நடுப்பகுதியில் நிறையப் படங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோல்வியைத் தழுவின. எம்.ஜி.ஆருக்கும் சிவாஜிக்கும் வயது முதிர்ந்து கிழடு தட்டின. இதனால் இவர்களது படங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தன. அப்போது அடுத்த தலைமுறை மட்டத்தில் இருந்த நடிகர்களான முத்துராமன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், சிவகுமார் போன்றவர்களின் படங்களாலும் இந்த நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. இவ்வாறு தமிழ்த் திரைப்படச் சூழல் புதிய நெருக்கடிகளை, புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க ஆரம்பித்தது.

இந்தப் போக்குகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்ட ஆய்வாளர்களது (வெங்கடேஷ், சக்கரவர்த்தி) கருத்துகள் இவ்விடத்தில் நோக்கத்தக்கது. தமிழ் நாட்டில் 1965 இலிருந்து 1972 வரையுள்ள ஏழு ஆண்டுகளில் தான் மின்சார வசதி எல்லா மூலை முடுக்குகளுக்கும் சென்றடைந்தது. இதனால் நிரந்தர தியேட்டர்கள் டூரிங் டாக்கீஸுகளின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கு மேல் பெருகியது. இதைவிட சென்னை மாநகரத்திலும் சனத்தொகை பெருகியது. இதனால் மல்டி தியேட்டர்களும் இக்காலத்தில் தான் அதிகமாக உருவாகின.

மத்திய - மாநில அரசுகள் ஏற்படுத்திய பல அபிவிருத்தித் திட்டங்களால் கல்வி அறிவும் வேலை வாய்ப்பும் கிராமப்புறங்களில் ஊடுருவின. அரை - நகர ஊர்களில் இருந்தும் பட்டிதொட்டிகளில் இருந்தும் பெண்களுக்குப் புதுவிதமான வேலைவாய்ப்புகள் ஏற்பட்டன. இதனால் முறைப்பெண் - முறைமாப்பிள்ளை மரபில் பிளவுகள் தோன்ற ஆரம்பித்தன. மற்றும் அதே காரணங்களால் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களுக்கும் நிறைய வாய்ப்புகள் அதிகரித்தன. இதனால் அவர்களும் பழைமையின் அதிகாரத்தை புத்துணர்ச்சியுடன் தாக்க கிராமப்புறங்கள் கொந்தளித்தன. இதைத்தொடர்ந்து சிந்தனைகளிலும் மனோபாவங்களிலும் நடத்தைக் கோலங்களிலும் பல்வேறு மாற்றங்கள் உருவாயின.

இந்தப் புதிய மாற்றங்களை, உணர்ச்சிகளை எந்த விதத்திலும் உள் வாங்காத அன்றைய தமிழ்ப் படங்கள் படுதோல்வியை அடைந்தன. "பி" அண்ட் "சி" என்று குறிக்கப்படும் அரை-நகர, கிராமப்புற ரசிகர்கள் தான் தமிழ் சினிமாவின் அடித்தளம். இது தெளிவாகும். இந்த உண்மையையும் ரசிகர்கள் எந்தளவிற்கு மாற்றிவிட்டார்கள் என்பதையும் தயாரிப்பாளர்களும் கதாசிரியர்களும் இயக்குநர்களும் அப்போது இதனைத் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை. இந்தப் பின்புலத்தில் தான் எம்.ஜி.ஆர், சிவாஜி உள்ளிட்டவர்களின் படங்கள் தோல்வி கண்டன. இவர்கள் வயது முதிர்ந்து விட்டவர்கள் என்பதற்கும் அப்பால் மேற்குறிப்பிட்ட சமூகக் காரணங்களும் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்தன.

இந்தத் தருணத்தில் தான் 1976 ஆம் ஆண்டு ஒரு கிராமப்புறப் பெண்ணின் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் முதன்மைப்படுத்தி தேவராஜ்-மோகன் எனும் இரட்டையர்கள் "அன்னக்கிளி" என்னும் திரைப்படத்தை முழுக்க முழுக்க ஒரு கிராமத்தில் படமாக்கி அமோக வெற்றி பெற்றனர். இதன் விளைவால் இயக்குநர்கள் கிராமத்தை நோக்கிப் படையெடுத்தனர். பெரும் ஸ்டுடியோக்களின் அதிகாரம் முடிவுக்கு வந்தது. சுயமாக இயங்கும் தயாரிப்பாளர்களின் கை ஓங்கியது. ஒரு புதிய தமிழ் சினிமா அலை இந்தக் காலத்தில் உருவானது.

இந்தக் காலகட்டத்தில் மாறிவரும் கிராமப்புற வாழ்க்கை முறைகளையும் வழக்காறுகளையும் கட்டாயம் அறிந்து வைத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. இது ஒரு வியாபார நுணுக்கமாகவும் மாறியது. சென்னை மாநகருக்கு வெளியே இருந்து வரும் திறமையாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் ஏற்பட்டன.அன்று எம்.ஜி.ஆர், சிவாஜி ஆதிக்கம் எவ்வாறு முடிந்ததோ அதே போல் இன்று ரஜினி, கமல் ஆதிக்கமும் எல்லையைத் தொட்டுவிட்டது. இவர்கள் இதனைத் தெளி வாகப் புரிந்துகொண்டமையால் தான் வருடத்திற்கு தலா ஒரு படம் என்று ஒதுங்கிக் கொள்ளும் நிலைமையும் உருவானது. இதற்குள் பல்வேறு வணிகத் தந்திரங்கள், பகற்கொள்ளைகள் உள்ளன. இது வேறு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சந்தர்ப்பத்தில் தான் பார்க்கப்பட வேண்டும்.

இன்று விஜய், அஜித் ஆதிக்கமும் உறுதியாக இல்லை. இவர்களுக்கு இணையாக சூர்யா, விக்ரம் போன்றவர்களின் ஆதிக்கமும் வலுப்பெற்றுள்ளது. தொடர்ந்து தனுஷ், சிம்பு போன்றவர்களும் ஹீரோக்களாக தம்மை நிரூபிக்கவும் தமக்கான பிம்பத்தை உருவாக்கவும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இன் றைய உலக மயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்ற பொருளாதாரக், கொள்கைகள் ஏற்படுத்திய மாற்றங்களுக்கேற்ப தமிழ்ட; திரைப்பட உலகமும் மாற்றமடையத் தொடங்கியது.

தற்போது தொலைக்காட்சியின் வீச்சு 1975இலிருந்து 1990 வரை இருந்த மாதிரியே இன்னும் இருந்திருந் தால் ரஜினிகாந்தை ஒரு முதல் அடிப்படை யாக வைத்துத்தான் தமிழ் சினிமா இயங்கியிருக்கும். குறிப்பாக 1993 இலிருந்து தனியார் சட்டர்லைட் சனல்களின் வருகையினால் சினிமா பார்வையாளர்கள் கூறு கூறாகப் பிரிந்து விட்டனர். அதுவரை தமிழ் சினிமாவின் அடித்தளமாக விளங்கிய கிராமப்புற விவசாய மக்களினதும் மற்றும் நகர்சார் தொழிலாளி, கீழ்நடுத்தரவர்க்க மக்களிலும் திருமணமான பெண்களும் வயதானவர்களும் வீட்டில் தங்கி தொலைக்காட்சி பார்க்கின்றனர். இதனால் பெண்கள் அதிகமாகப் பார்க்கும் மாற்றினிஷோ என்ற வழக்கம் மறைந்து அது இன்று சன், ராஜ், கே டிவி முதலான தொலைக்காட்சிகளில் கிளாசிக் மாற்றினியாகத் தடம் புரண்டுவிட்டது.

தற்போதைய பொருளாதார மாற்றங்களினாலும் நிறைய விலைகொடுத்து டிக்கெட் வாங்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தைச் சென்றடையும் நகர்ப்புற மல்டிப்ளெக்ஸ் படங்களும் இன்று சாத்தியமாகின்றன. இதனால் "பி" அண்ட் "சி" பார்வையாளர்களை மட்டும் சென்றடைய வேண்டிய நிலைமை குறைந்துவருகிறது.

இன்று பெரும்பாலான சினிமாப் பார்வையாளர்கள் இளைய தலை முறையைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இதனால் இந்த தலைமுறை நடிகர்களுக்குத்தான் வரவேற்பும் அதிகமாகவுள்ளது. இந்தக் காரணங்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தான் சமீபகால தமிழ்சினிமாவின் போக்குகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



Annakili [1976]

அன்னக்கிளி (1976)
சிவகுமார் - சுஜாதா

1990களின் இறுதியில் சில வித்தியாசமான படங்கள் வெளிவரத் தொடங்கின. அள்ள அள்ளக் குறையாத அட்ஷய பாத்திரமாகக் கருதப்படும் காதலை எல்லோரும் அரைத்த மாவைப்போலவே மீண்டும் மீண்டும் அரைத்துக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் கதைகளை மாறுபட்ட விதத்தில் சொல்லிய படங்கள் வெற்றி பெற்றன. வெயில்,பருத்திவீரன் போன்ற புதிய படங்கள் உருவாகின. பெரிய ஹீரோ, பெரிய இயக்குநர்,பெரிய இசையமைப்பாளர் என எந்தவிதக் கவர்ச்சிகரமான அம்சமும் இல்லாமல் படம் எடுக்கும் முயற்சிகள் தோன்றின. குறைந்த பட்ஜெட்டில் படம் எடுத்து வெற்றி பெற முடியுமென்று நிரூபிக்கும் புதிய அலை உருவானது. 2008 இல் வெளியான சுப்பிரமணியபுரம் இதற்கு நல்ல உதாரணம். இந்தப் போக்கைப் பின்பற்றி 2009இல் பல்வேறுமாறுபட்ட புதிய கதைக்களங்கள் தமிழ் சினிமாவில் காட்டப்பட்டன.

ரசிகர்கள் எப்பொழுதும் புதிய கதைகளையும் வித்தியாசமான கதைசொல்லல் முறைகளையும் தான் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு இந்தப் புதிய படங்கள் பெற்ற வரவேற்பே சாட்சி.பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் பின்னணியுடன் விளம்பரங்களை வாரித்தெளித்து வெளியாகும் படங்களை விட அடக்கமாக, அழுத்தமாக வந்த புதிய படங்கள் வெற்றி பெற்றுள்ளன. இந்தப் படங்கள் மூலம் புதிய நடிகர்கள், புதிய இசையமைப்பாளர்கள், இளம் இயக்குநர்கள், புதிய கதைகள் என்று சினிமாவிற்குள் ஒரு புதுப்படை உருவாகியுள்ளது.

பெரும் ஹீரோக்களின் படம் தோல்வியுற இந்த இளம் புது நடிகர்களின், புது இயக்குநர்களின் படங்கள் வெற்றி பெற்று வருகின்றன. பெரிய பட்ஜெட் படங்கள் வீழ்ச்சியிலும் தோல்வியிலும் துவண்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் இருந்து தமிழ்ப்பட உலகைச் சிறிய பட்ஜெட் படங்கள் தான் மீட்டெடுத்து வருகின்றன. பெரிய ஹீரோக்களுக்கான ஒரு படத்தைப் பார்க்கும் பழக்கம் தமிழ் ரசிகர்களிடையே குறைந்து வருகிறது. பெரும் கதாநாயகர்களின் படங்களுக்கு நல்ல ஓப்பனிங் கிடைத்தாலும் கூட அவை ஒரு வாரத்தைத் தாண்டி பெரிதாக ஓடுவதில்லை. ஆகவே பெரும் ஹீரோக்களை வைத்து எடுக்கும் படத்துக்கு ஐந்து புதிய படங்களை இளம் புதிய நடிகர்களை வைத்து எடுத்து விடலாம் எனும் நம்பிக்கை தற்போது பிறந்துள்ளது.

இதைவிட இன்று மாறிவரும் சமூகப் பொருளாதார அரசியல் பண்பாடு உளவியல் சார்ந்த புலங்களைப் புரிந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் உருவாகியுள்ளது. இவ்வாறு புரிந்துகொண்டு செயற்படுபவர்களால் தான் தமிழில் நல்ல சினிமாவைக் கொடுக்க முடியும். அதைத்தான் ரசிகர்களும் எதிர்பார்க்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்



## தமிழ் பேசும் மக்கள் உணர வேண்டியது

இன்று இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் நிலைப்பாடு பரிதாபம்மிக்கதாக இருந்தால்கூட எமது பரிதாபநிலை மேலும் உக்கிர நிலையை அடையாதிருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி பூதாகரமாக எழுகின்றது.

பொதுமக்களின் அவலநிலையும் அதன் காரணத்தினால் சுய நலத்துடன் அவர்கள் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஒரு புறம்: இதைத் தமக்குச் சாதகமாகப் பாவிக்கும் சுயநலமிக்க அரசியல்வாதிகள் இன்னொரு புறம்: அதேநேரத்தில் நடந்த, நடைபெறுகின்ற, நடக்கப் போகின்ற அரசியல் சம்பவங்களை ஓரளவு புரிந்து கொண்டவர்கள் தமது அறிவை, அனுபவத்தை மக்களுடன் பங்குபோட வேண்டிய ஒரு கட்டாயம் வேறொருபுறம்.

சுதந்திர இலங்கை சிங்கள மக்களுக்கே உரியது என்ற தப்பான ஒரு அபிப்பிராயத்தை சிங்களத் தலைவர்கள் படிப்படியாக சிங்கள மக்கள் மனதில் உருவாக்கிவிட்டார்கள். இப்பொழுது அந்தக் கருத்து சிங்கள பௌத்தர்களுக்கே உரியதென்ற பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. அதற்கேற்றாற்போல் அண்மைக் காலங்களில் வேண்டுமென்றே இலங்கைச் சரித்திரமும் திரித்து வெளியிடப்பட்டு வருகிறது.

இலங்கை சிங்களவர்களுக்கே உரியது என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பை சென்ற நூற்றாண்டின் அரசியல் சம்பவங்களிலும் நாம் காணலாம். தமக்குச் சாதகமாக பிரித்தானிய அரசியை சந்தித்து வந்த சேர்.பொன்னம்பலம் இராமநாதனைப் புகழ்ந்து குதிரை வண்டியில் வைத்து சிங்களத் தலைவர்கள் கொழும்புத்துறைமுகத்தில் இருந்து அவரின் வாசஸ்தலத்திற்குத் தாங்களே இழுத்துச் சென்றது சுமார் 1915 ஆம் ஆண்டளவில், ஆனால் சட்டவாக்க மன்றத்திற்கு பிரதேச அடிப்படையில் பிரதிநிதிகளை தெரிவு செய்ய 1921 ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பு இடங்கொடுத்ததும், அதாவது ஆறு வருடங்களின் பின், சிங்களத் தலைவர்களின் மனோநிலை மாறியதை அவதானிக்கலாம்.

1833ஆம் ஆண்டு வரை தனித்துவமிக்கதாக வடக்குக் கிழக்கு இருந்து வந்தமையும் அதன் பின் ஆங்கிலேயர்களின் ஒற்றை யாட்சியின் கீழ் எவ்வின மக்களும் இலங்கையில் பாதுகாப்புடன் எங்கும் இருக்கலாம் என்ற அடிப்படையில் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தமையினால் தமிழ் மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் குடியேறி வாழ்ந்து வந்தமையுஞ் சிங்களத் தலைவர்களுக்கு ஒரு மாறுபட்ட சிந்தனையைத் தூண்டியது. பிரதேச வாரியாக நாங்கள் நாட்டின் அரச ாங்கத்தைக் கைப்பற்றவிருக்கிறோம்; அதிகாரம் வெகுவிரைவில் எம் கைக்கு வந்துவிடும். அப்போது நாட்டின் பல பாகங்களிலும் வாழுந் தமிழ் மக்களை அவர்களின் பாரம்பரிய வட கிழக்குக்கு அனுப்பிவிட்டால் என்ன என்று சிந்திக்கத் தலைப்பட்டார்கள். இதனால் தான் SWRD பண்டாரநாயக்க 1926ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சமஷ்டியே சிறந்தது என்றார். அதாவது சமஷ்டி வந்தால் நாட்டின் எல்லாப் பாகத்திலும் பரந்து வாழுந் தமிழ்ப்பேசும் மக்களை அவர்களின் பாரம்பரிய இடங்களுக்கு அனுப்பிவிடலாம் சிங்களவர்கள் தமது இடங்களில் நிம்மதியாக வாழலாம் என்று நினைத்து அவ்வாறு கருத்துத் தெரிவித்தார் என்று கொள்ள இடமிருக்கிறது. அவரின் கருத்துக்கு அப்பொழுது எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எமது தமிழ் மக்களே!

உண்மையில் அந்தக் காலகட்டத்தில் வட, கிழக்கு பாரம்பரியமாகத் தமிழ்ப்பேசும் பிரதேசங்களாகவே இருந்தன என்பதைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். சட்டமன்றத் தேர்வின் போது கொழும்பில் தமிழர்களுக்கு ஒரு ஆசனந் தருவதாக சேர் பொன். அருணாசலத்துடன் எழுத்து மூல ஒப்பந்தஞ் செய்து கொண்ட E.J.சமரவிக்ரமவும், ஜேம்ஸ் பீரிஸ் அவர்களும் 1921ஆம் ஆண்டு அரசியல் யாப்பு வெளிவந்ததும் "தமிழர்களுக்கு ஏன் தனி ஆசனம்? எங்களைப் போன்று நீங்களும் வடக்கு, கிழக்கில் பாரம்பரியமாகப் பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளீர்கள் தானே!" என்றார்கள்.

ஆகவே பிரதேச அடிப்படையில் தேர்தல் நடைபெறத் தொடங்கியதும் சிங்களத் தலைவர்கள் தமிழர்களை வடக்கு கிழக்கினுள் ஒடுக்குவதையே இலக்காக வைத்துக் கொண்டார்கள். அதாவது அவர்களை நாட்டின் மற்றைய பாகங்களில் இருந்து வட கிழக்குக்கு அனுப்புவதே அவர்களின் ஆரம்ப கால இலக்காக இருந்தது. காலக்கிரமத்தில் நாட்டைவிட்டு தமிழ்ப்பேசும் மக்களை வெளியேற்றுவதையும் அவர்களின் உரித்துகளைப் பறிப்பதையுமே தமது குறிக்கோளாக ஆக்கிக்கொண்டனர்.

ஆகவே படிப்படியாக நடந்தவற்றை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். திஸ்ஸமகாராமவில் அரைவாசி நெல்விளையும் பூமிகள் தமிழர்கள் கைவசம் இருந்ததை நான் அந்தக்காலத்தில் தெரிந்து வைத்திருந்தேன். அப்போது என் தந்தையார் அரச சேவையில் தெற்கில் கடமையாற்றினார். இன்று தமிழர்களை அங்கு காண்பது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. தென் மாகாணத்தில் இருக்குந் தமிழ் இந்துக்கள் உருவாக்கிய பல நம்பிக்கைப் பொறுப்புச் சொத்துக்கள் கூடத் திரும்ப எடுக்க முடியாதபடி ஆகிவிட்டன. கேட்டால் அடிதடிக்கு வருகின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் நீங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்துள்ளீர்கள் தானே என்று கூறிக்கொண்ட சிங்களத் தலைவர்களின் இன்றைய வாரிசுகள் வேறொரு பாடலைப் பாடுகின்றனர். இது பௌத்த சிங்களவர் வாழ்ந்த பிரதேசங்கள்; தமிழர்கள் சோழர் காலத்தில் அதாவது 10 ஆம் நூற்றாண்டளவில் வந்து குடியேறியவர்களே என்றெல்லாம் கூறுகின்றார்கள். பௌத்த சிங்களவர் வாழ்ந்த பிரதேசங்களை நாங்கள் திரும்பவும் பெற வேண்டும் என்ற உத்வேகத்தில் செயற்படுகின்றார்கள். ஆனால் கெட்டித்தனத்துடன் செயற்படுகின்றார்கள். தமிழர்களின் சுயநலசிந்தையைத் தமக்குச் சாதகமாகப் பாவிக்கின்றார்கள். தமிழ் பேசும் மக்களின் வீழ்ச்சிக்குத் தமிழ் பேசும் மக்களே காரணமாக ஆகிவிட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள். கடந்த தொண்ணூறு ஆண்டு காலத்தில் பெரும்பான்மையினர் திட்டமிட்டுச் செய்து வரும் நடவடிக்கைகளைத் தமிழ்ப் பேசும் மக்கள் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை. அன்றன்றைக்கு ஏதாவது சலுகைகள், சொகுசுகள், ஆடம்பரங்கள், பதவிகள், பணப்பரிசில்கள் கிடைத்தால் அதுவே போதும் என்று எண்ணித் திட்டமிட்டுச் செயல்படும் பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் திருகுதாளங்களுக்குத் துணைபோகின்றார்கள் எம்மவர்.

இறையருளால் பெரும்பான்மையின மக்களிடையே இப்பேர்ப்பட்ட மனிதத் தன்மைக்கு மாறுபட்ட நடவடிக்கைகளைக் கண்டிக்கும் இளைய சமுதாயம் ஒன்று இன்று உருவாகி வருகின்றது. அவர்களுடன் சேர்ந்து மனிதத்துவத்தை, தமிழ் மக்கள் தனித்துவத்தைப் பேண ஆவன செய்ய வேண்டும்.

மனிதத்துவம் என்றால் என்ன, தனித்துவத்தைப் பேண அவ்வவ் இன, மொழி, மத மக்களுக்கு இருக்கும் உரித்துகள் என்ன என்பதெல்லாம் மனித உரிமை சாசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணங்களில் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இனப்படுகொலை,பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரை இருந்த இடம் தெரியாமல் தம்முடன் சேர்த்துத் திட்டமிட்டு ஒன்றிணைப்பது போன்றவற்றைப் பற்றி மேற்படி ஆவணங்கள் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளன. அவ்வாறு நடக்காதிருக்க அரசாங்கங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை எவை என்பதைக் குறிப்பிட்டுள்ளன. எமது அறிவு மேம்பட மேம்படத் தான் ஒரு நாட்டில் நடப்பவை எத்துணை அசாதாரண செயல்கள் என்பது புரியவரும். அவற்றை சிங்கள மக்களுந் தமிழ் மக்களும் அறியத் தொடங்கினால்த் தான் அரசியல் வாதிகள் சுயநல காரியங்களுக்காக மக்கள் மனதில் விதைக்கும் நச்சுக்களைக் களைந்தெடுக்க முடியும்.

இவற்றை எல்லாந் தமிழ்ப் பேசும் மக்கள் உணரத் தொடங்கினால்த் தான் தமிழர்களின் ஒற்றுமையினால் நாங்கள் நன்மைபெற முடியும். யதார்த்தம் பற்றி முரண்பட்ட கருத்து வேறுபாடுகள் எம்முள் இருந்தால் ஒற்றுமை என்பது எட்டாத கனியாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# SRI VIJAYAS
## Saree Centre

129, 2nd Cross Street, Colombo 11.
Tel: 011 2324388, 011 4879929
Cel: 077 3813978, 072 6888000

BRANCHES

188/3d, Aslam Trade Centre,
1st Floor, Keyzer Street, Colombo 11
Tel: 011 4602195, 077 8502154

172/31, Commercial Plaza,
Keyzer Street, Colombo 11.
Tel: 011 4879929, 077 3813978


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

# பழசுக்கு புதுசு (Season 02)

உங்கள் பழைய நகைகளை அதிகூடிய விலைக்கு எவ்வித கழிவும் இன்றி புதிய நகைகளாக மாற்றிக்கொள்ளுங்கள்.

- 19kt, 20kt, 21kt, நகைகளை 22kt பாவித்த நகைப்பரிமாற்றல் விலையிலும்.
- 22kt பாவித்த நகைகளை 22kt விற்பனை விலையிலும் மாற்றிக்கொள்ளலாம்.
- புதிய நகைகளுக்கு சேதாரம் 8% முதல் 10% வரை.
- வாங்கும் நகைகளின் பெறுமதிக்கேற்ப பெறுமதிமிக்க பரிசுகள்.
- இச்சலுகை நகை பரிமாற்றலுக்கு மட்டுமே.
- ஜுலை 16 முதல் ஆகஸ்ட் 15-2012 வரை மட்டுமே இச்சலுகை செல்லுபடியாகும்.

இன்றே எமது காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்.

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

SINCE 1987

SUWARNAA GOLD HOUSE(PVT)LTD

144, Galle Road, Wellawatte. Colombo 06.

Tel: 2501789, 2362919 Tele/ Fax:- 2362919

www.sghgold.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd, at No.185, Grandpass road, Colombo -14, Sri Lanka.